# ஒரு சாண் வயிறு

க- 220 204

3579

3579

PRESENTED BY:
V. PR. PL. V.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

கி. வா. ஜகந்நாதன்

கலைமகள் வெளியீடு

3579

# ஒரு சாண் வயிறு

(கட்டுரைகள்)

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

கி. வா. ஜகந்நாதன்

ENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர்

உரிமை பதிவு] டிஸம்பர், 1943 [விலை ரூ. 1-4-0

PRINTED AT
THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS,
TIRUBHUVANAM, TIRUVADAMARUDUR POST.

## குறிப்பு

இது ஒரு கதம்பம்; பலவகையான கட்டுரைகள், பலவகை மனநிலையில் எழுதியவை இதில் உள்ளன. ஆனாலும் மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்: முதல் ஏழும் ஓர் இனம்; அதன் பின் நான்கும் ஒருவகை; இறுதியில் ஐந்தும் ஒரு சாதி.

அவ்வப்போது பத்திரிகைகளில் வெளி வந்தவை இதில் உள்ளன. இருவகை வியாபாரிகள், தங்கம் தங்கந்தான், இரண்டு காட்சிகள், எழுத்தாளர் என்பன பத்திரிகைகளில் வெளி வராதவை. பத்திரிகைகளில் கட்டுரைகளை வெளியிட்ட ஆசிரியர்கள்பால் நன்றி பாராட்டுவது என் கடமை.

—கி. வா. ஜ.

## உள்ளே

பக்கம்

1. ஒரு சாண் வயிறு (சண்டமாருதம், தீபாவளி மலர்) 1
2. சிவமயம் (தினமணி, ஆண்டு மலர்) ... 7
3. தைக்கதிர் (பாரதமணி) ... 13
4. தங்கம் தங்கந்தான் ... 16
5. இருவகை வியாபாரிகள் ... 22
6. மயில்மேல் வந்த வாழ்வு (திருப்புகழமிர்தம்) ... 29
7. இரண்டு காட்சிகள் ... 33
8. யார்தான் அறியக்கூடும்? (கலைமகள்) ... 41
9. வரவேயில்லை (லோகோபகாரி, பாரதி மலர்) ... 47
10. பூரண தரிசனம் (சுதேசமித்திரன் வாரப்பதிப்பு) 54
11. கூத்து வாத்தியார் ( ,, ) ... 59
12. இலக்கியக் கட்டுரை (பாரதமணி) ... 65
13. எழுத்தாளர் ... 70
14. பற்றற்ற பட்டணம் (பாரததேவி, தீபாவளி இதழ்)74
15. பழம் புஸ்தகங்கள் (சுதேசமித்திரன் வாரப்பதிப்பு) 79
16. பழக்கத்துக்கு அடிமை ( ,, ) ... 85

பாகனேரி

# ஒரு சாண் வயிறு

## 1

அவருக்குத் திடீரென்று ஒரு புதையல் கிடைத்தது. அதிருஷ்டம் இருந்தால் உமியிலும் பொன் கிடைக்கும் என்பார்கள். அவருக்கு அப்படித்தான் எதிர் பாராதபடி பெரும்பொருள் கிடைத்தது. புதுச் செல்வம் படைத்து அந்தச் செல்வத்துக்கு ஏற்றபடி அவர் மாடமாளிகை கட்டிக்கொண்டார். இடையில் கந்தை இருந்ததுபோய் வெண்துகிலும் ஒண்பட்டும் ஏறின; திருநாட்களில் பீதாம்பரமும் அழகு செய்தது. காதிலே கடுக்கன், கையிலே மோதிரம், சங்கிலி—இப்படியெல்லாம் திருமகள் பல பல உருவங்களிலே, அவருடைய திருமேனியிலே குலுங்கி நடம்புரிந்து விளங்கி இனிதிருந்தாள்.

அவருக்குச் சிநேகிதர்கள், மந்திரிமார் சூழ்ந்தனர். புலவர்கள் புகழ்பாட முன் வந்தனர். உலாவும், கோவையும் புதிய பிரபுவின் புகழைப் பாடச் சிருஷ்டிக்கப் பட்டன. பாதாதி கேச வருணனை பாடினர் புலவர். காவியங்கூடப் பாடச் சிலர் தொடங்கினர். அறுபது நாழிகையும் 'போற்றி போற்றி' என்று சொல்லிக் கும்பிடும் தொண்டர் பலர் அவரைச் சுற்றிச் சூழ்ந்தனர்.

இடைவிடாது அந்தப் புதுச்செல்வருக்கு வேண்டிய பணிவிடையைச் செய்து பலர் நெருங்கினர். ஒருவரைவிட மற்றொருவர் தம்முள் முந்திக்கொண்டு பலபடியாக அந்தப் புதுப் பணக்காரர் திருமேனிக்குத் தொண்டு புரிந்து வழிப்பட்டனர்.

இவ்வளவு பேர்களும் சேர்ந்து அந்தத் திருமேனியி னிடம் வைத்திருக்கும் அன்புதான் எத்தகையது! இந்தக் காட்சிகளை யெல்லாம் பார்த்தார் புலவர். முனைப் பாடியார் என்பது அவர் பெயர். புதுச் செல்வந் தோன்றிய அந்தப் பெருமானல்லவா அங்கே தலைமை பூண்டிருக்கிறார்? ஆனால் புலவர் கண்ணில் அவர் உருவம் சிறிதுகூடப் படவில்லை. அவருக்குப் புலப்பட்ட பெரு மானே வேறு.

'அடடா! இவர்களுக்கு ஏது இவ்வளவு சிரத்தை வந்து விட்டது! இந்த ஒரு மனிதனிடத்தில் இவ்வளவு பேரும் கொண்ட காதல் உண்மையாக இருந்தால் அந்தக் காதலை ஜீரணித்துக்கொள்ள இவனுக்குத் தெரியுமா?' என்று யோசித்தார். அந்த ஏழைகள் உண்மையில் யாருடைய வேலையைச் செய்கிறார்களென்பதை ஊன்றிக் கவனித்தார். 'அட சே! இந்தப் பாழுந் தூராக் குழியைத் தூர்ப்பதற்காகவல்லவா மனிதன் மனிதனைக் கும்பிடுகிறான்? தெய்வத்தைக்கூடப் பெரும்பாலோர் கும் பிடுவது இதற்குத்தானே? பார்ப்பவர்களுக்கு, இவர்கள் இந்தப் புதிய செல்வரைப் பாராட்டிப் பாடிப் போற்றி வழிபடுவதுபோலத் தோன்றினாலும், தம்முடைய சொந்த வயிற்றுச் சாமிக்குரிய வழிபாட்டைத்தானே இவர்கள் மறைமுகமாகச் செய்து வருகிறார்கள்?' என்று நினைத்த போது அவருக்கு ஆச்சரியம் கரை கொள்ளவில்லை.

'ஐயா! வயிற்றுப் பெருமானே! நீ செய்கிற வேலைக ளல்லவா இவையெல்லாம்! உன் பூசையைத்தானே இவர்கள் இந்த உருவத்திலே செய்கிறார்கள்? இந்த ஒரு பணக்காரன்தானா? உலகத்திலே, யார் யார் புதுப்பணக் காரரோ, யார் யார் புதுப்பண மோகத்திலே புகழையும் ஆடம்பரத்தையும் விரும்பி மனிதக் கூட்டத்தைக் கூட்டி வைக்க முயலுகிறார்களோ, அந்தப் பணக்காரர்களெல்லாம் பெருமை பெறுவது யாராலே? உன்னாலேயல்லவோ? அவர்களுடைய பெருமையாசையைப் பயன்படுத்திக்

கொள்ளும் பட்டினிப் பட்டாளவீரர்கள், அந்தச் செல்வர்களின் புகழையா பாடுகிருர்கள்? உன் பெருமையைத் தான் பாடுகிருர்கள்' என்று வியந்து வியந்து எண்ணமிட்டார். அவர் புலவர்; ஆகவே அவர் எண்ணம் பாட்டாக எழுந்தது.

போற்றியே போற்றியே என்று புதுச்சேல்வம்
தோற்றியார் கண்ணேல்லாந் தோண்டேபோல்—ஆற்றப்
பயிற்றிப் பயிற்றிப் பலவுரைப்ப தேல்லாம்
வயிற்றுப் பேருமான் போருட்டு.

## 2

இதென்ன தடியோசை கேட்கிறது? 'லொட்டு லொட்'டென்று, தரையில் தடியை ஊன்றிக்கொண்டு வருகிருளே கிழவி, இவள் யார்? ஔவையாரல்லவா? பழைய தமிழ்ப் பாட்டியாயிற்றே!

"பாட்டி வாருங்கள். உட்காருங்கள். ஏது இவ்வளவு தூரம்?"

"அதோ பாரப்பா."

பார்த்தேன். யாரோ ஒரு வெள்ளை வேட்டிக்காரனை அழுக்கு வேட்டி அணிந்தவன், "சாமீ, ஸேவிக்கிறேன்!" என்று சொல்லிப் பணிகிருன்.

"இங்கே பார்!" என்று மற்ருெரு பக்கம் காட்டினுள். அங்கே, வீட்டுப் பெரிய மனிதர் திண்ணையில் உட்கார்ந்திருக்கிருர். "போடா, தடிப் பயலே, வேலை வெட்டி செய்து பிழையடா" என்று அவர் உறுமினுலும் அதைப் பொருட் படுத்தாமல் அவரிடம் சென்று இரந்து கொண்டே நிற்கிருன் ஒரு பிச்சைக்காரன்.

"இந்தா, இந்தப் பக்கம் பார்: அவன் சொல்வதைக் காது கொடுத்துக் கேள்!"

கேட்டேன். "ஐயோ, என் மகன் அக்கரைச் சீமைக்குப் போனான். போக வேண்டாமென்று அழுதேன். கடல் கடந்து போய்ச் சம்பாதித்துக் குவிக்கவேண்டிய அவசியமில்லை யென்றேன். பாவி மகன் கேட்டானா? போகத்தான் போவேனென்று போய் விட்டான். மூன்று வருஷமாகியும் ஒரு செய்தியும் தெரியவில்லை. ஐயா ஜோஸ்யரே! என் மகனை எப்போது பார்ப்பேன்?" என்று அங்கலாய்த்துக் கொண்டு ஒரு பெண்மணி கேட்கிறதைச் செவி மடுத்தேன்.

அதற்குள்ளே பாட்டி மற்றொரு காட்சியைக் காட்டினாள். அங்கே யெல்லாம் போலி வேஷம். அண்டையிலே சிறிதாவது அன்பின்றிப் பேசி ஏளனம் செய்து விட்டு, முகத்துக்கு நேரே, 'உங்களைப் போலத் தர்மதுரையுண்டோ' என்று துதிபுரியும் மனிதர்களின் கூழைக் கும்பிடைப் பார்த்தேன். 'இந்தப் பாவனை எதற்காக?' என்று நானே வெறுத்தேன்.

பாட்டி மகாமாயக்காரி. திடீரென்று என் கண்ணுக்கு ஒரு சிங்காதனத்தைத் தோன்றச் செய்து விட்டாளே! இந்திர ஜாலமா? அந்தச் சிங்காதனத்தின் மேலே, ஓரரசன் வீற்றிருக்கின்றான். அவன் பாராண்டு புகழ் பெற்றதை அவன் செங்கோல் காட்டுகிறது. அவனுக்கு முன்னே தாசிகள் பாட்டு இசைக்கிறார்கள். புலவரும் பாட்டு இசைக்கிறார்கள்.

இவ்வளவு காட்சிகளும் திடீரென்று மறைந்து விட்டன. பாட்டி என்னைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். புன்னகைக்கு ஏற்ற பல்லில்லை. ஆனாலும் அதில் அழகிருந்தது.

"அப்பா, இவ்வளவு பார்த்தாயே: இவ்வளவு விதமான காட்சிகளில் இவ்வளவு பேரும் எத்தனை விதமான தொழில் புரிந்தார்கள்! அவர்கள் செய்யும் காரியத்தில் ஒவ்வொரு நிமிஷத்திலும் அணு அணுவாக

அவர்களுடைய சக்தி செலவாகி வந்தது; அவர்களுடைய வாழ்நாள் போய்க்கொண்டு வந்தது. இந்தப் பாழான உடம்பே, கொஞ்சங் கொஞ்சமாகத் தேய்ந்து போய்க் கொண் டிருந்தது. இவ்வளவும் எதற்காகத் தெரியுமா?" என்று கேட்டாள் பாட்டி.

"உலக நியதி" என்றேன்.

"உலகமாவது! நியதியாவது! எல்லாம் வயிற்றுக் கொடுமையப்பா! அதற்கு நாழி அரிசி வேளைக்குக் கிடைப்பதற்காக. அன்னமயம், பிராணமயம். அந்த நாழி அரிசிக்காக இப்படி ஆடுகிறார்கள். இப்படி ஆடுவதற்கு நாழி அரிசியின் பலமேதான் காரணம். ஆகவே முன் உள்ளே சென்ற நாழி அரிசி பின்வரும் மற்றொரு நாழி அரிசிக்காக மனிதனை இவ்வளவு பாடுபடுத்தி வைக்கிறது!"

"பாட்டி, நீங்கள் சொல்வது உண்மைதானா? தோட்டி முதல் தொண்டைமான் வரையில் உள்ள யாவர் உழைப்பையும் அரிசியால் அளவிட்டு விட்டீர்களே!"

"ஆம் அப்பா! அதுதான் உண்மை" என்று சொல்லிய பாட்டி, பாட்டுப் பாட ஆரம்பித்து விட்டாள்.

சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்.

## 3

வெறும் பரதேசியென்று எண்ணினேன். அவன் அபாரமான வேதாந்தக் கருத்துக்களை அள்ளிக் கொட்டலானான். தன்னுடைய பிச்சையோட்டைத் தட்டித் தாளம் போட்டுக் கொண்டே பாடும்போது அவன் தன்னை மறந்தான்; நான் என்னை மறந்தேன். "ஞானத் தங்கமே!" என்று யாரையோ அழைத்துப் பாடத் தொடங்கினான்.

ஆடுவதும் பாடுவதும் ஆளடிமை செய்கிறதும்
ஓடுவதும் தேடுவதும்—தங்கமே
ஒருசாண் வயிற்றுக்கடி !—ஞானத் தங்கமே
ஒரு சாண் வயிற்றுக்கடி !

என்ன அழகான பாட்டு! துள்ளிக் குதித்தேன், உள்ளக் களிப்பால். இதற்கு அர்த்தம் வேணுமா? மனிதர்கள் ஆடுகிருர்கள். பாடுகிருர்கள்; ஓடுகிருர்கள்; தேடுகிருர்கள். எல்லாம் எதற்கு? ஒரு சாண் வயிற்றுக்கு.

வெள்ளைச் சொல்லிலே கொள்ளைக் கருத்தை வைத்துப் பரதேசி என் உள்ள ஏட்டிலே வரைந்து விட்டான். முன்னைப்பாடியார் பாடின பாட்டும் மறந்தது. ஔவைப் பாட்டி சொன்ன பாட்டும் ருசிக்கவில்லை; ஞானத் தங்கமே! ஒரு சாண் வயிற்றுக்கு—எது? "ஆடுவதும் பாடுவதும் ஆள் அடிமைசெய்கிறதும் ஓடுவதும் தேடுவதும்—தங்கமே—ஒரு சாண் வயிற்றுக்கடி" என்று திருப்பித் திருப்பிப் பாடத் தோன்றுகிறது.

# சிவமயம்

## 1

என்னுடைய நண்பராகிய செட்டியார் ஒருவர் செட்டி நாட்டில் இருக்கிறார். ஒரு சமயம் அவருக்குக் கடிதம் எழுதத் தொடங்கினேன். என் அன்பு முழுவதையும் வெளிப்படுத்தி மெருகிட்டு எழுதினேன். மூன்று பக்கங்கள் நிறைய எழுதிக் கையெழுத்திட்டேன். அவ்வளவு உத்ஸாகத்தோடு எழுதிய கடிதத்தை மீண்டும் படித்துப் பார்க்க எண்ணி முதற்பக்கத்தைத் திருப்பினேன். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது!

அந்தக் கடிதத்தை என் நண்பர் பிரித்து முதற் பக்கத்தின் தலைப்பைப் பார்ப்பார்; உடனே பேசாமல் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிடுவார். காரணம் என்ன தெரியுமா? நான் அதில் பிள்ளையார் சுழியும், சிவமயமும் போடாமல் எழுதிவிட்டேன்.

ஆகவே, செட்டியாரவர்களின் பார்வை கடிதம் முழுவதும் செல்லவேண்டுமென்ற சிரத்தையால் கடிதத்தில் பிள்ளையார் சுழியும் சிவமயமுமாகிய தலை யலங்காரங்கள் போட்டேன். கடிதம் எழுதுவதற்கு முன்பே போடவேண்டியவற்றை, எழுதிக் கையெழுத்திட்ட பின்புதான் போட்டேன். 'இதை நண்பர் இனிமேல் வாசிப்பதில் தடையொன்றும் இல்லை' என்ற திருப்தியோடு அதைத் தபாலில் சேர்த்துவிட்டேன்.

கடவுள் வணக்கம் சொல்லிக் கூட்டத்தைத் தொடங்குவது, காப்புச் செய்யுள் பாடிக் காவியத்தை ஆரம்பிப்பது முதலிய விஷயங்களெல்லாம் ஓரே நோக்

கத்தைக் கொண்டவை. கடவுள் காப்பாற்றவேண்டு மென்று நம்பிக்கையோடு சங்கற்பம் செய்து கொள்வதில் யாரும் குறைந்தவர்கள் அல்ல.

எல்லா நூல்களுக்கும் காப்புச் செய்யுட்கள் இருக் கின்றன. சிலவற்றிற்கு இல்லையென்று சொல்லலாம்; அது சிறுபான்மையேயாம். 'புறநானூறு' என்ற தமிழ் நூலுக்கு ஒரு காப்பு இருக்கிறது. அந்தக் காப்பையே 'சிவமயம்' என்று சொல்லிவிடலாம். அது, நான் எப் படிக் கடிதத்தையெல்லாம் எழுதி முடித்துவிட்டுப் பிறகு மேலே பிள்ளையார் சுழி சகிதம் எழுதினேனே, அந்தச் சிவமயத்தைப் போன்றதே.

இரண்டாயிரம் வருஷங்கள் என்றால் சரித்திரத்தில் ஒரு பெரிய கால அளவுதான். அந்த இரண்டாயிர வருஷ காலமாக உலகமே தலைகீழாக மாறியிருக்கிறது. எத்தனையோ ராஜ வம்சங்கள் தோன்றி வளர்ந்து அழிந்து விட்டன. எத்தனையோ நாகரிகங்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. அவ்வளவு பிரளயத் திலும் புறநானூற்றின் காப்பு, சிவமய விலாஸம், அன் றைக்குப் போட்டபடியே இன்றும் இருக்கிறது.

அந்தப் பழைய காலத்திலே தமிழுக்கு ஏதோ ஆபத்து வந்து விட்டதென்றே தோற்றுகிறது. பரம் பரையாக வந்த கவிஞர்களுடைய பாடல்கள் கர்ணபரம் பரையாக உலவிவந்தன. அவற்றில் எவ்வளவோ அழிந் தன. அங்கங்கே சில சில செய்யுட்கள் மனிதர்களின் உள்ளத்தைப் பற்றிக்கொண்டு கிடந்தன. அவற்றை அந்த நிலையிலே விட்டுவைத்தால், நாளடைவில் எல்லாம் போய்விட்டால் என்ன செய்வது என்ற ஏக்கம் புலவர் களுக்கும் புரவலர்களுக்கும் உண்டாயிற்று.

அரசர்கள் உத்தரவிட்டார்கள்; அக்காலத்தில் இருந்த சில புலவர்கள், அங்கங்கே வழங்கிவந்த பாட்டுக் களைச் சேகரித்தார்கள். எல்லாவற்றையும் தொகுத்து வகைப்படுத்த ஆரம்பித்தார்கள். அந்தக் காரியத்தில்

உதவிசெய்த புலவர்கள் இயற்றிய செய்யுட்களையும் சேர்த்துக்கொண்டார்கள்.

பாட்டு, பொருள் முதலிய விஷயங்களுக்கு ஏற்றபடி அந்தப் பாடல்களையெல்லாம் வகைப்படுத்தினார்கள். பொருளாலும் அளவு முதலியவற்றாலும் ஒற்றுமை யுள்ள பாடல்களைத் தனியே தொகுத்து, தனித்தனிப் புஸ்தகங்களாக வைத்தார்கள். இவ்வாறு வகைப்படுத் திய நூல்களே இக்காலத்தில் 'கடைச்சங்க நூல்கள்' என்று சொல்லப்படுகின்றன.

கடைச்சங்கத்து நூல்களில் மூன்று பிரிவுகள் உண்டு. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்ற பெயரோடு அவை இருக்கின்றன. பத்துப் பாட்டு என்பது பத்து நீண்ட அகவல்களை உடைய தொகுதி. பதினெண் கீழ்க்கணக்கென்பது பதினெட்டுப் புஸ்தகங்களைக் கொண்ட கோவை. அவற்றிற் பெரும் பாலானவை நீதிநூல்களே. மிகப் புகழ்பெற்ற திருக் குறள் அந்தப் பதினெட்டு நூல்களுள் ஒன்று.

எட்டுத்தொகை யென்னும் நூல் வரிசையில் எட்டுப் புஸ்தகங்கள் இருக்கின்றன. காதலைப்பற்றியும், வீரத் தைப்பற்றியும் உள்ள பாடல்களின் தொகை அவை. புறநானூறென்பது நானூறு பாட்டுக்கள் உள்ள நூல். நேர்மையான காதலைக் கூறுவன ஒழிந்த மற்ற வகையான செய்யுட்களைப் புறப்பொருள் அமைந்த பாடல்கள் என்பது தமிழர் மரபு. புறநானூற்றுப் பாடல்கள் அந்த வகையைச் சேர்ந்தனவே. பெரும்பாலும் போர்ச் செய்திகளை உடைய பாடல்களே அதில் அதிகம்.

இந்த எட்டு நூல்களும் தொகுக்கப்பட்ட பின்பு, ஒவ்வொன்றுக்கும் கடவுள் வாழ்த்து, சேர்க்கப்பட்டது. சில நூல்களுக்குச் சிவபெருமான் துதி முன்னால் சேர்க்கப்பட்டது. சிலவற்றில் திருமால் துதியை வைத்தார்கள். ஒன்றில் முருகக் கடவுள் வணக்கம் இணைத்தார்கள். இப்படி, புஸ்தக முழுவதும் தொகுக்கப்

பெற்றபிறகு 'சிவமயம்' என்ற விலாஸம் போடப் பட்ட நூலில் ஒன்று புறநானூறு. நான் கடிதம் எழுதி முடித்தபிறகு, தலைப்பில் 'சிவமயம்' போட்டது போலவே இதுவும் தோற்றுகிறது அல்லவா?

புறநானூற்றுக்குச் 'சிவமயம்' போட்டவர்-காப்புச் செய்யுள் பாடியவர்-பெருந்தேவனார் என்னும் புலவர். அவரே நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அக நானூறு என்னும் நூல்களிலும் விலாஸம் போட்டவர்.

பெருந்தேவன் என்பதை மகாதேவன் என்று இந்தக் காலத்துப் பாஷையிலே சொல்லலாம். அந்த மகா தேவனார் சிவபெருமானாகிய மகாதேவனாரை ஸ்தோத்திரம் செய்த செய்யுள்தான் புறநானூறு என்னும் சங்க நூலின் முதற்பாட்டு.

## 2

திருமுடியிலே அணிந்த சிறிய மாலையாகிய கண்ணி, கொன்றை மலரால் தொடுக்கப்பட்டது. கார்காலத்திலே தண்ணென மலர்ந்த அதனைக் காணும்போதே, கண் குளிர்கின்றது. அந்தத் திவ்ய ரூபத்தின் திருமார்பிலும் அதே கொன்றை மாலை! ஆனால் அது பெரியது; அதற்குத் தார் என்று பெயர். இப்படிக் கார் நறுங்கொன்றை மலராகிய கண்ணியைத் திருமுடியிலும் தாரைத் திரு மார்பிலும் அணிந்துகொண்டு மகாதேவன் காட்சி தரு கின்றான்.

இந்தத் திவ்யமங்கள மூர்த்தியைத் தாங்கிக்கொண்டு நிற்கிறது ரிஷபம். அது தூய்மைக்கு இருப்பிடம்; மாசு மறுவற்ற சுத்த வெண்ணிற முடையது. அதென்ன? மேலே எம்பிரான் கொடியிலும் அந்த ரிஷபந்தான். மேலும் கீழும் ஒரே நிலை!

பொன்னிறமாகிய கொன்றையின் காட்சிக்கும் தூய வெள்ளிய ரிஷபத்தின் தரிசனத்துக்கும் இடையே

ஒரு சிறிய கறுப்பு. அது அப்பெருமான் திருக்கழுத்தி லல்லவோ இருக்கிறது? அந்தக் கறுப்பும் அவருக்கு அழகாகத்தான் இருக்கிறது. அதுமட்டுமா? 'அக்கறுப்பு' தான் மறுவாயும் வானோரை உய்யக் கொண்டமையின், வேதகோஷங்கள் செய்யும் அந்தணர்கள் அதைப் பாராட்டு கிறார்கள்; நீலகண்டத்துக்குத் தனியே அர்ச்சனை செய்கி றார்கள்.

இந்த உருவத்தில் ஒரு பாகம் பெண்ணுருவம்! எப்பொழுதும் இறைவன் இந்தப்பெண்பாகத்தை வெளிக் காட்டிக்கொண் டிருப்பதில்லையாம். சிலகாலம் அதைத் தனக்குள்ளே அடக்கி மறைத்துவிடுவதும் உண்டாம்.

'சந்திர சூடாய நம:' என்ற சப்தம் காதில் விழு கிறது. ஆஹா! என்ன அழகு! இறைவன் இளம் பிறை யைத் தன் நெற்றிக்கு நேரே அணிந்து கொண்டிருக் கிறான். அதன் ஜோதி அவனது நெற்றிக்கே ஒரு சோபை யைத் தருகிறது. 'அது வெறும் பிறை தானே? தேய்ந்து மாய்ந்து பாம்புக்குப் பயந்து ஓடிப்போவதுதானே?' என்று யாரும் நினைப்பதில்லை. சிவபெருமான் திருமுடி யின்மேல் ஏறி வீற்றிருப்பதற்கு அது எவ்வளவு பாக்கியம் பண்ணியிருக்க வேண்டும்! அதனால்தான் பதினெண் கணங்களும் அதனைப் பாராட்டுகிறார்கள்; வணங்கு கிறார்கள்.

அவனது சடாபாரம் ஒரு பெரிய தீர்த்த பாத்திரம். அதற்குள் சர்வலோக ஜீவர்களுக்கும் பாதுகாப்பாகிய கங்காதேவி நுழைந்துகொண் டிருக்கின்றாள். கொன் றையும், சந்திரனும், கங்கையும் வாசம் செய்யும் திருமுடியே அடிக்கடி காட்சி அளிக்கின்றது. அந்தச் சடையாண்டி பெரிய தபஸ்வி; அருந்தவத்தோன்.

* * * *

இந்தக் காட்சியைப் பெருந்தேவனார் காண்கிறார். அதைச் செய்யுளிலே அமைத்துப் புறநானூற்றின்

*கடவுள் வாழ்த்தாகக் கோத்து உலகிற்கு உதவியிருக்கிறார்.*

கண்ணி கார்நறுங் கொன்றை, காமர்
வண்ண மார்பில் தாருங் கொன்றை,
ஊர்தி வால்வெள் ளேறே, சிறந்த
சீர்திகழ் கொடியும் அவ்வே றென்ப;
கறைமிட றணியலும் அணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் வாழ்த்தவும் படுமே;
பெண்ணுரு வொறுதிறன் ஆகின் றவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினுங் கரக்கும்;
பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே;
எல்லா உயிர்க்கும் ஏம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே.

3579

# தைக் கதிர்

இன்று தை மாதம் பிறக்கிறது. தமிழ் நாடு முழுவதும் 'பால் பொங்கிற்றா?' என்று கேட்டு மகிழ்வெய்தும் தினம் இது. இந்தப் பொங்கற் புது நாள் நிலமகள் தந்த பயனைப் பாராட்டுந் திருநாள்; உழவன் உழுது அறுவடை செய்ததை உண்ணும் திருநாள். இன்று புதுப் பானையிலே புதிய தானியத்தால் ஆக்கிய பொங்கலைப் புதிதாக உண்ணும் புதுநாள்.

புதிதுண்ணலென்று பொங்கல் விருந்தைக் கூறுவது தமிழர் சம்பிரதாயம். நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்ட உழவன் தெய்வத்துக்கு நிவேதனம் செய்த அன்னத்தை உண்கின்றான். இந்த வழக்கம் தமிழ் நாட்டில் இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்புகூட இருந்தது.

* * * *

மலை நாட்டிலே குறவர்கள் மரங்களை வெட்டி எரித்துவிட்டு அங்கே தினை விதைத்துப் பயிரிடுவார்கள். குறமகளிர் அத்தினைப்புனத்தைக் காவல் புரிவார்கள். தினைப்பயிர் வளரும்போது அவர்களுடைய காதற் பயிரும் வளர்ந்து வரும்.

தினையறுத்த பின்பு அதன் முதற்கதிரைக் குறவர்கள் தங்கள் தெய்வத்திற்குச் சமர்ப்பிப்பார்கள். புதிய பொருள்களையெல்லாம் முருகனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுப் பின்பே தாங்கள் நுகர்வார்கள். இவ்வாறு புதியதை முதலில் உண்ணும் முருகக் கடவுளை ஒரு

புலவர் 'கடியுண் கடவுள்' என்று கூறுகின்றார். கடி யென்பது புதுமையைக் குறிக்கும் சொல்.

* * * *

தலைவி நாயகனது வரவை எதிர் நோக்கி நோக்கித் தளருகின்றாள். அவள் தினைப்புனங் காத்துவந்த காலத்திலெல்லாம் அவனை இடைவிடாது சந்தித்துக் காதற் பயிரை வளர்த்து வந்தாள். தினைக்கதிர் விளைந்தது, அவள் காதலுக்குக் கேடாக முடிந்தது. தினைக் கொல்லை யிலே அவளுக்கு வேலை யில்லை. அவள் வீட்டிற்கு வந்துவிட்டாள். அவனும் முன்போல எளிதிலே வந்து பழக முடியவில்லை. 'தெரியாமலல்லவா நாம் இந்தச் சங்கடத்திலே மாட்டிக் கொண்டோம்!' என்று அவள் மிகவும் வருந்துகிறாள். ஆனாலும் உயிரோடு தொடர் புடைய நட்பல்லவா அது? அதை மாற்ற முடியுமா?

தைப் பொங்கல்: குறிஞ்சி நிலத்தார் முருகனை வழிபட்டுப் பொங்கல் போடுகின்றனர். அறுத்த தினைக் கதிரைக் கொத்தாகக் கட்டிக் கோவிலிலே தொங்கவிடு கின்றார்கள். பொன்போல் நிறம்பெற்ற அக்கதிர்களை முருகன் சந்நிதியிலே வைத்து, "அப்பா, சாமீ, நீ தந்த செல்வம் இது. எங்களுக்கு வயிறு நிறைய நீ தந்த பொன் போன்ற தினை இது. உனக்கே முதலில் அர்ப்பணம்!" என்று வணங்குகிறார்கள்.

முருகன் சந்நிதானத்திலே வளரும் மயில் அந்தத் தினைக் கதிரைக் கொத்துகிறது. அதைத் தன் அலகிற் பிடித்து உதறுகின்றது; அதன் உடம்பெல்லாம் ஒரே நடுக்கம். அந்தப் பறவைக்கு அது ஸ்வபாவம். ஆனால் குறவர்கள் அதற்கு வேறு பொருள் கற்பிக்கிறார்கள்: 'இந்த மயில், சாமியின் நிவேதனத்தைக் கொத்துகின் றது. அதனால் இது நடுங்குகிறது. பாவம்! மற்றக் கதிரென்று நினைத்து உண்ணத் தொடங்கி இப்போது அவஸ்தைப் படுகிறது. தெய்வத்துக்கு அபசாரம்

செய்தால் இப்படித்தான்' என்று அவர்கள் பேசிக்கொள் கிறார்கள்.

ஒரு மூலையில் நிற்கும் தலைவியும் அவளுடைய தோழியும் இதைக் கேட்கிறார்கள். தலைவியின் முகம் சிறிதே வாடுகிறது. தன் நிலையையும் அந்த மயிலின் நிலையையும் ஒன்றாக நினைக்கிறாள்: 'ஆம்! நானும் இப்படித்தான், தெரியாமல் ஒரு காரியத்தைச் செய்துவிட்டுத் திண்டாடி நடுங்குகின்றேன்' என்று புழுங்குகிறாள். தோழிக்கும் சொல்கிறாள். அந்த மலைநாட்டுத் தலைவனுடைய காதல் ஒரு காலத்தில் இன்பத்துக்குக் காரணமாக இருந்தது. இப்போது நீர்மலி கண்ணோடு சதா அவனை நினைக்கும் நிலைக்குக்கொண்டு வந்து விட்டது என்று அவள் நைந்து சாம்புகிறாள். மற்றவர்களுக்கெல்லாம் இன்பத்தை உண்டாக்கும் தைக் கதிர் அவளுக்குத் துன்பத்தை உண்டாக்கக் காரணமாயிற்று.

* * * *

இந்தக் காட்சியை வருணிக்கும் செய்யுளொன்று பெரும் புலவராகிய நக்கீரரால் இயற்றப்பெற்றது. அது **குறுந்தொகை** என்னும் சங்க நூலின் 105-ஆம் பாடலாக அமைந்திருக்கின்றது.

குறிஞ்சி நிலத்தார் கடியுண் கடவுளாகக் குமரக் கடவுளை வழிபட்டனர். இன்று நாம் தைப் பொங்கலை மகர சங்கராந்தி யென்னும் திருநாளாக்கிச் சச்யாதிபதியாகிய சந்திரனையும், உத்தராயணத் தொடக்கம் செய்யும் சூரியனையும் வழிபடுகின்றோம்.

கதிர் என்பது தானியக் கதிருக்கும் பெயர்; சூரியனுக்கும் பெயர். தைக்கதிரால் தைக்கதிரோனை வணங்கும் பொங்கற் புதுநாள் தமிழகத்திற் புதுமை யின்பத்தை விளைப்பதாகுக!

# இருவகை வியாபாரிகள்

'வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியாமல் கொடு' என்று ஏசுநாதர் சொல்லியிருக்கிறார். கொடுப்பதை விளம்பரப் படுத்த வேண்டாம், கொடையைப் பெற்றவன் திருப்தியடைந்தால் போதுமென்பது அவர் கருத்தாக இருக்கலாம். தமிழர்கள் கொடையிலே சிறந்தவர்கள். செத்துப் போவதைத்தான் துன்பத்துள் துன்பமென்று மனிதர்கள் நினைக்கிறார்கள். அதைக் காட்டிலும் துன்பம் ஒன்று உண்டென்று தமிழர் நினைத்தார்கள். இன்னாததாகிய அந்தத் துன்பத்தைக் கொண்டு அளவிட்டால் செத்துப்போவது எவ்வளவோ மேலாக, இனிதாகத் தோற்றும். தமிழர் வாழ்க்கை விதியை வரையறுக்கும் திருவள்ளுவர் இதை அழகாகச் சொல்லியிருக்கிறார்:

சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.

ஒருவர் கேட்டதைக் கொடுக்க முடியாவிட்டால் மரணத் துன்பம், இன்பமாக ஏற்றுக் கொள்வதற்கு உரியதென்று சொல்லுகிறார். ஈதல் அவ்வளவு சிறந்தது; இன்பமானது. "ஈத்துவக்கும் இன்பம்" என்று வள்ளுவர் அந்த இன்பத்தைச் சொல்கிறார். கொடுத்ததை வாங்கிக் கொள்பவனது இன்பம் இருக்கவே இருக்கிறது; அதைக் கொடுக்கும்போது ஈபவனுடைய உள்ளத்திலே இன்பம் சுரக்குமானால் அதுதான் உண்மையான ஈகை.

பழங்காலத்துத் தமிழர், ஈகையைப்பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் அவர்களுடைய உள்ளத்தின் உயர்வைக் காட்டுகின்றன.

ஆய் அண்டிரன் என்பவன் தமிழ்நாட்டில் ஒரு வள்ளல். அவனது புகழ் சங்க நூல்களில் அங்கங்கே காணப்படும். அவன் 'வரையாது ஈயும்' ஈகையுடையவன். புலவர்களும் பாணர்களும் கூத்தர்களும் விறலியரும் அவனுடைய ஈகைபால் பயன் பெற்றுக் கவிதை பொழிந் தும், பாட்டுப் பாடியும், ஆடல் நவின்றும் இன்புற்றனர்.

ஒரு நாள் வேற்று நாட்டிலிருந்து சில பெரியோர்கள் ஆயைக் காணவேண்டி வந்தனர். மோசியார் என்ற புலவர், ஆய் என்ற அவ்வுபகாரியோடு பெரும்பாலும் இருப்பவர். அவனைப் பற்றிப் பல பாடல்களைப் பாடியவர். அவர் பாடிய சிறப்பை எண்ணி 'மோசி பாடிய ஆய்' என்று வேறொரு புலவர் ஆயைக் குறிப்பிடுகிறார்.

வேற்று நாட்டுப் பெரியவர்கள் ஆயின் பெருமையை எல்லாம் கேள்வியுற்றவர்கள்; நேரிலும் வந்து அவனுடைய பெருவண்மையைக் கண்டு மகிழ்ந்தார்கள். பின்பு மோசியாருடன் தனியே பேசிக்கொண் டிருந்த போது அந்த வள்ளலின் வண்மையை வியந்து பாராட்டி னார்கள். "இந்த வள்ளல் இவ்வுலகத்தைத் தன் புகழால் நிரப்பியதோடு விண்ணுலகத்தையும் நிரப்பிவிட்டான். இவன் செய்யும் அறச் செயல்கள் இவனுக்கு மிகச் சிறந்த நற்கதியை உண்டாக்கும்" என்று சொல்லி மகிழ்ந்தார்கள்.

"அப்படியன்று" என்று இடை மறித்தார் மோசியார்; "நீங்கள் சொல்லுவது மற்றவர்களுக்குப் பொருத்தமாக இருக்கலாம். இந்த வள்ளலுடைய இயல்பு வேறுபட்டது. இவனுக்கு வியாபார நோக்கம் சிறிதும் இல்லை" என்றார்.

அயல் நாட்டாருக்கு விஷயம் விளங்கவில்லை. "வியாபார நோக்கம் இவனுக்கு உண்டென்று யார் சொன்னார்கள்?" என்று கேட்டார்கள்.

"வியாபாரம் என்பது என்ன? ஒரு பொருளைக் கொடுத்து மற்றொன்றை வாங்கிக் கொள்வதுதானே?

மனிதர்கள் இந்த உலகத்துப் பண்டங்களைக் கொடுத்து இவ்வுலகத்துப் பொருளையே வாங்கிக்கொள்கிருர்கள். சில சமயங்களில் முதலில் பண்டங்களைக் கொடுத்துக் கணக்கெழுதிக் கொள்கிருர்கள். பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையால் அப்படி வாணிகம் செய்கிருர்கள். ஆய் அந்த வகையினரைச் சார்ந்தவன் அல்லன்."

அவர்களுக்கு இன்னும் விளங்க வில்லை.

"ஆம்; இம்மையிற் செய்தது, மறுமைக்கு ஆகும். பிறகு அதன் விலையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணும் தர்ம வியாபாரி, அறவிலை வாணிகன், என்று ஆயை நினைக்கக் கூடாது."

"அதிலே என்ன தவறு?"

"அவன் விஷயத்தில் அது தவறுதான். அவன் கைவண்மை வாணிகமன்று. சான்ருேர் பிறரும் சென்ற நெறி என்ற மரபு பற்றி அவ்வண்மை உண்டாகியிருக் கிறது. ஈகையை அவன் கடமையென்று கொண்டிருக்கிருன். மறுமையிலே பெறும் சுகத்தை விலையாக வுடைய வியாபாரப் பண்டமென்று கருதவில்லை."

மோசியார் இதை ஒரு பாட்டாகவே சொல்லி யிருக் கிருர்.

"இம்மைச் செய்தது மறுமைக் காம் எனும்
அறவிலை வாணிகன் ஆய்அலன்; பிறரும்
சான்ருேர் சென்ற நெறியென
ஆங்குப்பட் டன்றவன் கைவண் மையே."

எவ்வளவு உயர்வான கருத்து! ஈகை ஈகைக்காகவே என்ற கொள்கை தமிழரின் சான்ருண்மையை எவ்வளவு சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. 'அறவிலை வாணிகன்' என்ற அரிய தொடர் இந்தப் பாட்டின் உயிர் நிலையாக விளங்குகிறது.

தர்ம வியாபாரிகளை உலகத்தில் ஆயிரக் கணக்காகப் பார்க்கிறோம்; தர்மத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு வியாபாரம் நடத்தும் அவர்களைத் தமிழர்கள் விரும்ப மாட்டார்கள், பழங்காலத்தில்.

* * * *

இது கிடக்கட்டும். ஈகையைப் பெற வருகிறார்களே, அவர்களிலே கூட வாணிகர்கள் இருக்கிறார்கள். வியாபாரநோக்கத்தோடு தர்மம் செய்வதைத் தமிழர்கள் விரும்பாதது போலவே, வியாபார நோக்கத்தோடு பரிசில் பெறுவதையும் விரும்புவதில்லை. தான் பிச்சையாகப் பெற்ற அரிசியையெல்லாம் கூட்டி விற்று வியாபாரம் செய்கிறார்களே, அந்த வியாபாரிகளைச் சொல்லவில்லை, இங்கே.

அதியமான் நெடுமானஞ்சி என்ற ஒரு சிற்றரசனிடம் பெருஞ்சித்திரனாரென்ற புலவர் போனார். அதியமான் ஒரு வள்ளல். தமிழ்ச் சுவை தெரிந்தவன். புலவர் போனபோது அவன் ஏதோ தவிர்க்க முடியாத காரியத்தில் ஈடுபட்டிருந்தான். புலவரை நேரிலே கண்டு பேசுவதற்கு நேரம் இல்லை. வந்த புலவரை அசட்டை செய்யக் கூடாதென்று எண்ணி அவருக்குரிய ஸம்மானமாகச் சில பொருள்களை ஓர் அதிகாரி மூலம் அனுப்பி வைத்தான். புலவருக்கு முன்பு அவ்வதிகாரி அவற்றைக் கொணர்ந்து வைத்து, "ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றான்.

புலவருக்குக் கடுஞ்சினம் மூண்டது. 'பிச்சைக்காரனுக்குப் பிச்சை போட்டு அனுப்புவது போல இவற்றை அனுப்பிப் போய்விட்டு வரும்படி சொல்லுகிறான் போலிருக்கிறது!' என்று எண்ணி உள்ளம் கொதித்தார். 'நமக்கு வேண்டியது இந்தப் பரிசில் என்று எப்படித்தான் இவன் நிச்சயம் பண்ணினானோ! பணத்துக்காக வருவதும், வந்த வரையில் லாபமென்று பெற்றுக்கொண்டு போவதும் வியாபார இயல்பு அல்லவா?

நாம் என்ன, வியாபார நோக்கத்தோடேயா இங்கே வந்தோம்!' என்று யோசனையில் ஆழ்ந்தார்.

"மன்னர் இவற்றை ஏற்றுக் கொள்ளச் சொன்னார்" என்று அதிகாரி ஞாபகப்படுத்தினர்.

பெருஞ்சித்திரனார் பெருமூச்சு விட்டார்; ஒரு கனைப்புக் கனைத்துக்கொண்டார்; பேசத் தொடங்கினார்:

"எவ்வளவோ குன்றுகளையும் மலைகளையும் கடந்து வந்திருக்கிறேன். அதியமானைப் பார்த்துப் பரிசில் வாங்கிக்கொண்டு போகலாமென்றுதான் வந்தேன். வந்து இங்கே நிற்கிறேன். ஆ! உங்கள் மன்னனுக்குத்தான் என்ன அன்பு! என்பால் விருப்பங் கொண்டு, 'இதைப் பெற்றுக் கொண்டு அப்படியே போய் வருக' என்று சொல்லி யனுப்பியிருக்கிறானே! என் இயல்பை அவன் எப்படி அறிந்து கொண்டானோ! சரி; அவனிடம் இதைப் போய்த் தெரிவிப்பீராக! அவன் என்னைப் பாராமல் அனுப்பிவைத்த இந்தப் பொருளைப் பெற்றுக் கொண்டு போவதற்கு நான் ஒரு வியாபாரி அல்ல; வாணிகப் பரிசிலன் அல்லேன். உபசாரம் செய்து அன்போடு பேசித் தகுதி தெரிந்து பரிசு வழங்கினால், அது தினையளவானாலும் இனிது. இதை உங்கள் மன்னன் தெரிந்து கொள்ளட்டும்."

புலவர் உள்ளத்திலிருந்து வீரம், வார்த்தைகளாகச் சொரிந்தது.

குன்றும் மலையும் பலபின் ஒழிய
வந்தனென் பரிசில் காண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி, 'ஈதுகொண்
டீங்கனஞ் செல்க தான்'என என்னை
யாங்கறிந் தனனோ, தாங்கருங் காவலன்!
காணு தீத்த இப்பொருட்கு யானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் ; பேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே

என்ற புறநானூற்றுப் பாடல் இந்தச் செய்தியைத் தெரிவிக்கிறது. 'வாணிகப் பரிசிலன்' என்ற தொடர் இதன் உயிர்நிலை. 'அறவிலை வாணிகன்' என்ற தொடரைப் போல இதுவும் தமிழரின் உள்ளத்துயர்வை எடுத்துக் காட்டுகிறது. அறம் செய்வோரும் பரிசிலரும், ஈதலையும் பரிசில் பெறுதலையும் வெறும் வியாபாரம் ஆக்கக் கூடாதென்று பழந் தமிழர் எண்ணினர். அவர்கள் கொள்கையின்படி பார்த்தால் இருவகையினரிலும் வாணிகரே இக் காலத்தில் இருக்கிறார்களென்றுதான் நமக்குத் தெரிய வருகிறது.

# தங்கம் தங்கந்தான்

தங்கம் ஒரு நாள் பிரமதேவனுடைய சந்நிதியிலே கண்ணீர் விட்டுக்கொண்டே வந்து நின்றது. "என்ன செய்தி? எங்கே வந்தாய்? அமரலோகம் முழுவதும் உன்னுடைய பொலிவுதான். அந்தப் பொன்னுலகத்திலிருந்து என்ன செய்தி சொல்ல வந்திருக்கிறாய்?" என்று சிருஷ்டிகர்த்தா கேட்டார்.

"ஸ்வாமி, நான் பொன்னுலகத்திலிருப்பவன் அல்ல; மண்ணுலகத்தில், வியவஸ்தை கெட்ட பூவுலகத்தில், இருப்பவன். என்னை எதற்காகப் படைக்கவேண்டுமென்று கேட்டு முறையிட்டுக்கொள்ள வந்திருக்கிறேன்" என்றது பொன்.

பிரமதேவர் திடுக்கிட்டார்; "இதென்ன ஆச்சரியமாக இருக்கிறதே! பொன்னுலகத்தைக் காட்டிலும் மண்ணுலகத்தில்தானே உனக்கு மகிமை அதிகம்? நாங்கள் மூன்று மூர்த்திகள் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் செய்கிறோமென்று புராணங்களில் எழுதி வைத்துப் படித்துக் கொண்டிருக்கிறார்கள், உலகமக்கள். உண்மையில் நீயும் உன் கூட்டாளிகளான மண்ணும் பெண்ணுமாகிய மூவர்களுமே உலகை இயக்கும் திரிமூர்த்திகள்!" என்றார்.

"போதும் ஸ்வாமி, பரிகாசம்! என் குறைக்குச் செவி சாய்த்தருளத் திருவுள்ளம் உண்டானால் விண்ணப்பித்துக் கொள்கிறேன். இல்லாவிட்டால் பேசாமல் வந்த வழியே திரும்பிவிடுகிறேன்."

"என்ன விஷயமென்று சொல்லாமலே, சிணுங்குகிறாயே!"

"சொல்கிறேன். சற்றுப் பொறுமையாகக் கேட்டருள வேண்டுகிறேன். பூலோகத்தில் என் மானமே போய்விட்டது. இனிமேல் அங்கே உயிர் வாழ்வதென்பது நடவாத காரியம். நான் படும் அவஸ்தை போதும் ஸ்வாமி, போதும்!"

நான்முகனார் எட்டுக் காதுகளையும் நெளித்துக் கொண்டார்.

"நான் சொல்வதில் சிறிதும் மிகை இல்லை. நான் படும்பாடு சொல்லத்தரமன்று."

"தட்டான் உன்னைச் சரியாக வைத்துக்கொள்ள வில்லையோ?"

"அவன் என்னைப்படுத்தும் பாட்டைத்தான் இங்கே முறையிட வந்திருக்கிறேனே."

"என்ன செய்கிறான்? உன்னைத் தழலில் உருக்குகிறானே; அது உனக்குப் பொறுக்கவில்லையா? உன்னிடத்திலுள்ள மாசுமறுக்களெல்லாம் போகத்தானே அப்படிச் செய்கிறான்?"

"பகவானே, அது வாஸ்தவந்தான். தட்டான் என்னை உருக்கட்டும். நான் பக்திமானது உள்ளம் போலே உருகி உருகிச் சுத்தமாகிறேன். அக்கினிப் பிரவேசத்தினால் என் உடம்பு தூய்மை பெறுகிறதென்பதை மறக்க மாட்டேன். வாழ்க்கையில் விரதத் தழலிலே உடலை ஒறுக்கும் தவத்தினரின் நிலை அதுவென்று பெருமிதமாக இருக்கிறேன்."

"அப்படியானால் தட்டான் பட்டடைக் கல்லில் வைத்து அடிக்கிறானே, அது உனக்கு வெறுப்பாக இருக்கிறதா?"

"அதையும் நான் வெறுக்கவில்லை. எனக்குப் புதிய உருவம் கொடுக்க அந்தக் காரியம் எவ்வளவு உபயோகமாக இருக்கிறது! பெரிய சுத்தியால் அடிக்கிறான், சிறு

சுத்தியால் மெல்ல மெல்லத் தட்டுகிறான்; ஒரு பக்கமாக நறுக்கித் தேய்த்துத் தட்டையாக அடிக்கிறான்; எல்லாவற்றையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறேன். கல்லோடும் மண்ணோடும் கலந்து என்னைப் படைத்து நிலமகளின் வயிற்றிலே தாங்கள் வைத்துவிட்டீர்கள். எனக்குச் செவிலித்தாயைப் போல வாய்த்திருக்கிறான் தட்டான். அடித்து அமுதூட்டிக் குழந்தையின் மேனி வளர்ச்சிக்கு அடியிடும் தாயைப்போல அவன் என்னைத் தட்டுகிறான், அடிக்கிறான். அதில் பிழை என்ன ஸ்வாமி?"

"அப்படியானால், உன்னைக் கம்பியாகத் திரட்டிப் பெரிய துவாரத்திலிருந்து சிறிய துவாரம் வரைக்கும் புகும்படி செலுத்துகிறானே, அது பிடிக்கவில்லையா?"

"ஆஹா! அதுதான் எனக்கு உயர்ந்த கௌரவம். அவன் அப்படிச் செய்யாவிட்டால் உலகம் என்னைத் 'தங்கக்கம்பி' என்று உபமானமாகச் சொல்லுமா? உடல் கூனிக் குறுகி நுழைந்தாலும், பண்பட்ட உருவத்தில் நான் வெளிவருகிறேன். என் உடம்பில் இருந்த கடுமை போய் மென்மை வருகிறது. எல்லாவித ஆபரணங்களுக்கும் இணைப்பூட்டும் உருவத்தில் நான் சர்வாந்தரியாமியாக இருக்கிறேன். ஆகையால் அது எனக்கு மிகவும் பிரியமான செய்கை!"

"உலகத்தார் கண்ட கண்ட அங்கங்களிலெல்லாம் உன்னைத் தூக்கிக்கொண்டு திரிகிறார்களே, அதில் உனக்கு விருப்பம் இல்லையா?"

"என்ன ஸ்வாமி, தட்டானை விட்டுவிட்டு உலக அரங்குக்கு வந்துவிட்டீர்களே! தட்டானிடத்தில் நான் படும் அவமானத்தைத்தானே சொல்ல வந்தேன்!"

பிரம்மாவுக்கு விஷயம் விளங்கவில்லை.

"சரி, சொல்லிவிடுகிறேன். என்னைப் படைத்த போதே உலகத்தில் உயர்ந்த பொருளாகப் படைத்தீர்கள்.

எல்லாப் பொருளும் என்னைக்கொண்டு மனிதர்கள் அடையும்படி செய்துவிட்டீர்கள். இவ்வளவு சிறப்பைப் பிறப்பிலிருந்தே நான் அடைந்திருக்கிறேன். தெய்வங்களின் திருமேனிகளை நான் அலங்கரிக்கிறேன். அவர்கள் திருவடியிலே சிலம்பாகக் கிடந்து இன்புறுகிறேன்; திருமுடியிலே கிரீடமாகக் கவித்து யாரும் பெறுப் பேறு பெறுகிறேன். இப்படியிருந்தும் அந்தத் தட்டான் என்ன செய்கிறான், தெரியுமா?"

சிறிது நேரம் பொன்னழகு பேசாமல் இருந்தது. அதன் உள்ளத்திலே துக்கம் பொங்கியிருக்கவேண்டும்.

"சொல்லத் தோன்றவில்லை. போதும் என் வாழ்வு! என்னை அழித்துவிடுங்கள்" என்று புலம்பத் தொடங்கியது.

"விஷயத்தைச் சொல்லாமல் பிரலாபிக்கிறாயே; கிடக்கிறது சொல்" என்று பிரமதேவர் ஆறுதலான தொனியில் கேட்டார்.

"சொல்லுகிறேன். சொல்லிவிட்டுப் போகத்தானே வந்தேன்? மிகவும் உயர்ந்த பொருளாகிய என்னை, மகா துச்சமான குன்றிமணியை வைத்து, அந்த மகா பாபி, தட்டான் நிறுக்கிறான். அவன் என்னை உருக்கட்டும்; அடிக்கட்டும், அராவட்டும், கம்பியாக்கட்டும்; சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறேன். அந்தக் குன்றிமணியோடு வைத்து என்னை நிறுக்கிறானே, அப்பொழுது தான் என் அங்கமெலாம் குலைகிறது; மானம் போகிறது! நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாமா என்று தோன்றுகிறது. தேவரீருடைய சிருஷ்டியிலே எனக்கு நாக்கைத் தான் படைக்கவில்லையே! படைத்த பெருமானிடத்திலே வந்து அழலாமென்றுதான் வந்தேன்."

"மாற்ற முடியாத காரியம்!" என்ற இடிபோன்ற பேச்சுத்தான் பிரமதேவர் திருவாக்கிலே பிறந்தது.

கதிகலங்கிப்போய்ச் சத்திய லோகத்திலிருந்து தங்கம் கீழே விழுந்தது; மண்ணின் ஆழத்திலே பதிந்து கொண்டது.

* * * *

கதைதான் இது. ஆனாலும் மிகவும் அருமையான உண்மை யொன்று இதில் அடங்கியிருக்கிறது. அறிவுக்கும் அறியாமைக்கும், இருளுக்கும் ஒளிக்கும் தனித்தனி இடங்கள் உண்டு. அந்த இடங்களிலே அவற்றை வைத்துப் பார்க்கவேண்டும். இதைச் சங்க காலத்துப் புலவர்கள் 'வரிசை யறிதல்' என்று சொல்வார்கள். அவர்களுக்கு விலையுயர்ந்த பரிசில்கள் தரவேண்டுவது அவசியமன்று. அன்புடன் உபசரித்துத் தகுதியறிந்து அந்தப் பரிசிலைத் தந்தால் அவர் உள்ளம் குளிர்ந்துவிடும்.

"தினையனைத் தாயினும் இனிது அவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே" (புறநா. 208)

என்று ஒரு புலவர் சொல்கிறார்.

புலவர்கள், 'நம்முடைய தகுதியை அறியும் உபகாரிகள் யார் இருக்கிறார்கள்?' என்று ஆராய்ந்து தேடிச் செல்வார்கள். "வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை" என்று தம்முடைய வாழ்க்கையின் லக்ஷ்யத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

* * * *

கபிலர் என்னும் புலவர்பெருமான் வரிசை யறியும் இந்தச் சிறந்த இயல்பை ஒரு பாட்டினால் ஒரு வள்ளலுக்கு அறிவுறுத்துகிறார். மலையமான் திருமுடிக்காரி என்ற வள்ளலைப் பார்த்து அவர் சொல்லுகிறார்: "பெரிய வண்மையையுடைய தோன்றலே, உலகத்தில் ஈகை அரிது என்று சொல்லுவார்கள் சொல்லட்டும். அது எளிதென்றே

நான் சொல்லுகிறேன். ஒரு திசையில் இருக்கும் ஓர் உபகாரியை நோக்கி நாலு திசைகளிலிருந்தும் பலபல பரிசிலர் வருவர். கொடுப்பவன் இருந்தால் வாங்குபவர் களுக்கு என்ன குறை? அவர்களுக்குப் பரிசில் கொடுத்து அனுப்புவது போதுமென்று நினைத்தால் ஈதல் எளிது; ஆனால், அப்படிக் கொடுப்பது மாத்திரம் அறிவுடைமை யாகாது. பொருளும் ஈகையும் உலகத்தில் பலரிடம் இருக்கின்றன. உன்னிடம் பரிசிலர்கள் வருகிறார்கள்; புலவர்கள் வருகிறார்கள். புலவர்களிடத்தில் ஜாக்கிரதை யாக நடந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு நீ வழங்கும் பொருள் பெரிதன்று. தரமறிந்து வழங்க வேண்டும். வரிசை யறிதல் பெரிதும் அரிது. எல்லோ ரையும் ஒரு தட்டிலே வைத்து நிறுத்துப் பார்ப்பது பெரிய பிழை. வரிசையறியும் வல்லமையுடையா னென்ற பெயர் உனக்கு வேண்டும். அசட்டு மந்திரிக்கும் தலையாட்டி, புலவனுக்கும் தலையாட்டினால் உன்னை அறிவுடை யுலகம் இகழும். புலவர் ஒரு பொருளாக நினைக்கமாட்டார்கள். ஆகவே வரிசையறிய உனக்குத் தெரிந்தால் எல்லோரையும் ஒரு தரமாகப் பார்க்கும் பொது நோக்கைத் தவிர்வாயாக!"

இந்த உபதேசம் பாடலாக வெளியாயிற்று.

ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்;
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்;
ஈதல் எளிதே; மாவண் டோன்றல்!
அதுநற் கறிந்தனை யாயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.

[உள்ளி - நினைத்து. நற்கு - நன்கு] (புறநா. 121)

கபிலர் கூறிய பொருள் நிரம்பிய மொழி இது. சாதியாலும் தொழிலாலும் வேற்றுமையில்லாத ஜன சமுதாயத்திலேகூட அறிவாலே வேற்றுமை இருக்கத்தான்

இருக்கும். அறிவை வணங்கத் தெரியாத மனிதன் மிருகப் பிராயத்திலே இருப்பவன்தான்.

தங்கம் குறைகூறிய அதே விஷயத்தை நல்லிசைச் சான்றோராகிய கபிலர் அறிவுரையாகச் சொல்லியிருக்கிறார். வரிசை அறிதல் பெரிதும் அரிது! தங்கம் எப்போதும் தங்கந்தான். அது முதல் வரிசையில் இருக்க வேண்டியதே.

# மயில்மேல் வந்த வாழ்வு

கண்ணைக் குளிர்விக்கும் மேகங்கள் நீலவானத்தின்மீது கப்பிக்கொண்டு பரந்து விரிந்திருந்தால் மன்னுயிர்களுக்கு எத்தனை ஆனந்தம் உண்டாகிறது! மனிதர்களுக்கு உணவை உண்டாக்கித் தானும் உணவாகும் நீரைப் பொழியும் அம் மேகங்கள் அவர்களுடைய உள்ளத்தையும் குளிர்விக்கின்றன. நிலமகள் மேனி குளிர்கிறது. பச்சைப் பசும்புல் நிலப்பரப்பெல்லாம் குபீரென்று முளைத்தபோது புவிமகள் மழையின் ஸ்பரிசத்தால் புளகாங்கிதம் அடைந்துவிட்டவளைப்போல அழகு பொலிந்து நிற்கிறாள். அது மட்டுமா? மரங்களெல்லாம் தளிர்த்துப் பூத்து வானளாவ நிமிர்ந்து ஆடையாபரணம் புனைந்த மணமகளிர்களைப் போல நிற்கின்றன. இயற்கைத் தேவியின் புதுப் பொலிவிலே ஒரு தனி அழகு குலுங்குகிறது. அந்த அழகிய தோற்றத்துக்கு மூல காரணம் எது? மழை! மழையைப் பொழிவது மேகம்.

மேகத்தின் இடியைக் கேட்டு நாகங்களெல்லாம் அஞ்சுகின்றன. ஆனால் காட்டிலே உள்ள மயில் தன் தோகையை விரித்து ஆனந்தக் கூத்தாடுகிறது; உலகத்துக்கே உயிரை அளிக்கும் மேகத்தைக் கண்டு அதன் உள்ளம் குளிர்கிறது போலும்! உலகம் உவக்கும் களிப்பிலே அதற்கு ஒரு குதூகலம். மகாத்மாக்கள் உலகம் களித்தால் தாமும் களிப்பார்களாம். மயிலும் ஒரு மகாத்மா. ஆம்! மழைநீரிலே தன் தோகையெல்லாம் நனைந்து குளிரால் நடுங்கும் நிலை வருமென்று அது பயப்படுகிறதா? இல்லை. மேகத்தைக் கண்டால் இந்த விரிந்த உலகத்துக்கே தனிப் பிரதிநிதிபோல நின்று வரவேற்கிறது; வாழ்த்துகிறது; களிநடம் புரிகிறது.

இப்படி உலகங் களிக்கும் பருவத்திலே தன் பசுந் தோகையைப் பரப்பி ஆடும் மயிலைக் காணும்பொழுது அழகெல்லாம் திரண்டு ஒருருவமாகி வந்து நிற்பது போலத் தோன்றுகிறது. அதன் தோகை அழகுக் குவியல்; அத்தோகையிலே பளபளக்கும் கண்கள் அழகுத் துணுக்குகள்; அந்தப் பீலியில் உள்ள ஒவ்வொரு மயிர்க் காலும் அழகின் ரேகை. மயிலின் வளைந்த கழுத்திலே கலையழகு பொங்குகிறது. அதன் சாய்ந்த பார்வையிலே மோகன எழில் கொஞ்சுகிறது. ஒற்றைக்காலைத் தூக்கி நடனம் புரிகையில் அழகு துளும்பிக் கூத்தாடுவதுபோல் இருக்கிறது.

இவ்வாறு அழகுக் கோலமாக நிற்கும் மயிலுக்கு மேல், அந்தப் பச்சைப் பசு நிறப் பரப்பினிடையே செக்கச் செவேலென்று பேரழகு வீற்றிருக்கிறது. பவளம் போன்ற சிவப்பு உருவம், அந்தப் பச்சைப் பரப்பிலே பதித்து வைத்த செம்பவளத்திரள், நம் உயிரையே மயக்கி நிற்கிறது. அழகு! அழகு!! அழகு!!! அந்தச் செம் மேனிச் சுடர் வெறும் அழகாக மாத்திரம் இல்லை; அதில் அழகு இருக்கிறது; ஒளியிருக்கிறது; தண்மையும் இருக் கிறது.

நீலமயிலின்மேல் இந்த அழகொளி வரும்போது நாம் குதூகலிக்கிறோம்; முதலில் மயிலைக் கண்டாலே நமக்கு நாகத்தின் பயம் இல்லை; விஷம் நம்மை அணுகாதென்ற தைரியம் வருகிறது. இனி அமுத வாழ்வு வாழலாம் என்ற நம்பிக்கை பிறக்கிறது. வெறிச்சென்று கிடக்கும் கானல் நீரையும், விகார உருவங்களையும் கண்டு காந்திப் போயிருந்த கண்களுக்கு அந்த நீலமயில் ஒரு குளிர்ச் சியை உண்டாக்குகிறது. கருத்திலே ஓர் ஆனந்தம் ஊறு கிறது. அதோடு நின்றுவிடவில்லை; மேலும் மேலும் நாம் இன்பக் களியாட்டை யடைகிறோம். அதன் நடுவிலே தோற்றும் செவ்வொளிப் பிழம்பு நம் கண்ணிலுள்ள இருட் படலத்தைப் போக்கிவிடுகிறது; வெம்மை நீங்கிய

கண்கள் மயக்கமும் நீங்கி ஒளிப்பார்வை பெறுகிறது. இன்பமும் அறிவும் அமைய நாம் வாழ்வு பெறும் அறிகுறிகள் உண்டாகின்றன. அந்தச் செவ்வொளியின் முன் நம்மைப் பார்க்கிறோம்; நம் சிறுமை தெரிகிறது. அடடா! அந்த ஒளியோடு கலந்து மறைந்துபோக வேண்டும் என்ற நினைவு வருகிறது. நீலங்கொள் மேகத்தைப் போன்ற மயிலின்மீது அந்தச் செங்கதிர்மேனிப் பொருள் தோற்றுகையில் விளைந்த இந்த ஞானோதயத்தை அருணகிரிநாதர் பாடுகிறார்.

* * * *

மெல்லியலாகிய பேதைப்பெண் ஒருத்தி நீலமயில் வாகனக் கடவுளைக் கண்டு ஆசைப்படுகிறாளாம்; ஆத்மா முருகக்கடவுளாகிய பரமாத்மாவைக் கண்டு பேரின்பத்தை அடைய விரும்பும் காதலை அந்தமாதிரி ஜோடனை செய்து காட்டுகிறார் அந்த மெய்ஞ்ஞானி.

நீலங்கோள் மேகத்தின் மயின்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கோண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கோண்டு வேலைப்பண் டேறிவோனே
வீரங்கோள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் போருளோனே
நானேன்று மார்தட்டும் பேருமாளே.

'நீலநிறம் பொருந்திய மேகத்தைப் போன்ற மயிலின் மீது நீ வந்த கோலத்தைக் கண்டு காதல்கொண்ட இந்தச் சிறு பெண்ணுக்கு உன்னுடைய திருமார்பிலே விளங்கும் மாலையைத் தந்தருள்வாய்' என்று தோழி ஆண்டவனை வேண்டுவதாக அமைந்திருக்கிறது இந்தப் பாட்டு.

'உலகின் மாயா விகார வெம்மையைப் போக்கி ஆணவமலமென்னும் விஷத்தைப் பறக்கச் செய்து அருளாகிய தோகையை விரித்து உயிர்களுக்கெல்லாம்

நிழல் கொடுக்கும் தன்மை வாய்ந்த ஓங்கார ஸ்வரூபமான மயிலின்மீது ஞானமே திருமேனியாகவும் குறைவிலா நிறைவாகிய செம்மையே நிறமாகவும் பெற்ற முருகப் பிரான் வரும் அநுக்கிரக அவசரத்தைக் கண்டு, நமக்கும் இவன் அருள் செய்வானென்று கருதிக் காத்துக் கிடக்கும் பக்குவ ஆன்மாவுக்கு ஆண்டவன் திருவருள் கிடைக்கவேண்டும்' என்ற கருத்தை இந்த உருத்திலே சொல்லுகிறது இந்தப் பாட்டு.

மேலாகப் பார்த்தால் அழகும், ஆழ்ந்து பார்த்தால் அறிவும் புலப்படும் இந்தப் பாட்டில் கவிச் சுவையும் கருத்தாழமும் ஒருங்கே ததும்பி நிற்கின்றன.

# இரண்டு காட்சிகள்

கம்பனுடைய இராமாயணமாகிய மகா காவியத்தில் தமிழின் பலவேறு வகைச் சுவையை அநுபவிக்க இடம் இருக்கிறது. கதையின் போக்கையும், கதாபாத்திரங்களின் இயல்புகளை அந்த அந்த நிலை தவறாமல் இசைத்து அவர்களுடைய உரையையும் நடையையும் அமைத்திருத்தலையும், நூல் முழுதும் படித்துப் படித்து உணர்ந்தவர்கள் சிந்தித்துச் சிந்தித்து இன்புறலாம். சிற்பக் கலைச் செல்வம் நிரம்பிய திருக்கோயிலை அதன் பூரணவடிவத்திலே கண்டு இன்புறுவதுபோலக் கம்பராமாயணத்தின் பெரிய கட்டட விசேஷத்தையும், பலபல பகுதிகளும் ஒன்றனோடு ஒன்று இயைந்து காவியத்தின் முழுமையைச் சுவையுறச் செய்வதையும் அறிந்து மகிழலாம். அந்தத் திருக்கோயிலின் ஒவ்வொரு பகுதியையும், ஒவ்வொரு மூலையிலுமுள்ள சிற்ப உருவங்களையும், தனித் தனியே பார்த்து அவற்றின் அழகிலே ஊன்றி நின்று இன்புறுவதுபோலக் கம்பராமாயணப் பகுதிகளில் ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு பாடலிலும் நெஞ்சூன்றிச் செஞ்சொற்கவியின்பத்தை நுகர்வதற்கும் கம்பன் வாக்கு இடம் கொடுக்கிறது.

பாலகாண்டத்தில் 'பூக்கொய் படலம்' முதலிய சில படலங்களில் கதைப்போக்கின் சம்பந்தத்தை அறிய வேண்டுமென்ற அவசியமே இல்லாமல் கற்பனைக் காட்சிகள் பலவற்றைப் பொழிந்து குவித்திருக்கிறான் கம்பன். அங்கே உள்ள ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு தனிக்காட்சி சித்திரிக்கப்படுகின்றது. கம்பராமாயண மாளிகையில் எங்கோ ஓரிடத்தில் உள்ள

தனியழகு வாய்ந்த சிற்ப உருவங்கள் அவை. 'அர்த்த மண்டபம் மகாமண்டபம் என்பவற்றைப் போன்ற பெரிய உறுப்புக்களோடு அப்பகுதிகளைச் சேர்ப்பதற்கில்லை; ஆகையால் அவை கம்பராமாயணத்தில் மிகையாக உள்ளன' என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். திருக்கோயிலின் மூலைக்கம்பத்திலே, மூலக்கடவுளுக்கோ, பரிவார தேவதைகளுக்கோ தொடர்பில்லாத அருமையான சிறிய சிறிய சிற்ப உருவங்களைச் சிற்பி அமைத்து வைத்திருக்கிறான். அவை இல்லையென்றால் கோயிலின் அழகு குறையாது. என்றாலும் அவை தமக்கென வாய்த்த தனியழகோடு கோயிலின் பேரழகிலே கலந்து நிற்கின்றன. கம்பனுடைய கற்பனைக் காட்சிகளையும் அந்த வகையிலேதான் சேர்க்கவேண்டும்.

* * * *

காதலரும் காதலியரும் தம் தம் மனம் போன போக்கிலே பூஞ்சோலையிலே உலவிக்கொண்டிருக்கிறார்கள். தமக்கு விருப்பமான மலர்களைக் கொய்கிறார்கள்; மாலையாக்குகிறார்கள். தாம் சூடுகிறார்கள்; பிறருக்கும் சூட்டுகிறார்கள்.

அந்த உல்லாசக் கூட்டத்தினிடையே மாரன் அனைய திருவுருவ எழில் படைத்த ஒருவன் மலர்கொய்திருந்தான். அவன் திண்ணிய தோள்களைப் பார்த்தால் மலைகளைப்போலப் பொலிகின்றன. ஆண்மைக்கு உறைவிடமாகிய அவனுடைய தோள்கள் பூரிக்கவேண்டுமானால் ஒரு சிறிய தந்திரம் செய்யவேண்டும். "போர்" என்று வாயினாலே சொன்னால் போதும்; உடனே அவன் ஆண்மை வீறுகொண்டு எழும்; தோள் வீங்கும். "எங்கே?" என்று குதிபோட்டுக்கொண்டு கிளம்பி விடுவான்.

'போரென்ன வீங்கு பொருப்பன்ன பொலங்கொள் திண்டோள் மாரன் அனையான்' ஆகிய அவன் மலர்கொய்து கொண்டிருந்தான். எதற்காகத் தெரியுமோ? குயிலைப்

போல இனியமொழி மிழற்றும் தன்னுடைய ஆருயிர்க் காதலிக்குச் சூட்டி மகிழ்த்தான். அவள் காரைப்போலக் கறுத்து நீண்ட கூந்தலையுடையவளாயிற்றே. அக்கூந்தல் நிறையப் பூவை முடிக்கவேண்டுமென்ற ஆசையினால் அவன் மெல்ல மெல்ல மலர் கொய்தான்.

அப்பொழுது அவன் பின்புறமாகக் 'காரன்ன கூந்தற் குயிலன்னவள்' வந்தாள்; மெல்ல மெல்ல அடிமேல் அடிவைத்து வந்தாள். தனக்காக அவன் மலர் கொய்வதைப் பார்த்தபோது அவளுக்குக் காதல் கரைபுரண்டோடியது. அப்படியே பின்புறத்தில் சென்று அவன் கண்களைப் பொத்தினாள்.

மலர் கொய்வதிலே தன் முழுமனத்தையும் புகவிட்டு நின்ற அந்தக் கட்டழகன், அது தடைப்பட்டவுடனே, "யார்?" என்று கேட்டான். அவ்வளவுதான்: உடனே மூண்டது பெரும்புயல். அந்தக் குயிலனைய பாவையின் நெஞ்சில்தான் அப்புயல் மூண்டது.

'யார்? யார்? யாரா? - என்ன இவர் இப்படிக் கேட்கிறார்? இவர் கண்ணைப் பொத்துபவர் இன்னாரென்று இவருக்குத் தெரியவில்லையா? இந்தச் செய்கையைச் செய்யும் உரிமை வேறு யாருக்கு உண்டு?...வேறு யாரேனும் இவர் கண் புதைப்பது உண்டோ...நம்மையன்றி வேறொருத்தி இத்தகைய உறவுடையவள் இருப்பாளோ!...'

பேதை மடமகள் ஊடல்கொண்டாள். அவள் நெஞ்சம் குமுறியது. பெருமூச்சு விட்டாள். அப்பா! அதில்தான் எத்தனை உஷ்ணம்! அனல்போல அல்லவா இருக்கிறது? அவள் உள்ளத்திலே எழுந்த கொதிப்பின் அனல் அது.

'இவர் உண்மைக் காதலுடையவராக, நாம் நினைப்பதுபோல நம்மையன்றிப் பிறரை நினையாதவராக, இருந்தால் யார் என்று கேட்பாரா?' என்று அவள் நினைக்கிறாள்.

இந்த ஊடற்காட்சி கம்பன் வாக்காகிய பின்வரும் கவியிலே ஒளிர்கிறது.

போரேன்ன வீங்கும் பொருப்பன்ன
போலங்கோள் திண்டோள்
மாரன் அனையான் மலர்கோய்திருந்
தானை வந்தோர்
காரன்ன கூந்தற் குயிலன்னவள்
கண்புதைப்ப
ஆரென்ன லோடும் அனலென்ன
வெய்து யிர்த்தாள்.

* * * *

கம்பனுக்குப் பிறகு இலக்கிய வானிலே சுடர்விட்ட உடுமணிகளுள் பாரதியார் சிறந்தவர். அவர் கம்பனைப் போல மகா காவியம் ஒன்றை இயற்றிப் பெரிய திருக் கோயிலைச் சமைத்த சிற்பியாகவில்லை; ஆனாலும் அவருடைய பாடல்களில் கம்பனது நுண்வினைச் சொற் சிற்பத்துக்குக் குறையாத அழகு பெற்ற சொல்லோவியங்களைக் காணலாம்.

ஒரு புலவன் ஒரு கருத்தைச் சொல்லியிருப்பான். அதைக் கண்ட வேறொரு புலவன் அதே கருத்தைப் பின்னும் மெருகிட்டுப் புனைந்து புதிய கவியாக்கி விடுவான். இது கவி பரம்பரையிலே வரும் வழக்கம். பழந்தமிழ் நூல்களிலே மூலையில் இலைமறை காய்போல் கிடக்கும் ஒன்றை எடுத்து அதற்கு அழகிய நிலைக்களனமைத்து விரித்து ஒளியூட்டிச் சுவைப் பிழம்பாக்கும் சிற்பத் தொழிலிலே வல்லவன் கம்பன். பாரதியாரும் அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவரே.

ஆரென்று கேட்ட காதலனும், அனலென்ன வெய்துயிர்த்த காதலியும் அமைந்த இந்தக் கவிக்காட்சியைப் பாரதியார் படித்திருக்கிறார். எப்படி இருந்தால் அங்கே ஊடலின்றிக் காதல் மணம் விரிந்து கமழுமென்பதைச்

சற்றே பார்க்கிறார். அந்தக் காட்சியை அடியோடு மாற்றிவிடுகிறார். கண் புதைக்கும் விளையாட்டு ஊடல் நாடகமாகாமல் தெய்விகக் காதலைப் புலப்படுத்தும் அரிய காட்சியாக மாறிவிடுகிறது. பாரதியார் செஞ்சொற் கவிச் சிற்பத்தை இனிப் பார்க்கலாம்.

*    *    *    *

இங்கே பாரதியார் தம்மையே காதலனாக்கினார்; காதலி கண்ணனது பெண்மை யுருவாகிய கண்ணம்மா. கம்பன் கற்பனைப் பூஞ்சோலையை நாடக அரங்காக்கு கிறான். பாரதியாரோ, கடற்கரையை அடுத்த ஒரு வீட்டின் மாடியில் இந்தக் காட்சியைப் பொருத்துகிறார்.

மாலைப்பொழுது. அந்த மாடிமிசையே வானையும், எதிரே தோன்றும் கடலினையும் நோக்கி இருந்தான் காதலன். மூலைக்கடலும் வானவளையமும் இணைந்து நிற்கும் செவ்வியைக் கண்டு இன்புறுகிறான். இந்தக் காட்சியைக் காண்பவன் கவிஞன், வீரன், தியாகி என்று பலபடியாகச் சொல்வதற்கேற்ற இயல்புகளை உடையவன் தான். ஆனாலும் இப்போது காதலனாக இருக்கிறான். பாட்டு முழுவதும் காதலின் உயர்வைப் புலப்படுத்துவதாக அமைந்தமையால் அதன் ஒவ்வொரு பகுதியும் பாட்டின் ஜீவனாகிய அக்காதலுக்கு உபகாரப் படுவதாக இருக் கிறது. கடலும் வானவளையமும் இணைந்திருப்பதைக் காதலன் காதல் நிகழ்ச்சியாகக் காண்கிறான்; 'மூலைக் கடலினையவ் வானவளையம் முத்தமிட்டே தழுவி முகிழ்த்தல் கண்டேன்' என்கிறான்.

பின்னாலே வரும் காதல் நாடகத்துக்குச் சுருதி போட்டாய்விட்டது; காதற் கோயிலுக்கு அஸ்திவாரம், நிலைக்களம், அமைந்துவிட்டது.

மேலே வானத்தின் நீலம்; அது முத்தமிட்டுத் தழுவும் கடலோ பெரிய நீலப்பரப்பு. இரண்டும் ஒன்றனை

யொன்று நெருங்கித் தழுவுகின்றன. அந்த 'நீல நெருக் கிடையில் நெஞ்சு செலுத்தி, நேரங் கழிவதிலும் நினைப் பின்றியே, சாலப் பலபலநற் பகற்கனவில், தன்னை மறந்த லயந்தன்னில்' இருந்தான் காதலன்.

நாடகத்துக்கு மேடையும் அமைத்தாயிற்று; கதா நாயகன் வந்தாகிவிட்டது; அடுத்தபடி கதாநாயகி கம்பீரமாக வருகிறாள்.

"ஆங்கு அப்பொழுது என் பின் புறத்திலே
ஆள் வந்து நின்று எனது கண் மறைக்கவே."

ஆள்! ஆணா, பெண்ணா? கண்ணை மறைத்த பிறகு ஆணென்றும் பெண்ணென்றும் தெரிந்து கொள்ள முடியுமா? கையால் கண்ணைப் பொத்தியமையால், கை யுள்ள மனித உருவம் ஓர் ஆள் என்று நிச்சயமாகத் தெரியும்.

எந்த மனிதனும் இதைச் சொல்லிவிடலாமே. கண்ணைப் பொத்தியது ஆளென்று சொல்வதற்குக் காதலனா வேண்டும்? கம்பன் காட்டும் காட்சியில் வரும் காதலன் கீழ்ப்படியில் நிற்பவன். அவன்தான் ஆள் என்றுமட்டும் தெரிந்து "ஆர்?" என்று கேட்பான். கண்ணம்மாவின் காதலன் அத்தகையவன் அல்ல. அவன் கேட்கவில்லை. உணர்ந்து கொண்டான். எப்படி? அவனே சொல்கிறான்.

"பாங்கினிற் கையிரண்டுந் தீண்டி அறிந்தேன்."

அந்தக் கைகளின் ஸ்பரிசத்திலேயே கண்ணம்மாவை அவன் உணர்ந்தானும்! அப்படித் தீண்டுவதனால் தெரிவது ஒரு பெரிதா? அது ஒருகால் தன் நுண்ணிய உன்னதமான காதலுணர்ச்சிக்கு இழுக்காகுமோ என்று காதலன் நினைக் கிறான். "தீண்டக்கூட வேண்டாம். அவள் வரும்போது அவள் அணிந்த உடையின் பரிமளத்தில் அவளை நான் உணர்ந்தேன்" என்கிறான்: "பட்டுடை வீசு கமழ் தன்னில் அறிந்தேன்."

பின்னும் நுணுகி நுணுகிச் செல்கிறது அவன் உணர்வு. இதுவும் பெரிதல்ல. மணத்தால் உணரும் சக்தி பசுவுக்கும் உண்டு. காதலன் அறிவும் உணர்ச்சியுமுள்ள மனிதனுயிற்றே. அவளுக்கும் தனக்கும் உணர்ச்சி ஒத்து நிரம்புவதை அறிந்தவனுயிற்றே. ஆகையால் அடுத்தபடி, "ஓங்கி வரும் உவகை யூற்றில் அறிந்தேன்" என்று சொல்கிருன். அப்போது அவன் காதலின் உயர்வு புலப்படுகிறது.

இதுவும் போதாது, அவன் காதலின் ஆழத்தைப் புலப்படுத்த. பரிசம், மணம், உவகை - ஒன்றும் இல்லாமலே கண்ணம்மாவை உணர முடியாதா? முடியும். நிச்சயமாக முடியும். அவள் உள்ளமும் தன் உள்ளமும் ஒரே மாதிரியாகத் துடிக்கின்றன. அந்தத் துடிப்பிலுலே தெரிந்து கொள்ளலாம். அவன் தெரிந்துகொண்டதைச் சொல்கிருன்:

"ஓட்டும் இரண்டுளத்தின் தட்டில் அறிந்தேன்."

என்ன உயர்வு! பரிசத்திலே ஏமாந்து போகலாம்; மணத்திலே பொய்ம்மையும் கலந்திருக்கலாம்; உவகை யூற்றிலே பிறரும் கலக்க இடமுண்டு. ஆனல் இரண்டுளத்தின் ஒருமைத் தட்டிலே, காதலனும் கண்ணம்மாவுந்தான் இருப்பார்கள். இரண்டுளத்தின் தட்டு ஒன்றுக இருந்தால் அங்கே காதலின் இரட்டை யுருவமாகிய அவர்களைத் தான் காணலாம். இரண்டு உள்ளமும் ஒன்றுக இயங்குவதில்தான் உண்மையான தெய்விகக் காதல் புலப்படுகிறது.

அந்த இருதயத் துடிப்பின் ஒருமையிஞல் தன் கண் புதைத்தவள் கண்ணம்மாதான் என்று நிச்சயமாக உணர்ந்துகொண்ட காதலன் சொல்கிருன்:

"வாங்கி விடடிகையை ஏடி கண்ணம்மா
மாயம் எவரிடத்தில்"

என்று மொழிந்தான்.

மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே
வானையுங் கடலையும் நோக்கி யிருந்தேன்
மூலைக் கடலினையவ் வான வளையம்
முத்தமிட் டேதழுவி முகிழ்த்தல் கண்டேன்
நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி
நேரங் கழிவதிலும் நினைப் பின்றியே
சாலப் பலபலநற் பகற் கனவில்
தன்னை மறந்தலயந் தன்னி லிருந்தேன்.

ஆங்கப் பொழுதிலென்றன் பின்பு றத்திலே
ஆள்வந்து நின்றெனது கண்ம றைக்கவே
பாங்கினிற் கையிரண்டுந் தீண்டி அறிந்தேன்
பட்டுடை வீசுகமழ் தன்னில் அறிந்தேன்
ஓங்கி வருமுவகை யூற்றில் அறிந்தேன்
ஒட்டும் இரண்டுளத்தின் தட்டில் அறிந்தேன்
"வாங்கி விடடிகையை ஏடி கண்ணம்மா
மாயம் எவரிடத்தில்" என்று மொழிந்தேன்.

* * * *

*ஆரென்று கேட்ட காதலன், கம்பன் பண்ணி வைத்த பொம்மை. இரண்டுளத்தின் தட்டினால் தன் கண்ணம்மாவைத் தெரிந்துகொண்ட காதலன், பாரதியார் உருவாக்கிய ஜீவசித்திரம். அதைப் பார்த்து, இதையும் பார்த்தவர்களுக்கு இதன் அருமையும் அழகும் ஆழமும் நன்றாகப் புலப்படும்.*

# யார்தான் அறியக்கூடும்?

“தலைவலி யென்று பற்றுப் போட்டதைக்கூட நான் பார்த்ததில்லையே” என்றேன் நான்.

“ஆமாம்! எப்பொழுதும் ஜாக்கிரதையாகவேதான் இருப்பது வழக்கம். பிரமாதம் ஒன்றும் இல்லை. 102 டிகிரிதான் இருக்கிறது. படுக்கை போட்டுப் படுத்தது வழக்கமில்லையாகையால் எனக்குக் கொஞ்சம் சிரமமா யிருக்கிறது” என்றார் அவர்.

அன்று திங்கட்கிழமை. ‘கலைமகள்’ நிருவாகப் பத்திரிகாசிரியர் டி. எஸ். ராமசந்திரையரவர்கள் சிறிது ஜுரமென்று படுத்துக்கொண் டிருந்தார்.

அடுத்த திங்கட்கிழமை (23-7-34) அன்று அவர் நம்மை விட்டுப் பிரிந்துவிடுவாரென்று யார்தான் முன் அறியக்கூடும்? ஆனால், நம்முடைய ஊகத்திற்கு எட்டாத காலம், அவருடைய வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

ராமசந்திரையர் ‘கலைமகள்’ நிருவாகப் பத்திரிகாசிரியராக உழைத்த இளைஞர்; வயசினாலன்று, ஊக்கத்தினால். அவர் வளர்த்த ‘கலைமகள்’ பசுஞ்சிளமையில் உலவுகிறாள். உபகாரச் சம்பளம் பெற்ற உத்தியோகஸ்தரென்று அவரை அவர் எழுத்தைக் கொண்டு சொல்லிவிட முடியாது. குதூகலமுள்ள இளைஞர்களுடைய எண்ணங்களும் பரிஹாஸமும் அவருடைய பேச்சிலும் எழுத்திலும் விளங்கின.

அறுபத்துமூன்று வருஷங்கள் ஆனவர் என்று அவருடைய ஜாதகம் சொல்லுகின்றது. அவர்

திருவிடைமருதூரில் 1871-ஆம் வருஷம் பிறந்தவர். இளமையிலேயே தந்தையை இழந்தார். இளமைக் கல்வியை ஒழுங்காகக் கற்றபின்பு 1880-ஆம் வருஷம் சென்னைக்கு வந்து கல்வி பயின்ருர். பச்சையப்பன் கலாசாலையிலும் பிறகு கிறிஸ்தவக் கலாசாலையிலும் படித்தார். அவருடைய திறமையைக் கண்டு அவரைச் சம்பளமில்லா மாணவராகக் கலாசாலை அதிகாரிகள் சேர்த்துக் கொண்டார்கள்.

1891-ஆம் வருஷம் பி. ஏ. பரீட்சையில் அவர் தேர்ச்சி பெற்ருர். படிக்கும்பொழுதே நூல்களில் ஒரு தனிச்சுவையை உடையவராக இருந்தார். தமிழ்ப்பாடங் களை மிகக் கருத்துடன் வாசித்து வந்தார். பிற்காலத்தில் அவர் அடிக்கடி, தமக்குத் தமிழ்ப்பாடஞ்சொல்லிய பண்டிதர் சின்னசாமிப் பிள்ளையைப் பாராட்டுவது உண்டு. தமக்கு இருந்த தமிழபிமானத்தினுல், பச்சையப்பன் கலாசாலையில், சிறந்த வியாசம் எழுதும் கலாசாலை மாணவ ஞெருவனுக்கு வருஷந்தோறும் பரிசு ஒன்றை அளிப்பதற்குரிய நிதியாக ரூ. 500 வழங்கியிருக்கிருர்.

பிறகு அவர் ‘ரிஜிஸ்ட்ரேஷன் இலாகா’வில் உத்தியோ கத்தில் அமர்ந்தார். குமாஸ்தா முதலாகக் காரியதரிசி வரையிலுள்ள உத்தியோகங்களை அவர் முறையே பார்த் தார். அக்காலங்களில் மேலதிகாரிகள் அவருடைய வேலைத்திறமையையும் அறிவின் வன்மையையும் கண்டு வியந்தார்கள். உத்தியோக வேலைகளை மிகவும் விரை வாகச் செய்து முடிப்பதில் சிறந்தவரென்ற புகழை அவர் பெற்ருர். 1910-ஆம் வருஷம் அவர் ஜில்லா ரிஜிஸ்ட் ராராக ஆனுர். 1913-ஆம் வருஷம் முதல் 1924-ஆம் வருஷம் வரையில் இன்ஸ்பெக்டர் ஜனரலிடம் உதவி உத்தியோகஸ்தராக (*Personal assistant*) இருந்தார். 1926-ஆம் வருஷம் வேலையிலிருந்து நீங்கி உபகாரச் சம்பளம் பெற்றுவந்தார். அவர் தம் சொந்த முயற்சியினு லேயே முன்னுக்குவந்தவரென்று அவருடைய நண்பர்கள் சொல்வார்கள்.

பிற்காலமெல்லாம் ஸ்ரீ ராமசந்திரையர் ஒரு ரிஷியைப்போல வாழ்ந்து வந்தார். நூல்களைப் படிப்பதும் வித்துவான்களுடன் ஸல்லாபம் செய்வதும் அவருடைய பொழுதுபோக்காக இருந்தன. உத்தியோக காலங்களிலேயே ஓய்வு நேரத்திலெல்லாம் கம்பராமாயணம், தேவாரம் முதலிய நூல்களைப் படித்து இன்புற்று வருவது அவர் வழக்கம். ஆங்கிலம், வடமொழி, தமிழ் என்னும் மூன்றிலும் அவருக்கிருந்த சிறந்த பயிற்சி அவருடைய வாழ்க்கைக்கு இன்பமூட்டுவதாக அமைந்தது. கம்பராமாயணத்தில் பெரும்பாலான செய்யுட்கள் அவருக்கு மனப்பாடம். ஏதாவது ஓரிடத்தைச் சொன்னால் முன்னும் பின்னும் உள்ள பாடல்களையும் அந்த இடத்திலுள்ள அபிப்பிராயங்கள் அமைந்த வேறு பல செய்யுட்களையும் தங்குதடையின்றிச் சொல்லுவார். 'பென்ஷன்' பெற்ற உத்தியோகஸ்தரொருவர் அத்தகைய ஞாபக சக்தியும் அறிவும் வாய்ந்தவராக இருந்தாரென்பதை அறிந்த யாவருக்கும் அவர் இயல்பு ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. அவர் வால்மீகி ராமாயணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் உள்ள வேறுபாடுகளையும் ஒற்றுமைகளையும் நன்றாக ஆராய்ந்து வைத்திருந்தார். 'கம்பராமாயணந்தான் சிறந்தது' என்றும், 'வால்மீகி ராமாயணந்தான் சிறந்தது' என்றும் கூறுபவர்களை அவர் விரும்பார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையிற் சிறந்ததென்பது அவருடைய அபிப்பிராயம். 'வால்மீகி உண்மை வாழ்க்கையை (*Realistic life*) அநுசரித்துப் பாடினார்; கம்பர் லக்ஷ்ய வாழ்க்கையை (*Ideal life*) அநுசரித்துப் பாடினார்' என்பதே அவருடைய கருத்து. ஒரு நூலை முற்றும் ஆராயாமல் அங்கங்கே கண்ட சிலவற்றைக் கொண்டு அபிப்பிராயம் சொல்லுதலை அவர் சிறிதேனும் போற்ற மாட்டார். குற்றத்தைக் குற்றமென்று கூறுவதற்கு அஞ்சார்.

உலக ஸ்வபாவத்தை அவர் நன்றாக அறிந்திருந்தார். நாள்தோறும் தவறாமல் சமாசாரப் பத்திரிகை படிப்பார்.

ஹிட்லருடைய நாஜி இயக்கத்தின் நுணுக்கம்முதல் அடுப்பங்கரைப் பாட்டியின் பேச்சு ஸ்வாரஸ்யம் வரையி லுள்ள விஷயங்களில் அவருடைய வேடிக்கைப் பேச்சு விரவும். உருவகக் கதைகளை எழுதும் ஆற்றல் அவர் பால் இருந்தது. பல வருஷங்களுக்குமுன் அவர் 'தமிழ் உலகு' என்னும் பத்திரிகையில் தென் ஆப்பிரிக்காவில் இருந்த இந்தியரின் நிலை முதலிய விஷயங்களை உருவகக் கதைகளாகவும் புராணப் பாட்டாகவும் அமைத்து வெளியிட்டிருக்கிறார். 'கலைமகள்' பத்திரிகை யிலும் அத்தகைய கதைகள் சில வெளிவந்துள்ளன. உலகத்திலுள்ள சில அசட்டு வாதங்களையும், உலகத்தை ஏமாற்றிவரும் பேர்வழிகளின் நடத்தைகளையும் பரிஹ ஸித்து எழுதிய பல கட்டுரைகள் 'சோதிடப்புலி சோணாசலம்' என்ற தலைப்பில் 'தமிழ் உலகி'லும் 'கலைமகளி'லும் வெளிவந்திருக்கின்றன.

அவருடைய பேச்சில் எப்போதும் ஹாஸ்யம் கலந்து இருக்கும். பிரம்மசூத்திரத்தைப்பற்றிப் பல வித்துவான் கள் விசாரித்துக்கொண் டிருப்பார்கள்; அவர்களோடு அவரும் இருப்பார்; அந்தவேதாந்தத்தோடு வேடிக்கையும் கலக்கும்படி அவர் செய்வார்.

மயிலாப்பூர் ஸம்ஸ்கிருத காலேஜ் தெருவில் உள்ளது அவர் வீடு. அங்கே வாசலில் ஒரு சாய்வு நாற்காலி யில் அவர் அமர்ந்திருப்பார். சுற்றுத் திண்ணைகளில் மஹாமஹோபாத்தியாய கருங்குளம் கிருஷ்ண சாஸ் திரிகள் முதலிய பண்டிதர்களும் வேறு சில நண்பர் களும் உட்கார்ந்திருப்பார்கள். ஏதாவது உபயோகமுள்ள விஷயத்தைப்பற்றிப் பேச்சு நடந்துகொண் டிருக்கும். தூரத்திலிருந்து கவனிக்கும் ஒருவனுடைய காதில் இரண்டு நிமிஷத்துக்கு ஒரு முறை சிரிப்புக்கோஷம் அவ்விடத்திலிருந்து வந்துவிழும். பேச்சு வேதாந்தமோ சித்தாந்தமோ, லோக வியவஹாரமோ, இராமாயணமோ ஏதானாலும் சரி, அதற்கிடையில் அடிக்கடி சிரிப்பில்லாமல்

இராது. அதற்குக் காரணம் ராமசந்திரையருடைய ஹாஸ்யப் பேச்சுக்களே.

உயர்ந்த உத்தியோகத்தில் இருந்தவரென்று, அவரைப் பார்த்த மாத்திரத்தில் கண்டு பிடிக்க முடியாது. பழுப் பேறிய கதராடையும் நெற்றியிற் கீற்றுச் சந்தனமும் உடைய அவருடைய எளிய கோலம், அவரது குதூகல ஸ்வபாவத்தோடு கலந்து அவரை ஒரு பிரம்மவித்தைப் போல நினைக்கச் செய்தது; இது நான் சொல்வது மாத்திர மன்று: அவருடைய மரணத்தைப்பற்றிய இரங்கற் கூட்டத்திற் பேசிய பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள், "அவர் இறக்கும் பொழுதும் தைரியமாகவே இருந்தார். 'எல்லோரும் பயப்படுகிறார்கள், என்ன செய்கிறது?' என்று நான் கேட்டபொழுது, 'பைத்தியம்!' என்று அசட்டையாகப் பதில் கூறினார். அப்பொழுது அவர் ஒரு பிரம்மவித்தைப் போலத் தோற்றினார்" என்று சொன்னார்.

பண்டிதர்களுடன் ஸல்லாபம், ராட்டை நூற்றல், புஸ்தகம் வாசித்தல் இவ்வளவிலே அவருடைய பொழுதுபோக்கு அடங்கி நின்றது. அவர் வீட்டுவாயி லுண்டு, அவருண்டு; வேறு எங்கும் போவதில்லை. அவர் இருந்த இடத்தில் கலைமகளின் ஜோதி வீசிக்கொண்டே இருந்தது.

"ஸஹ்ருதயர்களுடைய மத்தியில் அவர் ஹ்ருதயம் போல இருந்தார்" என்று மஹாமஹோபாத்தியாய குப்புஸ்வாமி சாஸ்திரிகள் அநுதாபக் கூட்டத்திற் பேசினார்; அவருடைய கூர்ந்த அறிவை மிகப் புகழ்ந்தார். அவருடைய பத்திரிகையின் நிருவாகத் திறமையைக் 'கலைமகள்' நண்பர்கள் நன்கு அறிவார்கள். அவருடைய ஒழுக்கமும் மேதையும் நல்லோரையும் பண்டிதர்களையும் வசியமாக்கின.

'கலைமகள்' ஆடிமாதப் பத்திரிகையில் அவர் எழுதிய நாடி வைத்தியர்' என்ற கதை வெளிவந்தது. "அடுத்த

மாதம் என்ன எழுதப் போகிறீர்கள்?" என்றேன் நான்.

"அழுகையைப்பற்றி எழுதப் போகிறேன். எல்லாம் அழுகையில் முடிகின்றன. எல்லா ரஸங்களுக்கும் அதுவே பிரதானம். சிருங்காரத்தில்கூட விப்ரலம்ப சிருங்காரத்தைத்தான் உயர்வாகக் கருதுகிறார்கள். கொஞ்சம் வேடிக்கையாக இரண்டு சூத்திரங்கள் செய்து போடப்போகிறேன்" என்றார்.

ஆவணி இதழில் அவர் எழுதிய அழுகையைப்பற்றிய கட்டுரை வரவில்லை; அவரைப்பற்றிய அழுகைக்குரிய வரலாறுதான் வந்தது. இதை யார்தான் முன்னே அறியக்கூடும்?

# வரவே இல்லை

"நான் ஒரு ஸ்ரீவைஷ்ணவன்; வைதிக ஆசாரங்களில் தவருத குடும்பத்திலே பிறந்தவன். ஜாதியென்றும் மதமென்றும் பிரிவு செய்யும் கொடுமையிலே கொக்கரிக்கும் சமூகக் காற்றை சுவாசித்தவன். பாரதியாருக்கு ஜாதியில்லை; சமயமில்லை. வரம்பில்லை; வழியில்லை. அவர் வைத்தது சட்டம்; போனது வழி. குடும்பத்திலே அவர் ராஜா. அவர் உருட்டலும் மிரட்டலும் குடும்பத்தைக் கதிகலங்கச் செய்யும். அடுத்த நிமிஷத்தில் நாய்க்குட்டிபோல் பணிந்துவிடுவார். அவரோடு என் வாழ்க்கை இணைந்து நின்றது எனக்கே ஆச்சரியத்தை உண்டாக்குகிறது."

இவ்வாறு அவர் சொன்னர். அவர் வேறு யாருமல்ல; குவளைக் கிருஷ்ணமாசாரியார்தாம்; குவளைக் கண்ணன் என்ற பெயரால் பாரதியார் தமிழ்ப் பாட்டிலே பதித்து வைத்த பெரியார் அவர்.

பெரியவரென்று சொல்லும்போது அவருடைய உருவப் பெருமை, உள்ளப் பெருமை எல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றன. வாழ்க்கையில் சாரமற்று யமனேடு போராடிக்கொண் டிருந்த கடைசிக் காலத்திலே அவர் பேசிய பேச்சு, பாரதியாரைப் பற்றியதுதான்.

"எனக்குத் தெரிந்ததைச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும். தமிழ் நாட்டில் பாரதிவிழா எல்லாரும் கொண்டாடுகிருர்கள். ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். பாரதியாரோடு பழகிய நான் அவர் வாழ்க்கையோடு இணைந்து வாழ்ந்

தவன். நல்ல வஸ்து நெடுநாள் உலகத்தில் தங்குவதில்லை. அவர் போய்விட்டார். எனக்கு ஏதாவது பொருளுதவி செய்தால் பாரதியார் விழாவில் ஒரு சிறந்த கடமையை நிறைவேற்றினதாக இருக்கும். இதை நாலு பேரிடம் சொல்லிப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யவேண்டும்" என்று அவர் சொன்னார். அந்த விருப்பத்தை நிறை வேற்ற முடியவில்லை. அதற்குள் அவர் பாரதியாரைத் தேடிக்கொண்டு போய்விட்டார்.

* * * *

பாரதியாரைப் பற்றி யார் விசாரித்தாலும் அன்போடு அவர் பழைய ஞாபகங்களைச் சொல்லுவார்; சொல்லும்போது இன்னும் பாரதியார் அருகில் இருப்பதாகப் பாவித்துக் கொள்வார்போல் இருக்கிறது. இல்லாவிட்டால் அவருக்கு அந்தச் சமாசாரங்களை விவரிக்கும் போதெல்லாம் அவ்வளவு உத்ஸாகம் இருக்க நியாயமே இல்லை.

அவர் தொண்டையிலே ஒருவிதமான கரகரப்பு, தொண்டைக்குள்ளே ஏதோ அடைத்துக்கொண்டது போல இருக்கும். அதனோடே அவர் பாரதியார் பாடல்களைப் பாடுவார். அவர் பாட்டிலே ராகம் இராது; இனிமை இராது; பாவம் இராது. ஆனால் ஒருவகையான ஜீவன் மாத்திரம் இருக்கும். பாரதியார் பாடிப் பாடிக் கேட்டு அதிலே ஊறி ஊறிப் பழகி, அன்போடு தாமும் பாடிப் பாடி இன்பமடைந்தவர் அவர். காலம் பாரதியாரையும் அவர் பழக்கத்தையும் மறைத்து விட்டது. 'குவளைக் கண்ண'னுக்கும் வயசாகி விட்டது. அடிக்கடி பாடச் சந்தர்ப்பமும் இல்லை. ஆயினும் அந்தப் பழைய அன்பு, அந்தப் பழைய இன்பம், பாரதியாரது பாடலைச் சொல்லும்போது அவருக்கு இருந்தனவென்பதை அவரிடம் பாடல்களைக் கேட்ட யாவரும் எளிதில் தெரிந்துகொண்டிருக்கலாம்.

புதுச்சேரியிலே பாரதியாரை ஊன்ற வைத்ததற்கு மூலமாக இருந்தவர் குவளைக் கிருஷ்ணமாசாரியார். அவருக்கு எப்போதும் உற்ற தோழருமாக இருந்தார். கிருஷ்ணமாசாரியாருக்கு இளமை முதலே சாமியார்களைக் கண்டால் அதிகப் பிரியமாம். பல சாமியார்கள் அவருக்குப் பழக்கம். அவர்களை ஒவ்வொருவராகப் பாரதியாருக்கும் பழக்கம்செய்து வைத்தாராம். கோவிந்தசாமி, குள்ளச்சாமி, யாழ்ப்பாணத்துச்சாமி - இந்தச் சாமிகளெல்லாம் 'குவளைக்கண்ண'னால் கிடைத்தவர்கள்.

"கிருஷ்ணா!" என்று அன்புடன் ஒருமையிலே கூப்பிடுவாராம் பாரதியார்.

*　　*　　*　　*

கிருஷ்ணமாசாரியார் ஆங்கிலம், பிரெஞ்சு இரண்டிலும் அறிவு வாய்ந்தவர். 1912-ஆம் வருஷம் 'ராலி' கம்பெனியிலிருந்து உத்தியோகம் தருவதாகக் கடிதம் வந்ததாம். அதைக் கிருஷ்ணமாசாரியார் பாரதியாரிடம் கொண்டுபோய்க் காட்டினார். அந்த மனுஷ்யர் சிறிதேனும் தயா தாக்ஷிண்யமின்றி அதைக் கிழித்துப் போட்டுவிட்டாராம். திருவண்ணாமலையில் அந்தக் கம்பெனியார் சில வேலைகளை நடத்தி வந்தபடியால், அங்கே வரும்படி கிருஷ்ணமாசாரியாருக்கு உத்தரவு வந்திருந்தது.

பாரதியார் உத்தரவைக் கிழித்துப் போட்டவுடன் கிருஷ்ணமாசாரியார், "என்ன இப்படிச் செய்து விட்டீர்களே?" என்றார்.

"கிருஷ்ணா, நீ திருவண்ணாமலைக்குப் போய்விட்டால், எனக்கு இங்கே யார் துணை?" என்று பாரதியார் கேட்டார்.

"வாஸ்தவம். நமக்கு இவர் துணை; இவருக்கு நாம் துணை" என்ற திருப்தியோடு அவர் இருந்துவிட்டார்.

*　　*　　*　　*

"பாரதியார் என்னை முதலியார்கள் வீட்டி லெல்லாம் சாப்பிடச் சொல்வார். முதலில் நான் மறுத் தேன். எங்கள் வீட்டுக்குத் தெரிந்தால் தலைபோய் விடு மென்று சொன்னேன். நாளாக நாளாகப் பாரதியா ருடைய பழக்கம் சிறிது நேரம் அவரைப் பிரிந்திருப்பது கூடப் பெரிய துன்பமென்று தோற்றச் செய்துவிட்டது. அதனால் சில ராத்திரிகளில் மாதாகோவில் வீதியிலுள்ள லோகநாத முதலியார் வீட்டில் அவரோடு சாப்பிட்டிருக் கிறேன்."

"உங்கள் வீட்டுக்கு இந்த விஷயம் தெரியாமலே இருந்ததா?" என்று நான் கேட்டேன்.

"குறிப்பாகத் தெரியும். தெரிந்து என்னை என்ன செய்யமுடியும்? என்னை ஒரு 'தத்தாரி' என்று நினைத்து விட்டார்கள். பாரதியாரையே அப்படி நினைத்தவர்கள் எவ்வளவு பேர்! அவருடைய தோழனுக்கு மாத்திரம் அந்தக் கௌரவம் வருவது கூடாதா?"

குவளைக் கிருஷ்ணமாசாரியாரைக் கடைசி முறை யாகக் கண்டபோது அவர் மிகவும் மெலிவாக இருந்தார். "நான் இன்னும் இரண்டு நாளில் ஆஸ்பத்திரி போகப் போகிறேன். பாரதியாரோடு போய்ச் சேருங்காலம் வந்துவிட்டதென்று தோன்றுகிறது. ஏதாவது பத் திரிகையில் வெளிவந்தால் ஆஸ்பத்திரிக்கு அனுப்புங்கள்" என்று மேல்மூச்சு வாங்கிக்கொண்டு அவர் சொன்னார். எனக்கும் உடனிருந்த நண்பருக்கும் வயிற்றை என்னவோ செய்தது.

"'யோகசித்தி' பார்த்திருக்கிறீர்களா?"

"படித்திருக்கிறேன்."

"ஒரு விஷயம் சொல்லுகிறேன்; கேளுங்கள்."

"ஐயோ! உங்களுக்கு மேல்மூச்சு வாங்குகிறது. உங்கள் உடம்பு சௌக்கியமாகி வந்த பிறகு சாவகாச மாகக் கேட்டுக் கொள்ளுகிறேனே."

3579



"சாவகாசம் எங்கே கிடைக்கப் போகிறது. இப்பொழுதே மெல்லச் சொல்கிறேன்" என்று அவர் வற்புறுத்தினர்.

எங்களுக்குக் கேட்பதில் ஆசைதான்; ஆனால் அவர் இருந்த நிலையில் அவரைப் பேச அநுமதிப்பது பெரும் பாவமாகத் தோற்றியது. அவரோ சொல்லித்தான் தீருவாரென்று தெரிந்தது. பாரதியார் பேச்சை மூச்சிருக்குமட்டும் பேசவேண்டுமென்று சங்கற்பம் செய்து கொண்டவரைப்போலக் காணப்பட்டார்.

"புதுச்சேரியிலே வீராசாமி பிள்ளை தோப்பு என்ற ஒரு பெரிய தோப்பு இருக்கிறது; நாலு ஐந்து ஏக்கரா பூமி விஸ்தீரணமுள்ளது. அங்கே ஒரு குளமும் பங்களாவும் உண்டு. பாரதியார் அடிக்கடி அந்த இடத்திற்குப் போய் உல்லாஸமாக இருந்து வருவார். ஒருநாள் சில நண்பர்களுடன் சேர்ந்து அங்கே காலையில் போனர். நானும் போயிருந்தேன். அந்தக் குளத்திலே ஸ்நானம் செய்தோம். சாப்பாட்டையும் முதலியார் வீட்டிலிருந்து அங்கே வருவித்து விட்டார். எங்கள் எல்லோருக்கும் சேர்த்து வருவித்தார்.

"நான் முதலியார் வீட்டில் ராத்திரிவேளையில் சாப்பிடுவது உண்டு. ஆனல் அப்போது அவ்வளவு பேருக்கு நடுவில் அந்த உணவைச் சாப்பிடுவதற்குச் சிறிது லஜ்ஜையாக இருந்தது; 'கிருஷ்ண, நீ சாப்பிடத்தான் வேண்டும்' என்றார் பாரதியார்; 'வேளாளன் கொடுக்கிற அரிசி உதவும்; சோறு உதவாதா?' என்று கேள்வி கேட்க ஆரம்பித்துவிட்டார். எனக்கு அவரோடு வாய் கொடுக்கத் தைரியம் இல்லை; பேசாமல் நானும் சாப்பிட்டேன்."

நடு நடுவே அவர் பெருமூச்சு வாங்கிக்கொண்டே சொன்னர். அவர் சாப்பிட்ட கதையை முடித்தவுடன், "போதும்; பிறகு பேசிக்கொள்ளலாம்; சிரமமாக இருக்குமே" என்றேன்.

"இந்த விஷயம் அவ்வளவு முக்கியம் அல்ல; நான் சொல்ல வந்த சமாசாரமே வேறு" என்றார் அவர்.

"கொஞ்சம் சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்களேன்."

"அதற்காகத்தான் இதைக் கேட்கச் சொல்கிறேன். பாரதியார் அன்றைக்கு யோகசக்தியைப் பாடிக் காட்டினார். ஆஹா! எத்தனை உத்ஸாகம்!"

எங்களைப் பார்த்துப் பேசிக்கொண் டிருந்த குவளைக் கிருஷ்ணமாசாரியார் தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். ஒரு நிமிஷநேரம் அப்படி இருந்துவிட்டு மறுபடியும் எங்களை நோக்கும்போது கண்ணைத் துடைத்துக் கொண்டார். அவர் உணர்ச்சி வசப்பட்டபோது இப்படிச் செய்வதைப் பல முறை பார்த்திருக்கிறேன்.

துக்கம் தொண்டையை அடைத்தது. ஒரு மிடறு எச்சிலை விழுங்கிக்கொண்டார்.

"விண்ணு மண்ணுந்தனி ஆளும்—எங்கள்
வீரை சக்திநின தருளே—என்றன்
கண்ணுங் கருத்துமெனக் கொண்டு—அன்பு
கசிந்து கசிந்து கசிந்துருகி"

என்று பாட ஆரம்பித்துவிட்டார்.

"என்ன இது? பாட அல்லவா ஆரம்பித்து விட்டீர்கள்? உங்களுக்குச் சக்தி இல்லையே! வேண்டாம். நிறுத்துங்கள்."

"பாரதியார் பாட்டைச் சொல்லும்போது உயிர் போனால் போகட்டுமே; அதைக் காட்டிலுமா வேறு ஆனந்தம் இருக்கப் போகிறது!"

அந்த வார்த்தைகளிலேதான் எத்தனை ஆர்வம்! பாரதிப் பித்துக்குத்தான் எத்தனை வன்மை!

அவர் பதினைந்து நிமிஷம் யோகசித்தியிலிருந்து பல பாடல்களைச் சொல்லித்தான் நிறுத்தினார். அவர்

எங்களுக்காகவா சொன்னார்? இல்லை, இல்லை; தமக்காகவே, தமது இன்பத்துக்காகவே, அந்தப் பழைய காட்சிகளை உள்ளத்திலே கண்டு அநுபவிப்பதற்காகவே அவர் பாடினார்.

"நான் ஏழை; அறிவில்லாதவன். அவர் எனக்கும் தமது செய்யுட்களிலே ஒருஸ்தானம் கொடுத்திருக்கிறார். 'கிருஷ்ணா, பொருட் செல்வம் அழிந்துவிடுமடா; கவிச் செல்வம் தருகிறேன் உனக்கு' என்று சொல்லி யிருக்கிறார்..." இந்த வார்த்தைகளைக் குவளைக் கிருஷ்ண மாசாரியாரோடு பழகிய யாவரும், ஒரு முறையல்ல, பல முறை கேட்டிருப்பார்கள்; இந்த வார்த்தைகளை அவர் சொல்லும்போது அவருக்கு இருந்த சந்தோஷத்துக்கு ஈடும் உண்டோ?

"சரி, போய்வாருங்கள்; உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று நான் சொல்லி ரிக்ஷா வில் ஏற்றினேன்.

"இந்தச் சரீரமே அநித்தியமென்றால் அதை ஒட்டிய அவஸ்தைகள் நித்தியம் ஆகுமா? - என்று பாரதியார் அடிக்கடி சொல்வார். நான் போய்வருகிறேன்."

அவர் போவார், வரமாட்டாரென்று எங்களுக்குப் பட்டது; அவர் உடம்பு, மலைபோல இருந்த சரீரம், கரைந்து தளர்ந்து போனதிலிருந்து அப்படி நினைக்க வேண்டியிருந்தது. நாங்கள் நினைத்தபடியேதான் நடந்தது: அவர் ஆஸ்பத்திரிக்குப் போனார்; பிறகு வரவே இல்லை. பாரதியார் வந்தால் வருவார்.

# பூரண தரிசனம்

ஒரு பண்டிதர் ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களிடம் பாடம் கேட்பதற்காக வந்தார். வந்தவருக்குச் சங்க நூல்களையும் தொல்காப்பியம் முதலிய பெரிய இலக்கணங்களையும் ஐயரவர்களிடம் கேட்டு மிகவும் நுண்மையான ரகசியங்களையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது ஆசை. ஆகவே புறநானூறோ அகநானூறோ தம்முடைய அறிவுப் பசிக்கு ஏற்ற விருந்தாக அமையப்போகிறது என்று எதிர்பார்த்திருந்தார். அவர் வித்துவான் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர்.

"பிரபந்தங்கள் படித்திருக்கிறீர்களா?" என்று தமிழ்ப் பெரியார் பண்டிதரைப் பார்த்துக் கேட்டார்.

"பரீட்சைக்கு உள்ள பாடங்களைத்தான் படித்திருக்கிறேன். அவ்வளவாக அவைகளில் நாட்டம் செல்லவில்லை. சங்க நூல்களிலேதான் பிரியம் உண்டாகியிருக்கிறது" என்றார் பண்டிதர்.

"ஆகையால் உங்களுக்குப் பிரபந்தங்களின் அருமையையும் எடுத்துக் காட்டினால் அவைகளைப் படிப்பீர்களென்று நினைக்கிறேன். நாளை முதல் அஷ்டப்பிரபந்தம் படிக்கலாம்" என்று நயமாகச் சொன்னார், தமிழ் வள்ளல்.

பண்டிதர் இதை எதிர்பார்க்கவில்லை. 'அஷ்டப் பிரபந்தம் படிக்க ஐயரவர்களிடம் வரவேண்டுமா என்ன?' சங்க நூல்களை உலகுக்குத் தந்த இப் பெரியாரிடம் அந்த நூல்களிலுள்ள ரகசியங்களை அறிவதுதானே முறை?' என்று அவர் எண்ணி மயங்கினார். 'அஷ்டப் பிரபந்தத்தைப் பாடம் கேட்டால் அடுத்தபடி வேறு

பிரபந்தங்களையும் கேட்கச் சொன்னால் சங்க நூற் சோலைக்குள் புகுவது எப்போது?' என்றுகூட அவர் கவலை அடைந்திருக்க வேண்டும்.

ஐயரவர்கள் அவருடைய உள்ளத்திலே ஓடிய எண்ணங்களை அளந்து அறிந்தவர்களைப்போலச் சொல்லத் தொடங்கினார்கள்: "தமிழில் நூலுக்குப் பஞ்சமே இல்லை. ஆயிரக்கணக்கான பிரபந்தங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு ருசி. அந்த ருசியை அறிவதற்குச் சிறிது சிரமப் படவேண்டும். எவ்வளவு உலாக்கள், எவ்வளவு தூதுகள்! படிப்பவர்கள் இல்லாமல் எல்லாம் மங்கி மறைந்து உயிரை விட்டுக்கொண் டிருக் கின்றன" என்று சில நிமிஷங்கள் பிரபந்தங்களின் அருமையைச் சொன்னார்கள்.

பண்டிதர் இந்தப் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டு அமைதியாக நின்றார்; விடைபெற்றுச் சென்றார். மறு நாள் வரவில்லை; அதற்குப் பின்பும் வரவில்லை. பிரபந் தங்களைப் பாடம் கேட்பதற்காக ஒரு வித்துவான் அருமையான காலத்தை வீணாக்கலாமா என்ற கருத்தி னாலேயே அவர் வராமல் இருந்து விட்டார்.

*  *  *  *

புதுக்கோட்டைக்கு அருகில் குடுமியா மலை என்ற ஒரு ஸ்தலம் இருக்கிறது. அங்கே மஹேந்திர வர்ம பல்லவன் காலத்தில் அமைக்கப்பட்ட சாஸனமொன்றில் பண்டைக் காலத்துச் சங்கீத முறை விளக்கப்பட் டிருக்கிறது. அதைப் பார்ப்பதற்காகவும் அந்த ஆலயத் தின் சிற்பச் சிறப்பைக் கண்டு மூர்த்திகளைத் தரிசித்து வருவதற்காகவும் ஐயரவர்கள் சில அன்பர்களுடன் ஒரு முறை சென்றார்கள்.

கோயில் மிகப் பழையது. பழைய சிற்பங்களும் பழைய சாஸனங்களும் நிரம்பியது. தரிசனம் செய்து கொண்டபின்பு, "இந்தக் கோயிலில் தாசிகள், பரிசாரகர்,

சுயம்பாகிகள் முதலியவர்கள் இருக்கிறார்களா?" என்று தமிழ்வள்ளல் விசாரித்தார். "எல்லாரும் இருக்கிறார்கள்" என்று விடை வந்தது. "இதோ வந்திருக்கிறாளே, இவள் தான் இக்கோயிலில் பணி செய்யும் தாசி" என்று ஓர் அன்பர் சுட்டிக் காட்டினார். வயசு முதிர்ந்த அந்தப் பெண்மணி நாணிக் கோணிக்கொண்டு கம்பத்தருகில் நின்றுகொண் டிருந்தாள்.

ஐயரவர்களுக்கு அவளைக் கண்டதும் ஏதோ புதிய பொருளைக் கண்டாற்போன்ற உத்ஸாகம் ஏற்பட்டது. "ஏன் அம்மா, இந்தக் கோவிலுக்கு உலா இருக்கிறதா? உனக்கு வருமா?" என்று கேட்டார்கள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "லாலி, கட்டியம் தெரியும்" என்று சொன்னாள்.

"அவைகளைச் சொல்லு" என்று சொல்லி அவள் பாடப்பாட அவற்றைக் குறித்துக் கொள்ளச் சொன்னார்கள். பாட்டு அதன் இயல்பான உருவத்தில் இல்லை. இடையிடையே சிதைந்தும் குறைந்தும் இருந்தது. பல வார்த்தைகளின் உருவம் இன்னதென்றே தெரியவில்லை. அந்தப் பெண்மணிக்கு அவளுடைய தாய் அந்தப் பாட்டைச் சொல்லிக் கொடுத்தபோது உருத்தேய்ந்து அரைகுறையாக அது இருந்திருக்க வேண்டும். அவள் தன் மகளுக்கு அதைக் கற்றுக் கொடுக்கும்போது அது பின்னும் குற்றுயிரும் குலையுயிருமாகப் போய்விடும் என்பதிலே சந்தேகமே இல்லை.

அருகில் உள்ளவர்கள், "இந்தக் கிழவி சொல்லும் அபத்தமான பாட்டிலே என்ன இருக்கப் போகிறது!" என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டு நின்றார்கள். ஐயரவர்களோ அவள் கூறும் ஒவ்வொரு சொல்லையும் ஆவலாகக் கேட்டுப் பல முறை சொல்லச் சொல்லி ரஸித்தார்கள்.

"உலா என்னும் பிரபந்தங்களை இவர்களைப் போன்ற ருத்திர கணிகையர் பாடி வருவதும் சம்பிரதாயம்.

அநேகமாக எல்லா ஸ்தலங்களுக்கும் உலா இருக்கும். முன்பெல்லாம் ருத்திர கணிகையர்கள் ஸ்தல சம்பந்தமான பாட்டுக்களைச் சிரத்தையாகப் பாடி வந்தார்கள். அந்தப் பாட்டுக்களால் பல புதிய விஷயங்கள் தெரிய வரும். இப்போது வழங்கி வரும் வடமொழிப் பெயர்களுக்கு உரிய தமிழ்ப் பெயர்களை அந்தப் பாடல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். யாரும் கவனிக்காமையால் இந்த மாதிரி ஆயிரக் கணக்கான பாடல்கள் மடிந்து போய் விட்டன" என்று உடனிருந்தவர்களிடம் தம்முடைய ஆராய்ச்சி அநுபவத்தை விளக்கினார்கள்.

*　　　*　　　*　　　*

இப்படியே ஐயரவர்கள் பழம் பாடல் எதுவாக இருந்தாலும் சேகரிப்பதிலும் படிப்பதிலும் பாடம் சொல்வதிலும் ஆர்வமுடையவர்கள். சங்க நூலின் இன்சுவையையும் கம்ப ராமாயணம் போன்ற காவிய ரத்தினங்களின் ரஸத்தையும் தேக்கித் திளைத்த ஐயரவர்களுடைய உள்ளத்தில் இந்தச் சிறு நூல்களும் குறை நிரம்பிய பாடல்களும் எவ்வாறு இடம் பெறுகின்றன வென்பது முதலில் எனக்குப் பெரு வியப்பாகத்தான் இருந்தது. அவர்களோடு பழகப் பழக உண்மை புலனாயிற்று. அவர்கள் தமிழின் முழுப் பொலிவையும் உணர்ந்தவர்கள்; தமிழ் மொழியின் முழு உருவத்தையும் கண்டு களிப்பவர்கள். தமிழ்த்தாயின் திருவுருவத்தில் ஒவ்வோர் அணுவையும் மாசு துடைத்து அலங்கரித்து அழகு பார்க்கும் ஆவலுடையவர்கள்.

அழகிய தெய்வ விக்கிரகத்துக்குப் பூசை செய்பவன் நகசிகை பரியந்தம் ஒவ்வோர் அங்கத்தையும் மலர் தூவி வழிபடுவதில்லையா? அருள் கொழித்துத் தண்ணளி கொப்புளிக்கும் கண்களிலே மனம் பறிகொடுக்கும் பக்தன் திருமேனியின் மற்றப் பகுதிகளைப் புறக்கணித்தா விடுகிறான்? அந்தத் திருமேனியில் ஒவ்வோர் ரோமக் காலிலும் தெய்வத்தன்மை நிரம்பியிருப்பதை அவன்

உணர்கிறுன். ஆதலால் தனக்குப் பற்றுக் கோடாகிய செந்தாமரைத் திருவடிகளைப் பூசிக்கும்போது அவற்றி லுள்ள நகத்தையும் அணிசெய்கிறுன். திருமுடியைப் புனையும்போது அங்குள்ள சிகையையும் மலரிட்டு அருச் சிக்கிறுன்.

ஐயரவர்கள் தமிழ்த் தெய்வத்தின் திருக்கோலம் முழுதும் கண்டவர்கள். அவர்களுக்கு விலக்கான பகுதி ஒன்றும் இல்லை. தொல்காப்பிய ஆராய்ச்சியிலே பல நாட்களைக் கழித்து உண்மை உணருகையிலே அவர்க ளுடைய உள்ளம் பெருமிதத்தோடு ஊக்கம் பெற்றது; தம்மிடம் வந்தவர்கள்பால் சல்லாபம் செய்யும்போது அநா யாசமாக, "தாட்டோட்டுக் கேற்ற கலிகாலம் ரத்னசபா பதியே", "தாடிக்குப் பூக்கட்ட லாமோ இரத்ன சபாபதி யே" என்று ரத்னசபாபதி மாலைப் பாடல்களைச் சொல்லும் போதும் அவ்வுள்ளம் தமிழினிமையை உணர்ந்து இன் பத்தை அடைந்தது. ஆயினும், இது முகம், இதுசிகை, இது திருவடி, இது நகம்' என்று வரிசையறியும் திறனும் அவர்களிடம் இருந்தது. அதனுல் ஒவ்வொன்றையும் அதனதன் தகுதியறிந்து மதிப்பிட்டு ரஸிக்கும் இயல்பிற் சிறந்து விளங்கினுர்கள்.

ஏட்டிலிருந்தாலும் சரி, அச்சுப் புஸ்தகமானுலும் சரி, பண்டிதர் சொன்னுலும் சரி, பச்சைக் குழந்தை சொன்னுலும் சரி, தமிழாக இருந்தால் அதைக் கூர்ந்து கவனிக்கும் பண்புக்கு வேறுபெயர் ஒன்று வேண்டு மென்ருல் ஐயரவர்களென்று சொல்லி விடலாம். தமிழ்த் தெய்வத்தின் பூரணத் திருக்கோலத்தைத் தரிசித்தவர்கள் அவர்கள். அவர்களை நினைவு கூர்ந்து கொண்டாட வேண்டுவது தமிழர் கடமை.

# கூத்து வாத்தியார்

பள்ளர்களுக்குக் கூத்துச் சொல்லிக் கொடுக்கும் வாத்தியார் சாமிநாத படையாச்சி. வாயிலே உள்ள பற்களெல்லாம் விழுந்து விட்டாலும் பேச்சிலும் பாட்டிலும் 'ராஜபார்ட்டின்' முறுக்கு இருக்கிறது.

நாடக மேடை போய்ச் சினிமா வெள்ளம் உலகத்தை யெல்லாம் அமிழ்த்தியிருக்கும் இந்தக் காலத்தில் எங்கே பார்த்தாலும் சினிமாப் பாட்டைத்தான் கேட்கிறோம். சங்கீதக் கச்சேரியில் பொது ஜனங்கள், எங்கேயோ சினிமாவில் கேட்ட பாட்டைப் பாடவேண்டுமென்று வித்துவானை ஹிம்ஸிக்கிறார்கள். நாட்டுக் குள்ளே சிற்றூரில் மாடுமேய்க்கும் சிறுவனிடம் போய், "உனக்கு ஏதாவது பாட்டுத் தெரிந்தால் சொல்லப்பா" என்று கேட்டால் அவன் எதைச் சொல்கிறான் தெரியுமா? சினிமாப் பாட்டைத்தான்.

ரெயிலில் போனால் பிச்சைக்காரர்கள் தம்முடைய காக்கைக் குரலிலே எத்தனை பாட்டுக்களைப் பாடுகிறார்கள்! வாழ்க்கை புயலாகிவிட, அந்தப் புயலில் அகப்பட்டுக் குணமும் நிலையும் குலைந்து திரியும் பெண்கள் எவ்வளவு பேர் தம்முடைய மெல்லிய குரலை வன்மையாக்கிக் கொண்டு பாடுகிறார்கள்! கையிலுள்ள டிகிரிக்கட்டை கணத்துக்குக் கணம் 'கிட்ர் கிட்ர்' என்று ஒலிக்கத் தாளம் போட்டுப் பாடும் சிறு பையன்கள் எத்தனை பேர்! தம்மை இந்த நிலையில் வைத்திருக்கும் வயிற்றைப் பழிவாங்குபவர் போல அதன்மேல் மிருதங்கம் வாசித்துக் காய்ப்புக் காய்க்கும்படி செய்து, காண்பவர்களுடைய இரக்கத்தை உசுப்பிவிடும் பாலகர்கள் எவ்வளவு பேர்! கும்பகோணத்திலிருந்து மாயவரம் வரையில் டிக்கட் வாங்கிக்கொண்டு

பகலில் பிரயாணம் செய்து பாருங்கள். இவ்வளவு காட்சிகளையும் காணலாம்.

இவ்வளவு பேர்களும் பாடுகிறார்கள்; ஆனால் எல்லாம் சினிமாப் பாட்டுத்தான். எங்காவது தப்பித் தவறி ஒரு நாடோடிப் பாட்டுக் கிடைக்குமோ என்ற ஆவலோடு அவர்களுக்குக் காணிக்கை செலுத்திப் பார்த்தேன்; உருவம் தேய்ந்து வெறும் சப்தமாத்திரமாயிருக்கும் சினிமாப் பாட்டுத் துணுக்குகளைக் கேட்டது தான் மிச்சம்! "சே! என்னடா இது! எல்லாம் சினிமா உலகமாகிவிட்டது" என்று எண்ணிச் சோர்ந்தேன்.

எனக்கு உயிர் வரச் செய்தான் சாமிநாத படையாச்சி. திருவிடைமருதூரில் பச்சையப்ப முதலியார் தெருவில் ஒரு மிராசுதார் வீட்டில் இராக் காவற்காரனாக வேலை பார்க்கிறான். அவனிடம் சரக்கு இருக்கிறதென்பதை அந்த மிராசுதாராகிய நண்பர் சொல்லவே அவனுடைய உதவியை நாடினேன்.

'பள்ளர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் நம்முடைய பாட்டில் இவர்களுக்கு என்ன ரஸம் இருக்கப் போகிறது!' என்று அவன் நினைத்திருக்கலாம். நாணத்தோடு வந்தான். வணக்கத்துக்கும் குறைவில்லை.

"சும்மா சொல்லு; உன் பாட்டைக் கேட்கத்தான் நான் நெடுந்தூரம் பிரயாணம் செய்து வந்திருக்கிறேன். உடைப் பெடுத்துக்கொண்டதனால் ரெயில் நேரே வரவில்லை; ஈரோட்டைச் சுற்றி வந்திருக்கிறேன்" என்று சொன்னேன்.

"சொல்லுகிறேன்" என்று ஒப்புக்கொண்டான். அவனுடைய எசமானுக்குமுன்னே பாட்டுக்களைச் சொல்வதற்கு முதலில் அவனுக்குத் துணிவுண்டாகவில்லை. "சொல்லுடா சொல்லு; இவர் உன் பெயரைப் பத்திரிகைகளில் போடுவார்" என்று எசமான் உத்தரவு கொடுத்தார். அப்புறம் ஆரம்பித்து விட்டான் சோனாமாரியாக.

"என்ன பாட்டு வேண்டும்?" என்று கேட்டான்.

"சினிமாப்பாட்டு வேண்டாம். வேறே என்ன என்ன தெரியும்?" என்று முதலிலே அணைகோலிக் கொண்டேன்.

"எனக்கு நாடகங்களெல்லாம் தெரியும். எரிந்த கட்சி, எரியாத கட்சி எல்லாம் சொல்வேன். கப்பல் பாட்டு, முளைப்பாட்டு, குறவஞ்சி, ஏற்றப் பாட்டு......"

அவனுடைய அட்டவணையைக் கேட்பதிலேயே பொழுது போய்விட்டால் என்ன செய்வது என்ற பயத்தால், "முளைப்பாட்டைச் சொல்லு" என்றேன். கனைத்துக்கொண்டு கணீரென்று சொல்ல ஆரம்பித்தான்.

"சந்தேகம் இல்லாத தங்கமே-நானும்
தங்கிவிட் டாலது பங்கமே"

என்ற கண்ணியைச் சொன்னான். பின்னும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பல கண்ணிகளைப் பாடினான். தனித் தனியே பார்க்கும்போது அவற்றில் காதல், ஹாஸ்யம், வீரம் எல்லாம் இருந்தன.

குறவஞ்சி சொன்னான்; பந்தடி சொன்னான்; கப்பற் பாட்டுச் சொன்னான். சொல்லச் சொல்ல எழுதிக் கொண்டேன். எழுதிக்கொண்டது சரிதானா என்று பார்க்க நான் ஒரு தந்திரம் செய்தேன். ஏதாவது அடி தெரியாவிட்டால் அதற்கு முந்தின அடியைத் திருப்பிச் சொல்லச் சொல்வேன். அவனுக்குத் தனியே அதை எடுத்துச் சொல்லவராது. "அடியைப் பிடிடா பாரத பட்டா" தான். பாட்டை முதலிலிருந்து சொல்லி விடுவான். நான் சரிபார்த்துக் கொள்வேன்.

அவன் சொன்ன ஏற்றப்பாட்டு ஒரு வகையில் புது மாதிரியாக இருந்தது. அதில் விஷயம் கொஞ்சந்தான். ஏற்றச்சாலின் எண்ணிக்கையே பாட்டின் முக்காற் பகுதியை நிரப்பிவிடுகிறது. ஆனாலும் அது முஸ்லிம்கள் பாடும் தமிழ்ப்பாட்டாக இருந்தது.

*அந்தப் பக்கங்களில் வெற்றிலைக் கொடிக்கால் பயிரிட்டு ஜீவனம் செய்யும் பல முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அவர்கள் மதத்தால் முஸ்லிம்களே ஒழிய, பல விஷயங்களில் தமிழர் வாழ்க்கை வாழ்பவர்களே. அவர்களும் ஏற்றம் இறைக்கிறார்கள்; பாட்டுப் பாடுகிறார்கள். மற்றவர்கள் பிள்ளையாரை வழிபட்டால் அவர்கள் அல்லாவை வழிபடுகிறார்கள்; இதுதான் வித்தியாசம்.*

ஒருவன் தாண்டா அல்லா
உலகமெல்லாம் ஆள்வான்"
இருப்புலக்கைத் தூணு
துலுக்கப்பள்ளி வாசல்

*என்ற இரண்டடிகளே அவர்கள் மதத்தைப் புலப்படுத்தின. வேறு தெய்வங்களின் பெயர்கள் இல்லாமல் இருப்பதும் ஓர் அடையாளமே. பாட்டில் உள்ள சில அடிகளைப் பாருங்கள்:*

ஆதிபெரி யோனே ஆண்டவனே காவல்
ஆபத்து வராமல் அடியேனைக் காரும்.

* * * *

எட்டாத் துலையோ வற்றாக் கடலோ
ஓடிவாஎன் கண்ணே ஒருபதியா லொண்ணு.

* * * *

இருந்துபோவும் பெண்ணே நடந்தகளை தீர
மூக்குத்தியும் பொட்டும் மேற்கத்தியாள் போல.

* * * *

ஏழைவச்ச வாழை மகளைவச்சான் காவல்.
எண்ணங்கள் தழைக்க எண்பதியால் ரேண்டு.

* * * *

நாகப் பட்டணம்—வந்திறங்கும் கப்பல்
வந்திறங்கும் கப்பல்—கப்பல் சரக்கென்ன?
மஞ்சள் ஒரு தூக்கு—இஞ்சி ஒரு தூக்கு.

இந்தப் பாட்டில் மற்றொரு விசேஷம். முதலில் ஒன்று முதல் நூறுவரையில் ஏற்றச்சால் கணக்கும் பாட்டும் வருகின்றன; பிறகு அவரோகணமும் இருக்கிறது: மீட்டும் நூறிலிருந்து ஒன்றுவரையில் இறங்கி வருகிறது கணக்கு.

* * * *

நான் இவற்றையெல்லாம் இரவு ஒன்பது மணிக்குக் கேட்கத் தொடங்கினேன். சாமிநாத படையாச்சி சலிக்காமல் சொல்லிக்கொண்டே வந்தான். பொழுது போவதே தெரியவில்லை. என்னுடன் இருந்து கேட்ட நண்பர்களும் நானும் அவன் பாட்டோடு எங்கெங்கேயோ பிரயாணம் செய்தோம். கூத்து வாத்தியாராகையால் சில பாட்டுக்கள் பாடும்போது அவனை அறியாமலே சில அபிநயங்களும் செய்தான். "கேதார கௌளமென்று எழுதிக்கொள்ளுங்கள்" என்று நடு நடுவே அதன் ராகத்தைக் கூடச் சொன்னான். நான் ஏதாவது தவறிவிட்டால் என்ன செய்வது என்ற கவலை அவனுக்கு; வாத்தியாரல்லவா?

"இவருக்குக்கூட வாத்தியாராகி விட்டாயே!" என்று நண்பர் அவனைப் பரிகாசம் செய்தார். அந்த வார்த்தையிலே உண்மையும் கலந்துதான் இருந்தது.

இரவு இரண்டு மணிவரையில் கேட்டோம். கூத்து வாத்தியாருக்குத் தொண்டை கரகரத்தது. எவ்வளவோ காலமாகக் கட்டுக்கிடையாகக் கிடந்த பாட்டை ஒவ்வொன்றாக எடுத்து விடும்போது அவ்வளவு காலம் சும்மா இருந்ததற்குச் சரியான வேகத்தோடு வந்தது. அந்த வேகத்துக்குப் பிறகு தளர்ச்சி உண்டாவது இயல்பு தானே? அவன் தொண்டை இரும்பா? கல்லா?

"இதோடு நிறுத்திக்கொள்கிறேன்" என்று சோர்வோடு அவன் சொன்னபோதுதான் நான் அவனைத் தனியே பார்த்தேன். மனம் இரங்கியது. அதற்கு முன் குறச்சிங்கனாகவும், சிங்கியாகவும், ஏற்றக்காரனாகவும்

அவன் எனக்குத் தோன்றினன். பாட்டைத்தான் கவனித்தேனே யொழிய அதை ஒருவன் சொல்கிறுன், சொல்லுபவனுக்குச் சிரமம் உண்டாகும் என்ற எண்ணமே தோற்றவில்லை.

அவனும் உத்ஸாகத்தோடுதான் சொன்னுன். நானும் பிறரும் இவ்வளவு சிரத்தையோடு பாட்டுக்களைத் தன்னிடம் கேட்போமென்று அவன் கனவிலும் நினைத்திருக்கமாட்டான்.

மிகவும் ஆவலோடு நாங்கள் கேட்பதை உணர்ந்த பிறகு அவனுக்கு உத்ஸாகம் ஏறியது. இப்போது களைத்துப் போனுன்.

"உனக்கு மிகவும் சிரமம். ஆனாலும் பெரிய உபகாரம்" என்று நான் சொன்னேன். "நாளைக்குச் சொல்லுகிறேன் மிச்சத்தை" என்று அவன் வாக்களித்தான்.

ஆனல் மறுநாள் அவனுக்கு ஜ்வரம் வந்துவிட்டது. அந்த ஜ்வரத்திற்கு நான் பொறுப்பாளி யென்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

நான் விடை பெற்று வந்துவிட்டேன். இதை எழுதுகையில் என் கண்முன் கையைக் கட்டிக்கொண்டு சாமிநாத படையாச்சி நிற்கிறுன்.

பாவட்டஞ் சோலைக்குள்ளே—நீலமயில்
வாய்விட்டுக் கூவுதையா—முருகா
வாய்விட்டுக் கூவுதையா!—அதைப்
பிடித்துத் தாருங்காணும்—திருத்தணி
மலையில் வேலவனே!
கல்லு மலைமேலே—கவுதாரி
மெள்ள நடக்குதையா—முருகா
மெள்ள நடக்குதையா—அதைப்
பிடித்துத் தாருங்காணும்—திருத்தணி
மலையில் வேலவனே!

என்ற பாடல்கள் கணகணவென்று என் காதில் ஒலிக்கின்றன.

# இலக்கியக் கட்டுரை

தமிழில் இலக்கியக் கட்டுரைகள் எழுதிவர வேண்டுமென்று பத்திரிகாசிரியர் கேட்கிறார். ஆங்கிலம் முதலிய பாஷைகளில் இலக்கியக் கட்டுரை என்பதற்கு உள்ள பொருள் வேறு. தமிழர் கொள்ளும் பொருள் வேறு. எந்த விஷயத்தைப் பற்றியும் ரஸமாக எழுதினால் அதுவே இலக்கியக் கட்டுரையாகும். தமிழிலோ இலக்கியத்தைப்பற்றிய கட்டுரை எழுதினால்தான் அது இலக்கியக் கட்டுரையாகிறது. இலக்கியமென்றால் என்ன? இதைப் பற்றித் தமிழிலே வரையறையான கோட்பாடு இல்லை. இலக்கணமல்லாத நூல்களெல்லாம் இலக்கியங்களே. நூல்களைப்பற்றி ஆராய்ந்து எழுதினால் அதை இலக்கியக் கட்டுரையென்று தமிழர் சொல்லுகிறார்கள். மற்ற நாட்டார் எதை ஆராய்ச்சி யென்று சொல்லுகிறார்களோ அதைத்தான் இவர்கள் இலக்கியக்கட்டுரை யென்கிறார்கள். புறநானூற்றிற் கண்ட அரசியல், அகநானூற்றிற் கண்ட காதல்வாழ்வு, சங்க நூல்களிற் கண்ட பெண்கள் நிலை - இப்படி நூல்கள் சம்பந்தமாக ஆராய்ந்து எழுதினால் தமிழர் யாவரும் இதுதான் இலக்கியக் கட்டுரையென்று கூடித் தலை யசைப்பார்கள். ஆங்கிலத்திலுள்ளவைபோல முருங்கைக்காய் சாம்பார், ரவிக்கைச் சண்டை, நடை, உரையாடல் முதலிய விஷயங்களை எழுதினால் அவைகளுக்கு வேறு வேறு பெயர் வைத்துவிடுகிறார்கள். முருங்கைக்காய் சாம்பாரை அடிப்படையாக வைத்து மனிதனுடைய சுவை யுணர்ச்சியைப்பற்றி ஹாஸ்யத்தோடு ஒரு கட்டுரை எழுதிப் பத்திரிகைக்கு அனுப்பினால் அது விகடப் பகுதியிலே பிரசுரிக்கப்படு

கிறது. உலாவப் போதலைப்பற்றி எழுதினால் ஆரோக்கியப் பகுதியிலே சேர்த்துக் கொள்ளுகிறார்கள். கதையாக எழுதினாலோ, இலக்கியமே இல்லை, கதையென்று சொல்லி விடுகிறார்கள். ஆங்கிலத்தில் மட்டும் இவை இலக்கியங்களாவதேன்? தமிழருக்கு இவை, இலக்கியத் துக்குப் புறம்பாக நிற்பதேன்?

முருங்கக்காய் சாம்பாரைப்பற்றி எழுதுவதை ஹாஸ்யத்திலேதான் சேர்க்க வேண்டுமென்று தமிழர் வற்புறுத்துகிறார்கள். அதே விஷயத்தைப் பாட்டாகப் பாடி விட்டால் அது கவியாகி இலக்கியப் பகுதியில் புகுந்து கொள்ளுகிறது. கதையோ, வேடிக்கையோ ஏதானாலும் சரி, பாட்டாகிவிட்டால் அதற்கு இலக்கியமென்னும் பெயர் கொடுக்கப்படுகிறது. ஏன் இந்த வித்தியாசம்?

தமிழருடைய இலக்கியம் விஷயத்தில் இல்லை; பாட்டிலேதான் இருக்கிறதென்று அதற்குள் நிச்சயம் செய்துவிடாதீர்கள்.

ஆராய்ச்சிக் கட்டுரையும், பாட்டும் இலக்கிய மென்பதனோடு அவர்கள் நிற்கவில்லை. சங்கநூற் செய்யுளிலே ஒன்றை வசனமாக எழுதுங்கள். அது இலக்கியப் பகுதியிலே சேர்க்கப்படுகிறது. "ஓகோ! அது பாட்டிலிருந்து வந்தது; இலக்கியத்தின் மாறுவேஷம்" என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அப்படியானால் முருங்கைக் காய் சாம்பார்ப் பாட்டு ஹாஸ்யத்தின் மாறு வேஷமல்லவா? அது மட்டும் வசனமாக இருந்தால் இலக்கியமாகாமல் பாட்டானால் மட்டும் இலக்கியமாகி விடுகிறதே. சங்கச் செய்யுள் பாட்டானாலும் வசனமானாலும் இலக்கியமாகவே இருக்கிறது. இந்தப் பக்ஷபாதம் எதற்கு?

உண்மைதான் என்ன? தமிழர்களுக்கு இலக்கிய உணர்ச்சியே இல்லையா? இலக்கியம் எழுதுபவர்களுடைய பூண்டே தமிழ்நாட்டில் அற்றுவிட்டதா?

இலக்கியக் கட்டுரை எழுதுவதென்பது அறிஞர்களுக்கு அவ்வளவு பிரமாதமான சங்கதியல்ல. விஷயங்

களைக் காரணகாரிய முறையோடு ஆராய்ந்து பார்ப்பவர்களுக்குத் தாங்கள் கருதியவற்றை அழகாக எழுதத் தெரிந்தால் அவர்கள் எழுதுவது இலக்கியக் கட்டுரை தான். வாசிப்பவர்களுக்குப் புரியாத பாஷையிலோ, தலை சுற்றும் வியவகாரங்கள் நிறைந்த முறையிலோ எழுதினால் அவற்றைப் பொதுவாகக் கட்டுரைகளென்று கூடச் சொல்லக்கூடாது.

கட்டுரை, கதை, கவி எழுதுவது கலைத்திறமை யுடையவர்களால்தான் முடியும். கதை இன்னது, கவி இன்னதென்பதைத் தமிழர்கள் இப்பொழுது ஒருவாறு அறிந்திருக்கிறார்கள். கதையைப்பற்றி அவர்களுடைய அபிப்பிராயம் நல்ல உருவத்தை அடைந்திருக்கிறது. அதற்குக் காரணம் சில பத்திரிகைகளேயாகும். கவி யென்றால் அதன் ஸ்வரூபமே வேறாக இருக்கிறதாதலின் அதையும் சுலபமாக அறிந்துகொள்கிறார்கள். தமிழில் இன்னும் வசனக்கவிதை வரவில்லை; ஆதலின் பேச்சுக்கும் எழுத்துக்கும் எத்தனை வித்தியாசம் இருக்கிறதோ அத்தனை வித்தியாசம் கவிக்கும் வசனத்துக்கும் இருக்கிறது.

கட்டுரைகள் இன்ன வென்பதைப் பற்றி யாரேனும் தமிழரைக் கேட்டுப் பாருங்கள். கதையும் கவியும் அல்லாத எல்லாம் கட்டுரைகளென்று அவர் சொல்வார். இரண்டாம் வகுப்பில் பையன் எழுதும் 'விளக் கெண்ணெ'யைப் பற்றிய 'காம்போஸீஷனும்' கட்டுரை தான்; தினசரிப் பத்திரிகையின் தலையங்கங்களும் கட்டுரை கள் தாம்; வ. வே. சு. ஐயர் எழுதிய 'காவியம்' என்பதும் கட்டுரைதான். "இவைகளில் இலக்கியக் கட்டுரை எது?" என்ற விஷயந்தான் அவர்களுக்குப் புரியாதது. இப்படியே தமிழ் நாட்டை விட்டுவைத்திருப்பது பெரிய பாவமல்லவா? அறிவாளிகள் இலக்கியக் கட்டுரைகளை எழுதாமல் எத்தனை நாள் இருக்கப் போகிறார்கள்?

ஒரு விஷயம்: இலக்கியக் கட்டுரைகளை எழுது கிறோமென்று எண்ணிக்கொண் டிருக்கும் இரண்டு வகை

யினர் இப்பொழுது இந்நாட்டில் இருக்கிறார்கள். ஒரு வகையார் பரம வைதிக கோஷ்டி. அவர்களுக்கு நிகழ் காலமென்றும் எதிர்கால மென்றும் இரண்டு இல்லை. எல்லாம் பழைய காலத்துச் சமாசாரந்தான். பொறுமை, பொறுமை, கற்பு, அஹிம்ஸை முதலிய விஷயங்களைப் பற்றி ஆயிரம் பாட்டுக்களை மேற்கோள் காட்டி எழுதிக் குவித்து விடுவார்கள். உலகம் சிருஷ்டியான காலந் தொடங்கி இன்றளவும் திருப்பித் திருப்பி அந்த விஷயங் களைப்பற்றியே எழுதிக்கொண் டிருக்கும் அந்த 'அப்பாவி' களுக்கு இலக்கியக் கட்டுரை இன்னது என்று படும்படி விளக்கிச் சொல்ல யாராலும் முடியாது.

மற்றொரு வகையார் அதிவிருஷ்டி வகையினர். தங்கள் கருத்து எதுவோ அதுதான் சிறந்ததென்று பிடி வாதத்தோடு எழுதுகிறார்கள். காரணங் காட்டிப் படிப்ப வருடைய மனசைக் கவ்வும்படி எழுதத் தெரிந்தாலும், கோணல் வழியிலே போகிறார்கள். கருத்துக்குச் சிறப்பே யொழியப் பாஷைக்குச் சிறப்பில்லையென்று சீர்திருத்த வாதம் செய்கிறார்கள். தங்கள் எழுத்திலேதான் 'ஜீவ சக்தி' ததும்புவதாகப் பறையடித்துக் கொள்கிறார்கள். ஆனால் பாவம்! அவர்கள் செய்யும் குற்றம் அவர்களுக்கே தெரிவதில்லை.

மேனாட்டு ஆசிரியர்களுக்கும் நம் நாட்டு எழுத் தாளர்களுக்கும் அடிப்படையான வித்தியாசம் ஒன்று உண்டு. அவர்கள் தங்கள் மொழியிலுள்ள இலக்கிய நூல்களைக் கரை கண்டவர்கள்; மரபு வழுவாமல் எழுதத் தெரிந்தவர்கள். நம் நாட்டிலோ எழுத்தாளர்களுக்குத் தமிழ் இலக்கியத்தின் ஒரு மூலைகூடச் சரிவரத் தெரியாது. அங்ஙனம் தெரியாததைப் பெருமையாகக் கூடப் பேசிக்கொள்ளுகிறார்கள். "என்னுடைய குழந்தை நாலெட்டுக்கூட நடக்கமாட்டான்; ரிக்ஷாவிலேதான் போவான்!" என்று பெருமை பேசிக் கொள்ளும் தாய் மாரும், "வீசம்படி அரிசிக்குமேல் நமக்குச் செல்வதில்லை"

என்று பீற்றிக்கொள்ளும் கனவான்களும் இருக்கின்ற இந்த நாட்டிலே பலஹீனங்களையெல்லாம் பெருமைப் படுவதற்கு உரியவையாகச் சொல்லும் மனப்பான்மை இருப்பது ஆச்சரியம் அல்ல.

ஒருவர் சொல்லுகிறார்: "என்ன ஐயா! உங்கள் பழைய தமிழ்ப் புஸ்தகத்தில் வீட்டைச் சந்திர மண்டிலத்தில் முட்டவிட் டிருக்கிறார்கள். சோலையை ஆகாய கங்கையில் மிதக்க விடுகிறார்கள். எங்கே பார்த்தாலும் பெண்கள் வருணனை! இந்த உபயோகமற்ற புஸ்தகங்களை மனுஷன் எப்படிப் படிப்பான்?" என்று அவர் குறை கூறும்பொழுது, "ஐயோ! இலக்கியங்களை இவர் காமாலைக் கண்ணோடல்லவா பார்த்திருக்கிறார்!" என்று இரங்கத் தான் வேண்டியிருக்கிறது. "நீங்களே இலக்கிய சிருஷ்டி செய்யத் தொடங்குங்களேன்" என்று சொல்லிவிட்டாலோ, "ஆமாம்" என்று சப்புக்கொட்டுகிறார். தமிழைத் துருப்பிடித்த பாஷையாக, தமிழ் இலக்கியத்தை மக்கிப் போன பண்டமாக எண்ணுகின்ற பெரியவர்களால் இனி நமக்கு விடிமோட்சம் வரப்போவதில்லை. தேச பக்தி யென்றும் பாஷாபிமானமென்றும் ஜபித்துக்கொண் டிருக்கும் சில அறிவாளிகள் கொஞ்சம் பழைய தமிழ்ப் புஸ்தகங்களைக் கசப்பிருந்தாலும் புரட்டிப் பார்க்கட்டுமே. அவை என்ன நம்மைக் கடித்துவிடுமா? தமிழிலுள்ள இலக்கியங்களின் பெயர்கூடத் தெரியாத எழுத்தாளர்கள் எத்தனை பேர் இந்தத் தமிழ்நாட்டில் 'ஆசிரியர்'களாக இருக்கிறார்கள்? அவர்கள் இலக்கியங்களிற் புகுந்து பார்க்கட்டும். தமிழ் மரபை உணர்ந்து புதுத் தமிழர் களுக்குத் தெரிவிக்கட்டும்! தமிழ் மரபு பிழையாமல் புத்தம் புதிய முறையில் எழுத முன்வரட்டும். அப்போது எத்தனை இலக்கியக் கட்டுரைகள் வெளிவரும்! எந்தக் கட்டுரை எழுதினாலும் இப்பொழுது ஆங்கிலத்தின் மணம் வீசும் அவர்களுடைய கட்டுரைகளில், அப் போது தமிழ் மணம் வீசுமென்பதில் தடையென்ன?

# எழுத்தாளர்

“உங்களோடு எனக்குப் பழக்கமாகிச் சுமார் பத்துவருஷம் இருக்கும் அல்லவா?”

“இருக்கலாம்.”

உடனே அந்த எழுத்தாளர் தம்முடன் வந்திருந்த நண்பரைப் பார்த்து, “பார்த்தீர்களா? இவ்வளவுநாள் பழக்கமிருந்தும் நான் அதை உபயோகப்படுத்தவில்லை. நான் ஓர் எழுத்தாளன் என்பதை ஸார் தெரிந்துகொண்டிருந்தால் என்னைத் தொந்தரவு செய்திருப்பார்” என்றார்.

வாஸ்தவத்தில் அவர் எழுத்தாளரென்பதை அவர் சொல்லத்தான் தெரிந்துகொண்டேன். என்னைப் பத்து வருஷ காலமாகத் தெரியுமென்ற வாக்குமூலத்திற்குத் தம்முடைய நண்பரைச் சாட்சி வைக்கும் இவருடைய நோக்கம் என்ன என்பதை நான் ஒரு கணத்தில் ஊகித்துக்கொண்டு விட்டேன்.

“ஏதாவது கதை எங்கள் பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறீர்களோ?”

அனுப்பிவிட்டு அதைப்பற்றிச் சொல்லவந்திருக்கிறாரென்று நான் அனுமானித்தது பிசகாய்ப் போய்விட்டது.

“என்ன ஐயங்கார் ஸ்வாமி, ஸார் சொல்வது காதில் விழுகிறதா? நான் இதுவரையில் கதை எழுதி அனுப்பாதது பிழையென்பதை எவ்வளவு நாஜூக்காக எடுத்துக் காட்டுகிறார்கள், பார்த்தீரா?”

“ஹஹ்ஹஹஹ்ஹா!” என்று ஐயங்கார் ஸ்வாமி சிரித்தார்.

"நீங்கள் ஏகப்பட்ட புனைபெயர்கள் வைத்துக் கொண்டு எழுதுகிறீர்களோ!" என்று எழுத்தாளர் அடுத்தபடி விசாரிக்கத் தொடங்கினுர்.

"ஏகப்பட்டது ஒன்றும் இல்லை. எப்பொழுதாவது அவசியம் நேர்ந்தால் புனைபெயரோடு எழுதுவதுண்டு."

"ஆமாம், ஆமாம், புனைபெயர் போட்டுக் கொள்கிறவர்களெல்லாம் சம்சயாத்மாக்கள். தாங்கள் எழுதும் சரக்கு நன்ருக இருக்கிறதோ, இல்லையோ என்று அவர்களுக்கே சந்தேகம். நன்ருக இருந்தால் நான்தான் என்று சொல்லிக்கொள்ளலாம். இல்லையாஞல் பேசாமல் இருந்துவிடலாம். இது ஒரு பெரிய சௌகரியம். அது இருக்கட்டும். நான் கதை எழுதுவதாக இருந்தால் புனைபெயர் போட்டுக் கொள்ளலாமா? சொந்தப் பெயரையே போட்டுக்கொள்ளலாமா? உங்கள் யோசனை என்ன?"

ஆள் கைகாரப் பேர்வழி; தாம் எழுத்தாளரென்பதை என்னை ஒப்புக்கொள்ளச் செய்துவிட்டதாகவும், அடுத்தபடி எங்கள் பத்திரிகையில் ஓர் இடம் நிச்சயமாக உண்டென்று நான் வாக்குறுதி கொடுத்துவிட்டதாகவுமல்லவா அவர் காட்டிக்கொள்கிருர்?

"உங்கள் இஷ்டம் போலச் செய்யலாம். எதற்கும் முதலில் புனைபெயர் போட்டுக் கொண்டால் நீங்கள் சொன்னபடி வாசகர்கள் கருத்தைச் சோதிக்கலாம். இதுவரைக்கும் ஏதாவது பத்திரிகையில் எழுதியிருக்கிறீர்களா?"

அவர் சிறிதாவது யோசிக்கவேண்டுமே! பதிலைத் தயாராக வைத்துக் கொண்டிருந்தவர் போல, "என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? என்னிடத்தில் இவ்வளவு அபிமானத்தோடு இருக்கும் உங்கள் பத்திரிகையை விட்டு விட்டு மற்றப் பத்திரிகைக்கு எழுதுவேனே? நன்ருகக் கேட்டீர்கள்!...என்ன ஐயங்கார் ஸ்வாமி, ஸார் பேசுவதன் ரகசியம் உமக்குத் தெரிகிறதா? வேறு பத்திரி

கையில் எழுதுவது அவ்வளவு உசிதமில்லை என்பதை எப்படி எடுத்துக் காட்டுகிறார்கள் பார்த்தீரா? இவர்கள் எழுத்தாளர் மட்டுமல்ல; சிறந்த பேச்சாளரென்பதையும் நான் வரும்போதே சொல்லவில்லையா?"

ஐயங்கார் ஸ்வாமி, "ஆமாம், ஆமாம்" என்று ஒத்து ஊதினார்.

"அதெல்லாம் சரி, புனைபெயரோடு எழுதுவதுதான் என்னைப் போன்றவர்களுக்கு ஏற்றதென்பதை வேத வாக்காக ஒப்புக்கொள்கிறேன். நான் கதை எழுதட்டுமா? கட்டுரை எழுதட்டுமா?"

"எது உங்களுக்குப் பிடிக்குமோ அதை எழுதுங்களேன்."

"எனக்குப் பிடிக்கிறதா? நீங்கள் சொல்லுங்கள், ஸார். உங்களுக்குப் பிடிப்பது எது சொல்லுங்கள்."

நான் என்ன பதில் சொல்வது? "எனக்குப் பிடிப்பது இங்கே முக்கியம் அல்லவே. வாசகர்களுக்குப் பிடிப்பது தான் அவசியம். அவர்களுக்குப் பிடிக்கும்படி கதையோ கட்டுரையோ எழுதி அனுப்பலாம்."

"அதுதான் கேட்டேன். வாசகர்களுக்கு எந்த மாதிரி எழுதினால் பிடிக்கும்? உங்களுடைய அநுபவம் அபாரம். கொஞ்சம் சொல்லுங்கள்."

'என்னடா, இது தொல்லையாய்ப் போய்விட்டது' என்று யோசித்தேன்.

"நீங்கள் எழுதி அனுப்புங்கள்; எங்கள் பத்திரிகைக்குத் தக்கதாக இருந்தால் பார்த்து வெளியிடுகிறேன். உங்களுக்கு அதிகச் சிரமம் தந்துவிட்டேன். போய் வாருங்கள்" என்று வலிய விடைகொடுத்தேன்.

அவர் அந்த விடையை லக்ஷ்யமே செய்யவில்லை. "நீங்கள் சொல்லும்போது, எழுதி அனுப்பாமல் இருப்பேனா? அவசியம் எழுதி அனுப்புகிறேன். கவனித்துக் கொள்ளுங்கள். கதை அனுப்புகிறேன். ரொம்ப ரஸமான

கதைகளை அனுப்புகிறேன். நீங்கள் இஷ்டப்படி மாற்றித் திருத்தி வெளியிடலாம். உங்களிடத்தில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. என் பெயரைமட்டும் போட்டு விடவேண்டாம். புனைபெயரையே போட்டுவிடுங்கள்.”

அவர் நிறுத்துகிறதாகக் காணவில்லை.

“ஒரு விஷயம் சொல்லவந்தேன், மறந்துவிட்டேன். கதை எத்தனை பக்கம் இருக்கலாம்? பெரிதாக வளர்த்தலாமா? குறுக்கிவிடலாமா?”

அட ராமா! இந்தத் தலைவலி நிற்காதா என்று மனசுக்குள் வேதனைப்பட்டுக் கொண்டேன். முகத்தில் மாத்திரம் சிரிப்பை வருவித்துக்கொள்ள வேண்டியிருந்தது. “சுருக்கமாகவே எழுதுங்கள்; போய் வாருங்கள்” என்று மறுபடியும் சொன்னேன்.

“என்ன ஐயங்கார்ஸ்வாமி? ஸார் எவ்வளவு யோசனைகள் சொல்லுகிறார்கள் பார்த்தீரா? எப்படியாவது நாலு வரி அந்தப் பத்திரிகையில் நான் எழுத வேண்டுமென்பதில் இவர்களுக்கு எவ்வளவு சிரத்தை பார்த்தீரா?”

“அட, படுபாவி!” என்று மனசுக்குள் வைதேன். வேறு என்ன செய்வேன்!

“சரி, போய்வருகிறேன். என்னை அபிமானித்ததற்குப் பலகோடி வந்தனம். இந்த ஐயங்கார் ஸ்வாமியிடமே இரண்டு நாட்களில் ஒரு கதை கொடுத்தனுப்புகிறேன். உங்கள் தயவை எதிர்பார்க்கிறேன். போய் வரட்டுமா?”

“ஆஹா; போய் வாருங்கள். நான் கவனிக்கிறேன்.”

அப்பாடா! அந்த இரண்டு பேரையும் வாசல் வரையில் கொண்டுபோய் விட்டுவிட்டு, வீதியில் இறங்கிப்போய் விட்டார்களென்ற நிச்சயத்தின் மேல் உள்ளே வந்து நாற்காலியில் பொத்தென்று உட்கார்ந்து ஒரு பெருமூச்சு விட்டேன்.

# பற்றற்ற பட்டணம்

**பட்டண** வாசத்தின் பிரயோஜனம் இப்போது நன்முகத் தெரிந்து போய்விட்டது. பட்டணத்துப் போக்கிரிகள், பட்டணத்துப் பித்தலாட்டம் என்று கிராமத்து மகாஜனங்கள் ஏசுகிருர்களே, அவர்களைக் கண்டால் எரிச்சல் எரிச்சலாக வருகிறது. என்ன இருந்தாலும் பட்டணம் பட்டணந்தான். உண்மையான ஞானம் வேண்டுமென்ருல், பற்றற்ற மனப்பான்மை வேண்டுமென்ருல், சமரஸமான ஒழுக்கம் படிய வேண்டு மானுல், பட்டணத்தில் மிகவும் சுலபமாக வந்துவிடும். கிராமத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு வருமா?

கிராமத்தில் நாலாந்தெருவில் கோடி வீட்டில் மூன்று மாதக் குழந்தைக்குக் காய்ச்சல் என்ருல், நம்முடைய பாட்டி முதலில் அந்த வீட்டுக்குப் போய்க் குழந்தையைப் பற்றி விசாரித்துவிட்டு வருகிருள். அடுத்தபடி வீட்டுக்காரி போய்விட்டு வருகிருள். இந்தப் பெண்ணினங்களுக்கே பற்று, அபிமானம், ஆசாபாசம் அதிகம். அவைகளைத் தங்களோடு நிறுத்திக் கொள்கி ருர்களா? "பாவம்! அந்தக் குழந்தை தவியாய்த் தவிக் கிறது. உங்களுக்குத் தெரிந்த வைத்தியன் யாரையாவது அழைத்துப்போய்க் கைபார்க்கச் சொல்லுங்கள்" என்று தொந்தரவு செய்து, நம்மையும் அனுப்புகிருர்கள். விஷயம் மிஞ்சிப்போய்க் குழந்தை கிராம ஜனத்தொகைக் கணக்கிலிருந்து அடிக்கப்படும்படியாகிவிட்டால், ஊரே கூடிப்போகிறது. எல்லோருக்கும் எங்கிருந்தோ, துக்கம், அழுகை, ஆறுதல், வேதாந்தம் எல்லாம் வந்து விடுகின்றன.

துக்கந்தானு? சந்தோஷ சமாசாரந்தான் ஆகட்டுமே! ஒரு கல்யாணம் கார்த்திகை யென்றுல், ஏதோ சுருக்கமாக, சம்பந்தியும் சம்பந்தியும் மாத்திரம் நாலு பேரை வைத்துக்கொண்டு செய்து விடலாமே யென்று சிக்கனம் பார்த்தால் முடிகிறதா? ஊர் முழுவதும் நாலு நாளைக்கு அடுப்பே மூட்டப்படாது; கண்டிப்பான உத்தரவு போடவேண்டும். இதுதான் சம்பிரதாயம்.

நம்முடைய மனைவி மக்களின் சுகதுக்கங்களை நாம் மேற்போட்டுக் கொண்டு வாழும் இந்தச் சம்சார பந்தத் தால்தான் பிறவி ஏற்படுகிறது என்று ஞான சாஸ்திரம் சொல்கிறது. வீட்டு விஷயத்தோடு நிற்காமல் ஊர் வியவகாரத்துக் கெல்லாம் ஈடுகொடுத்துக் கொண்டு எல்லாருடைய சுக துக்கங்களையும் தலையின்மேல் போட்டுக் கொள்ளும் கிராமவாசிகளைவிட அஞ்ஞானிகள், பந்தங்களில் கட்டுண்டவர்கள், யார் இருக்கிருர்கள்?

* * * *

பட்டண வாழ்க்கையைப் பாருங்கள். இந்த நகரத்தில் இந்தப் பத்துப் பதினைந்து வருஷங்களில் குறைந்தது பத்துவீடுகளாவது நான் ஜாகைமாற்றி யிருப்பேன். ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபக்ஷம் நாலுகுடித்தனம் இருக்கும். ஒவ்வொரு வீட்டிலும் நாங்கள் இருந்தபோது, எங்கள் வீட்டுக்கு யாராவது வந்தால், மற்றக் குடித்தனக்காரர்கள் எங்களுக்கு உறவினரா என்று கேட்பார்கள். அவ்வளவு அன்யோன் யம்; அப்பளாமோ வடாமோ இடுவதாயிருந்தால் அந்த நாலு குடும்பத்துக்கும் பொது உடைமை, அந்த வேலை. ருசி பார்ப்பதும் அப்படித்தான். என்னவோ சிறு காரணத் துக்காக அந்த வீட்டை விட்டு வரவேண்டி நேர்ந்து விட்டது. வீட்டைவிட்டு வரும் நிமிஷம் வரைக்கும் எனக்கு, "இங்கேயே தங்கிவிடலாமா?" என்றுதான் தோன்றிற்று. என் மனைவியோ அழுதே விட்டாள்.

எப்படியோ வேறு வீட்டுக்கு வந்துவிட்டோம். வந்த முதல் வாரத்தில் நாளுக்கு ஒரு தடவை என் மனைவி பழைய வீட்டுக்குப் போய்ப் பழைய சிநேகிதிகளோடு பேசிவிட்டு வரத் தவறவில்லை. அவர்களும் இங்கே வந்தார்கள். இப்படிஒரு மாதம் போக்கு வரத்து மாறி மாறி இருந்தது. பிறகு ஏதாவது விசேஷமாக இருந்தால் போகிறது வருகிறதென்று ஏற்பட்டது. அப்புறம் வரவர அந்த வீட்டார்களை அநேகமாக மறந்தேபோய் விட்டோம். புது வீட்டு மனிதர்கள் இருக்கிறார்களே; அவர்களுடைய சிநேகம் வந்துவிட்டதே. ஆனால் அந்தச் சிநேகிதம் மூன்று மாசந்தான் இருந்தது. வீட்டுக்காரன் யாரோ வியாபாரிக்கு வீட்டை மொத்தமாகப் பேசி விட்டபடியால் எல்லோருக்கும் நோட்டீசு கொடுத்து விட்டான். குடித்தனக்காரர்களெல்லாம் கலைந்த தேனீக்களைப் போல எங்கெங்கே வசதியோ அங்கங்கே ஜாகை பார்க்கலானார்கள்.

இப்படி ஒவ்வொரு வீட்டிலும் மனுஷ்யர்கள் சிநேகமாகிறதும், நெருங்கிப் பழகுகிறதும், வேறு வீடு போனபிறகு சில காலங்கழித்து அவர்களை மறந்து விடுகிறதும் எங்களுக்குப் பழக்கமாகிவிட்டன. ரெயில் சிநேகிதம் இல்லையா? அதற்கு அடுத்தபடியாக இந்தச் சிநேகிதத்தைச் சொல்லலாம். இந்தச் சிநேகிதத்தில் வஞ்சகம் உண்டா? இல்லை. லாபம் இல்லையா? இருந்தது. பழகினதில் ஒளிவு மறைவு உண்டா? அதுவும் இல்லை. ஆனால் அந்தப் பழக்கம் உள்ளத்தின் ஆழத்தில் பதிய வில்லை. ஜனகர் ராஜ்யபாரம் நடத்தினாரே அந்தமாதிரி யான வியவகாரம் இது என்று நான் சொன்னால் நீங்கள் ஒப்புக்கொள்ள மாட்டீர்களா? தாமரையிலைத் தண்ணீர் போன்ற நிலை என்று சொல்கிறேன்; அதுவும் உங்களுக்குச் சம்மதம் இல்லையா?

பட்டணத்து வாழ்க்கை இந்தப் பற்றற்ற தன்மையைக் கற்பிக்கிறதே; நாம் கொடுக்கும் குடிக்கூலி வீண்

போகவில்லை யென்று இதைக்கொண்டே சொல்லி விடலாமே!

*　　*　　*　　*

இன்னும் ஒரு பெரிய காரியம்: நம்முடைய தெருவில் அடுத்த வீட்டிற்கு அடுத்த வீட்டில் ஒரு கிழவி இருக்கிருள். அது நமக்குத் தெரியுமா? தெரியவே தெரியாது. அந்த வீட்டில் ஒரு கிழவர் சதா இருமிக் கொண்டே இருக்கிருரே, அதாவது தெரியுமா? ஹூ ஹூம்; சுத்தமாகத் தெரியாது. "நமக்கு அதைப் பற்றித் தெரிந்து என்ன வேண்டும்?" என்ற பற்றற்ற தன்மையில் அல்லவா ஊறிப் போயிருக்கிறோம்? சென்னபட்டணத்தில் ஒரு சின்னத் தெருவானாலும் சரி, வீட்டுக் கதவிலக்கம் தெரியாமல் புதிதாக வந்த ஒருவர், யாரை யாவது தேடிக்கொண்டு வரட்டும்; அவர் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் ஒவ்வொரு வீட்டிலும் என்ன விடை கிடைக்கும்? வந்தவர் ஞானத்தில் அபிமானம் உடையவராக இருந்தால், "அடடா! என்ன பற்றற்ற தன்மை! ஞானிகள் உடம்போடு வாழ்ந்தாலும் ஓட்டுக்கும் பழத்துக்கும் ஒட்டுதல் இல்லாத புளியம்பழத்தைப் போலப் பற்றின்றி இருப்பார்களென்று சொல்வார்களே, அந்த உண்மையை இங்கே பார்க்கிறோமே!" என்று வியந்து போவார். ஆம்; எல்லோரும், "தெரியாது; சிறிது போய் விசாரியுங்கள்; தெரியாது, மேலே விசாரியுங்கள்" என்று மாற்றி மாற்றிச் சொல்வதைக் கேட்டு, வந்தவர், ஒன்று, சென்னைவாசிகளின் பற்றற்ற தன்மையைப் பாராட்டவேண்டும்; அல்லது வீட்டு இலக்கத்தை மறந்து போன பாபத்துக்குப் பிராயச்சித்தம் என்னவென்று யோசிக்கவேண்டும்.

*　　*　　*　　*

ஸைனா பஜார், மூர்மார்க்கெட் போன்ற இடங்களில் வெளியூர்களிலிருந்து வந்தவர்களுக்குச் செல்வ நிலையாமையை உபதேசிக்கும் குருமார்கள் சிலர்

உலாவுகிறார்களே, அவர்களை உங்களுக்குத் தெரியுமா? உங்கள் பணப்பையின் கனத்தை அறிந்து நீங்கள் விண்ணப்பித்துக் கொள்ளாமலே அந்தப் பாரத்தை உங்களிடமிருந்து இறக்கிவிடும் மாயாவிநோத மனிதர்கள் அங்கே இருக்கிறார்கள். பையில் இருக்கும் பேனா மாயமாய் மறைந்து போகும்; கழுத்திலிருக்கும் சங்கிலி சொல்லிக்கொள்ளாமலே போய்விடும். இந்தத் திருவிளையாடல்களுக்கு உட்பட்டவர்கள் செல்வ நிலையாமையைத் தெரிந்துகொள்ளாவிட்டால் நாம் என்ன செய்வது!

'மரணத்தையும் கல்யாணத்தையும் சமமாக நோக்குகிறவன் மகா ஞானியாகிறான்' என்ற வார்த்தைகளை எந்தக் கீதாசாரியனாவது சொல்லியிருக்கிறானோ, இல்லையோ நான் அறியேன். வேறு வார்த்தைகளிலே இந்தக் கருத்து வரும்படி சொல்லியிருக்கலாம். பட்டணவாசிகள் இச் சமதிருஷ்டி படைத்தவர்கள். திருமண ஊர்வலம் பார்த்து விட்டு வருகையிலே தெருமரண ஊர்வலத்தையும் பார்த்துக்கொண்டு, சினிமாக் காட்சியைக் கண்டு களித்து, "நாடகமே உலகம்" என்ற பாட்டையும் முணுமுணுத்துக் கொண்டு வீட்டுக்குப்போய், விருந்தாளிகளைச் சுமுகமாக வரவேற்று விருந்துண்ணும் சென்னை வாசிகளைப் பார்க்கும் போது "ஆஹா! என்ன மகான்கள்! இவர்களுடைய திருஷ்டியில் மணமும் மரணமும், நாடகமும் வாழ்வும் சமமாக இருக்கின்றனவே!" என்று வியக்கத்தான் வேண்டும்.

தத்தாத்திரேயர் உலகத்தில் எங்கெங்கோ போய் யார் யாரிடமோ பழகி ஞானத்தைத் தெரிந்துகொண்டாராம். இந்தப் பட்டணத்துக்கு இப்போது வருவாரானால், ஒரு நிமிஷத்தில் ஞானத்தை அடைந்துவிடலாம்.

பற்றற்ற தன்மை பட்டணத்தின் பெருமை; ஆகவே புகழேந்திப்புலவர் மாவிந்த நகரத்தைச் சொல்வதுபோல் நாமும் இந்த நகரத்தை,

"ஞானக் கலைவாழ் நகர்"

என்று சொல்லலாமே!

# பழம் புஸ்தகங்கள்

என் வீட்டுக்கு ஒருநாள் வாருங்கள்; வந்து என் அலமாரிகளைப் பாருங்கள். எத்தனையோ விதமான புஸ்தகங்களை நான் வாங்கி அடுக்கி வைத்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

திருவல்லிக்கேணியில் கடற்கரைக்கு உல்லாஸமாகப் போய் வரலாமென்று என்றைக்காவது புறப்படுவேன். 'பைக்ராப்ட்ஸ்' ரோட்டில் வெகு வேகமாகப் போய்க் கொண்டே இருப்பேன். பஸ் நிற்கும் இடத்திற்கு எதிரே பழைய புஸ்தகங்களை விற்றுக்கொண் டிருக்கிறார்களே, அந்த இடத்தில் நின்றுவிடுவேன். பழைய புஸ்தகங்களில் மிகவும் அருமையானவை வந்திருக்கும் என்ற ஆவலோடு போய் ஒவ்வொரு கடைக்கு முன்பும் குத்திட்டு உட்கார்ந்துகொண்டு பார்ப்பேன். அநேகமாகப் பத்திரிகைகளும், பள்ளிக்கூடப் புஸ்தகங்களுமே அங்கே காட்சி அளிக்கும்.

"இந்தப் புஸ்தகத்தைப் பாருங்க சாமி: நல்ல புஸ்தகந்தானா? பார்த்துச் சொல்லுங்க" என்று எனக்குப் பழக்கமான அந்தக் கடைக்காரன் தடியாயிருக்கும் ஒரு புஸ்தகத்தை எடுத்து நீட்டுவான். 'புஸ்தகம், மிகவும் அருமையானது, இப்போது கிடைக்காதது, எவ்வளவு விலை சொன்னாலும் வாங்கிக் கொள்வார்கள்' என்று நான் சொல்வேனென்று அவன் எதிர் பார்ப்பான். பாவம்! அவனிடம் யாரோ ஏமாற்றிக் கொடுத்திருப்பார்கள். முப்பது வருஷத்துக்குமுன் அச்சான ஒரு டைரக்டரியாக இருக்கும் அது. பொட்டலம் கட்டத்தான் உபயோகப்படும். இந்த விஷயத்தைச் சொல்லிவிட்டால்

அந்த ஏழைக் கடைக்காரனுக்கு அதிக ஏமாற்றம் உண்டாகும். ஏதோ ஒரு விதமாகச் சொல்லிவிட்டு என் வேலையைக் கவனிப்பேன்.

அவனிடம் இப்படியுள்ள புஸ்தகங்களுக்கு இடையே சில ரத்தினங்கள் ஒளித்துக்கொண் டிருக்கும். அதன் அருமை அவனுக்கு எங்கே தெரியப் போகிறது? கருணை நிதி மாத்திரை விளம்பரப் புஸ்தகம், ஆதங்க நிக்ரக ஔஷதாலயக் கேட்லாக்கு, நவீன நாகரிக மங்கையர் ஒப்பாரி, தடபுடல் சிங்காரி முதலிய பல பட்டைச் சரக்குகளுக்கு நடுவே எங்கேயும் கிடைக்காமல் நான் அலைந்துகொண் டிருந்த விறலி விடுதூதின் பழம்பதிப்பு, நறுக்கு வேலையில்லாதது, கிடைக்கும்.

இந்த மாதிரியான அநுபவம் இருப்பதனால்தான் திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குப் போகும் வழியிலுள்ள பழம் புஸ்தகக் கடைகளை நான் பாராமல் அப்பால் போவதில்லை. உண்மையைச் சொல்லப்போனால் கடற்கரைக்குப் போவதென்று திட்டம் போட்டுப்போன பல தடவைகளில் பெரும்பாலும் பழைய புஸ்தகக் கடைகளை ஒவ்வொன்றாகச் சோதித்துப் பார்ப்பதிலேயே பொழுது போய்விடும். அங்கிருந்தபடியே கடற்பக்கம் தலையைத் திருப்பிப் பார்த்துவிட்டு வீட்டை நோக்கித் திரும்பி விடுவேன்.

இங்கிலீஷ், தமிழ் இரண்டு பாஷைகளில் எந்தப் புஸ்தகமாக இருந்தாலும் பார்க்காமல் விடுவதில்லை. வாங்குவதைப் பற்றிச் சொல்லவேண்டுமா? பீச்சிலிருந்து திரும்பிப் போகும்போது வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டு, சாத்துக்குடிப் பழங்களைக் கையில் எடுத்துப் பார்த்த அளவோடே போவேன். திரும்பி வரும்போது ஆரஞ்சு ஞாபகமே இராது; இருந்தாலும் அதற்குப் பணம் இராது. நான்தான் அந்தப் பணத்திற்கும் சேர்த்து அருமையான புஸ்தகங்களை வாங்கி விடுகிறேனே! எவ்வளவோ மலிவாகப் புஸ்தகங்களை

வாங்கி விடுவதாக ஞாபகம்! மறுநாள் அந்தப் புஸ்தகங்கள் கிடைக்குமா என்ன? 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்; காசுள்ளபோதே வாங்கிக்கொள்.'

எனக்கு எந்த மாதிரிப் புஸ்தகங்களில் பிரியம் அதிகம் என்று நீங்கள் தெரிந்துகொள்ள விரும்பினால், அது முடியாத காரியம். என் வீட்டில் பிரஞ்சுப் பாஷைப் பாலபாடம் இருப்பதைக்கொண்டு அந்தப் பாஷையில் ஓரளவு பிரதம முயற்சி செய்திருப்பேனென்று நீங்கள் எண்ணலாம். அதைக் கடற்கரைக் கடையில் பார்த்த போது 'இதை வாங்கி வைப்போமே! என்றைக்காவது படித்துப் பழக்கம் செய்து கொள்ளலாம். பண்ணிக் கொள்ள எண்ணும்போது புஸ்தகம் கையில் இல்லையே என்று அப்புறம் அவஸ்தைப் படக்கூடாது' என்று அதை வாங்கி உள்ளே பிரித்துப்பார்த்தேன். அலமாரியில் கொண்டு வந்து வைத்தேன். அப்புறம் அதைப் பார்க்க அவகாசம் எங்கே?

என் பக்கத்து வீட்டில் மலையாளி ஒருவர் இருந்தார். அவர் எனக்குக் கொஞ்சங் கொஞ்சம் மலையாளம் சொல்லிக் கொடுத்தார். எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரிந்ததுதான் தாமதம்: பழைய புஸ்தகங்கள் இருபது - எல்லாம் மலையாளம் - என் அலமாரியில் ஏறின.

ஒரு நாள் என்னுடைய அலமாரியை நிரப்பும் கைங்கரியத்தில் அதிகப் பங்குக்குப் பொறுப்பாளியாகிய ஒரு கடைக்காரன் 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி' பன்னிரண்டு தொகுதிகளை வைத்திருந்தான். எல்லாம் நன்றாகப் பைண்டு செய்தவை. "சாமி, இப்படியே எல்லாம் வாங்கிக் கொள்ளுங்கள். சல்லிசாகத் தருகிறேன்" என்றான். எவ்வளவோ அருமையான விஷயங்கள், அபூர்வமான படங்கள் இருக்குமாகையால் வாங்கிப் போடலாமென்ற ஆசை உண்டாகி விட்டது. விலை விசாரித்தேன். பேரம் பேசி ஒவ்வொரு தொகுதியும் அரை ரூபாய் என்று முடிவு கட்டிக் கடைக்காரன் தலையிலேயே அந்தப்

பாரத்தை என் வீட்டளவும் சுமக்கச் செய்து கொண்டு வந்து சேர்த்தேன். அந்தச் சுமையை அலமாரியிலே வைக்க முடியுமா என்ன? ஒரு பலகையில் அடுக்கி வைத்தேன்.

இவ்வளவு ஆசையோடு வாங்குகிறேனே, இவற்றை யெல்லாம் வாசிக்கிறேனு? - அது வேறு விஷயம். வாங்கும்போது, வாசித்து விட்டுத்தான் மறுகாரியம் பார்க்கிறதென்றே தீர்மானம் செய்து கொள்வேன். புஸ்தகம் அலமாரியில் ஏறிவிட்டால், "புஸ்தகம் நம்முடையது தானே? நிதானமாக வாசித்துக் கொண்டால் போகிறது" என்று எண்ணுவேன். போதாக்குறைக்கு அந்த எண்ணத்தைப் பலப்படுத்த, "கிணற்று நீரை வெள்ளங் கொண்டு போகுமா?" என்ற பழமொழி வேறு சேர்ந்து கொள்ளும். பல புஸ்தகங்களைப் பாதிப் பாதிப்படித்திருப்பேன்; பலவற்றை ஓர் அத்தியாயம் வாசித்திருப்பேன். புரட்டிப் பார்த்துவிட்டு வைத்தவைகளே அதிகம். அப்புறம் 'புஸ்தகம் நம்முடையது' என்ற திருப்தியோடு நிற்பதாகத்தான் இருக்கும்.

'இல்லஸ்ட்ரேடட் வீக்லி' வாங்கி ஐந்து வருஷ காலம் ஆயிற்று. யாரோ ஒரு வெள்ளைக்காரர் ஹிமாலய யாத்திரையைப்பற்றி ஒவ்வொரு வாரமும் அதில் எழுதியிருப்பதை ஒரு தடவை புரட்டிப் பார்த்தபோது தெரிந்து கொண்டேன். அது முதல் ஹிமாலய சம்பந்தமான புஸ்தகங்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். பழைய புஸ்தகக் கடைகளில் எந்தப் புஸ்தகம் வராது? ஹிமாலயத்தைப்பற்றிய புஸ்தகந்தானு? காண்டா மிருகத்தைப் பற்றிய புஸ்தகம் வேண்டுமா? கிடைக்கும். எறும்பைப் பற்றிய புஸ்தகம் வேண்டுமா? கொஞ்சம் பொறுமையோடு எறும்பு ஊர்வதுபோல ஒவ்வொரு வாரமும் போய்ப் பார்த்துத் தேடினல் அதுவும் கிடைக்கும். பெருக்கல் வாய்பாடு கிடைப்பது பெரிதல்ல; அதோடு சேர்ந்தாற்போல் திரிகோணமிதி புஸ்தகமும் வாங்கலாம். புதிய புஸ்தகங்களை விற்கும் கடைகளுக்குப் போய்க்

கேளுங்கள். இந்தச் சமதர்மம் இங்கே இருக்கவே இருக்காது. கம்ப ராமாயணம் வாங்கும் கடையில் தேசிங்குராஜன் கதை கிடைக்காது; "அதெல்லாம் குஜிலிக் கடையிலே கிடைக்கும்" என்று பரிகாசத் தொனியோடு அந்தப் புஸ்தகக் கடைக்காரர் சொல்வார்.

திருவல்லிக்கேணி பீச்சில் உள்ள புஸ்தக வியாபாரியிடம் இந்தச் சாதிப் பிரிவினை இல்லை. இல்லற லீலைகளை ஒன்றரையணுவுக்கு வாங்கிப் பாக்கியுள்ள அரையணுவுக்குப் பட்டினத்தார் பாடலை வாங்கலாம். 'மாதர்கள் ஒப்பாரி'யை வாங்கவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை; அதோடு அளவு சரியாக இருப்பதனால் கடைக்காரன் ஜோடி சேர்த்து வைத்திருக்கும் நான்மணிக்கடிகையை நாம் வாங்கிக் கொள்ளலாம்.

ஆகவே ஹிமாசலத்தைப் பற்றிய புஸ்தகங்கள் எனக்குக் கிடைக்காமலா போகும்? சில புஸ்தகங்கள் கிடைத்தன. ஹிமாசலத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையிலிருந்து புஸ்தகம் வாங்கியிருந்தால் எல்லாவற்றையும் படித்திருப்பேன். கடைக்காரன் சிபாரிசால் பத்திரிகைத் தொகுதியை வாங்கினேன்; அவற்றை வாங்கியதால் கொஞ்சம் புரட்டிப் பார்த்தேன்; நான் புரட்டிப் பார்த்ததால் ஹிமாலயக் கட்டுரை கண்ணில் பட்டது. அது கண்ணில் பட்டதால் ஹிமாலயப் புஸ்தகங்களைத் துழாவித் தேடிக் கண்டுபிடித்து வாங்கினேன். ஆறு வருஷங்களுக்கு முன், அதாவது 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி'வாங்குவதற்கு முன், ஹிமாலயத்தைப் பற்றி என்க்கு என்ன தெரியுமோ, அதுதான் இன்றைக்கும் எனக்குத் தெரியும். புஸ்தகங்கள் இருக்கின்றன; ஆனால் நான் படித்தால் தானே? ஹிமாசலந்தான் இருக்கிறதே; நான் போய்ப் பார்த்தேனா? அதுமாதிரிதான் இதுவும்.

கடிதாசுப் பஞ்சம் வந்தாலும் வந்தது; என் மனைவியினுடைய பிரார்த்தனை பலித்தது. நான் வாங்கின

பிரம்மாண்டமான பத்திரிகைத் தொகுதிகளைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. மெழுகும் பொழுதெல்லாம் அந்தப் புஸ்தகங்களை அப்புறப் படுத்தும் தொல்லையை அவளல்லவா அறிவாள்! "இந்தப் புஸ்தகங்களை எப்போது படிக்கப் போகிறீர்கள்?" என்று சிரித்துக் கொண்டே அவள் கேட்பாள். "அதற்குச் சமயம் வரும்" என்று நான் தீர்க்க தரிசனத்தோடு சொல்பவனைப் போன்ற தோரணையில் பதில் அளிப்பேன்.

காகிதப் பஞ்சம் வந்தது. போன வருஷம், வழக்கம் போல் எங்கள் வீட்டுக்குப் பழம் பத்திரிகை வாங்கிக் கொண்டுபோகும் பேப்பர்க்காரன் ஒரு நாள் வந்தான். அவன் கண்ணில் அந்தப் பத்திரிகைத் தொகுதிகள் பட்டன. கொஞ்சம் கொஞ்சமாக அவன் என் மனசைக் கலைத்து, விற்று விடலாமென்று எண்ணும்படி செய்து விட்டான். கையில் பன்னிரண்டு ரூபாயைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுத் தராசுக்குக்கூட வேலை வைத்காமல் கொண்டு போய்விட்டான். ஆறு ரூபாய் லாபம். என் மனைவிக்குத்தான் அதிக சந்தோஷம். "பெரிய குப்பை ஒழிந்தது!" என்று அவள் குதூகலித்தாள்.

ஒரு விதத்தில் லாபம் அடைந்ததாக நான் எண்ணினாலும் எதையோ பறிகொடுத்து விட்டாற் போன்ற உணர்ச்சி மாத்திரம் மாறவில்லை. 'நம்முடைய வீட்டில் ஆறு வருஷங்கள் இருந்து நாம் படித்தோமா? இப்பொழுதும் நம் வீட்டில் இருப்பதாக எண்ணிக் கொள்ளலாமே!' என்று சமாதானம் சொல்லிக் கொள்கிறேன். 'வேண்டுமானால் ஹிமாசலத்தைப் பற்றிய மற்றப் புஸ்தகங்கள் இருக்கின்றனவே; அவற்றைப் படித்தால் போதாதா?' என்றுகூடச் சிலசமயம் தோன்றுகிறது. ஆனாலும், மனசு அமைதி பெறவில்லை.

பழைய புஸ்தகங்களின் மகிமையே மகிமை!

# பழக்கத்துக்கு அடிமை

**எ**ங்கள் ஊர் காவேரிக்கரையில் உள்ளது. காவேரி யென்றால் கையகலம் வாய்க்கால் மாதிரி மாயூரத்தில் இருக்கிறதே அந்தக் காவேரி அல்ல! அகண்ட காவேரி. 'இரண்டு மைல் அகலமாக்கும்!' என்று நாங்கள் சொல்லிக் கொள்வோம். அளந்து பார்க்க யாரும் முன் வரமாட்டார்கள் என்ற தைரியம் எங்களுக்கு உண்டு. அப்படி அளந்துதான் பார்ப்போமென்று யாராவது புறப்பட்டால் ஒன்றரை மைலுக்குக் குறைச்சல் இல்லை என்பது மட்டும் நிச்சயம்.

இந்தமாதிரி அகண்ட காவேரியைப் படைத்த எங்கள் ஊரில் நிலவளத்திற்கும் நீர் வளத்திற்கும் கேட்க வேண்டுமா? இந்த ஊர்ப்பள்ளிக்கூடத்திற்கு ஓர் உபாத்தி யாயர் வந்தார். நல்ல ரஸிகர். சிநேகத்திற்குப் பாத்திர மானவர். அவர் சொந்த ஊர் சேலம் ஜில்லாவில் மேட்டுப் பாங்கான இடத்தில் இருப்பது. அவர் ஊரில் கிணற்றில் ஜலத்தைக் கண்ணால் பார்க்க முடியாது. கயிற்றை விட விடப் போய்க் கொண்டே இருக்கும்! பழக்கப் பட்டவர்களுக்குத்தான் தோண்டி ஜலமட்டத்தை அடைந்துவிட்டதென்ற நிதானம் தெரியும்.

இப்படி, பாதாள கங்கையையே தாகசாந்திக்கு நம்பி வாழும் ஜனங்கள் அடங்கிய ஊர் நண்பருடைய ஊர். அவர் எங்கள் ஊரையும், எங்கள் ஊருக்கு அழகு தரும் அகண்ட காவேரியையும் கண்ட பிற்பாடு, "சுவர்க்கலோக மென்று தனியாக இல்லை. இதுதான் சுவர்க்கம்" என்று தீர்மானித்திருப்பாரென்று நான் எண்ணியிருந்தேன். அவருடைய வாயாலே எங்கள் ஊரின் பெருமையைச்

சொல்லச் சொல்லிக் கேட்கவேண்டுமென்பது என் ஆசை.

ஒரு நாள் பேச்சுவாக்கில் எங்கள் ஊர்ப்பெருமைக்கு நானே தோற்றுவாய் செய்தேன். "எவ்வளவு உஷ்ணமாக இருக்கிறது, பார்த்தீர்களா? இந்தக் கோடை நாளிலும் காவேரியில் ஜலம் நிரம்ப ஓடுகிறது. காடையிறகு போன்ற நீரைப்பார்த்தால் ஒரு நாளைக்கு ஆறு வேளை ஸ்நானம் செய்யலாமென்று தோன்றவில்லையா? எங்கள் ஊரின் பெருமையை நீங்கள் நன்றாகத் தெரிந்துகொண் டிருப்பீர்கள்" என்று தொடங்கினேன்.

அவர் அப்பொழுது என்னவோ யோசித்துக்கொண் டிருந்தார். "என்ன யோசிக்கிறீர்கள்? இந்த ஊருக்கு நீங்கள் வந்தது உங்கள் புண்ணியந்தான் என்று நினைக் கிறீர்களல்லவா?" என்று மேலும் ஸ்தல புராணத்தைத் தொடரலானேன்.

"எல்லாம் சரிதான். என்ன இருந்தாலும் எங்கள் ஊர் வருமா? இந்த ஊரை விட்டு மாற்றிக்கொண்டு எங்கள் ஊருக்கே போகலாமென்று எண்ணி முயற்சி பண்ணியிருக்கிறேன். பலிக்கவேணும்."

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'நாம் நினைத்த தற்கு மாறாகவல்லவோ இவர் பேசுகிறார்! நிழலின் அருமை வெயிலிலே நின்றவர்களுக்குத் தெரியுமென்பார்கள். தண்ணீரில்லாக் காட்டிலே ஜலத்தை அளந்து குடிப்பவர் களுக்குத்தான் அகண்ட காவேரியின் மகிமை தெரியும் என்று நாம் நினைத்தோம். இவர் அப்படித் தெரிந்து கொண்டவராகத் தெரியவில்லையே!' என்று எண்ண லானேன்.

"உங்கள் ஊரில் ஜலக்கஷ்டமாயிற்றே. இதைக் காட்டிலும் அங்கே என்ன சௌகரியம்' அதிகம்?" என்று கேட்டேன்.

"எவ்வளவோ சௌகரியம் உண்டு. அங்கே உள்ள மனுஷர்கள் இங்கே ஏது? காலையில் எழுந்திருந்து

தோட்டத்துக் கிணற்றுக்குப் போய் அங்கே கவலையேற்றம் இறைக்கிறார்களே, அந்த வாய்க்காலிலே பல் தேய்த்துக் கொண்டால், அதுவும் வரும் வழியிலே இருக்கும் கருவேலங் குச்சியை ஒடித்துக்கொண்டு வந்து பல் தேய்த்தால், பல் எவ்வளவு முராமுரப்பாய் இருக்கும் தெரியுமா?"

"அந்தக் கருவேலங்குச்சி இங்கே கிடையாதா?"

"இங்கே தேடிக்கொண்டல்லவா போகவேண்டும்? அங்கே சாயங்கால வேளையில் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் காலாற நடக்கலாமே. இங்கே என்னடா என்றால் எங்கே பார்த்தாலும் வயற்காடு, சேறு; ஒரே ஜலம்!" என்று அடுக்கத் தொடங்கினார்.

'அட! இப்படியும் ஒரு பிராணி இருக்குமா? சேறு, ஜலம், வயல் இவைகளையெல்லாம் இவர் ஏன் இப்படி வெறுக்கிறார்?' என்று ஆச்சரியப்பட்டேன்.

உண்மை இதுதான்: யோசித்துப் பார்த்ததில் புலப்பட்டது. மனிதனுக்குப் பழக்கமான பொருளில் பற்று அதிகமாகப் போய்விடுகிறது; முதற்காட்சியில் அதில் உள்ள குறைகள் தோன்றினாலும் நாளடைவில் அந்தக் குறைகள் கண்ணுக்குத் தெரிவதே இல்லை. அது மாத்திரமல்ல. அந்தக் குறைகள் இல்லாத பொருள்களே குறைபாடு உடையனவாகத் தோன்றுகின்றன.

* * * *

சில கம்பெனிகளில் சுற்றுப் பிரயாணம் செய்யும் உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். மாசத்தில் பாதி நாளுக்கு மேல் ஊர் சுற்றுவதுதான் அவர்கள் வேலை. ரெயில் பிரயாணமென்றால் அவர்களுக்கு ஜலப்பிராயம். ரெயிலுக்கு டிக்கட் வாங்கிக் கொள்ள வேண்டியது, மேலே சங்கிலியால் தொங்கவிடப்பட்ட பலகையிலே ஏறிப் படுத்துக் கொள்ள வேண்டியது, சுகமாகக் குறட்டை விட்டுத் தூங்க வேண்டியது—இது தான் அவர்கள்

பிரயாண அநுபவம். எவ்வளவோ பேர்கள் எத்தனையோ விதமான தொனியில் பேசிக்கொண் டிருப்பார்கள்; ஒரே நெருக்கடியும் கூச்சலுமாக இருக்கும். கிழவனுடைய இருமல் சப்தமும், குழந்தையின் அழுகை ஒலியும் படுத்துக்கொண் டிருப்பவர்களோடு புதிதாக வந்தவர்கள் இடும் சண்டையும் பூசலும் அந்தச் சுகநித்திரைக்குப் பங்கம் விளைப்பதில்லை. வண்டி வேகமாகப் போகும் போது உண்டாகும் ராக்ஷஸ சப்தமும், உடம்பு முழு வதையும் ஆட்டிக் குலுக்கும் அவஸ்தையும் அந்தச் சுக புருஷருக்குத் தெரிவதில்லை. டிக்கட்டில்லாப் பிரயாணி களாகிய மூட்டைப் பூச்சியின் எச்சரிக்கையும் அவருக்கு ஒரு பொருட்டில்லை. அவர் படுக்கையை விரித்துப் படுத்தாரென்றால், இறங்க வேண்டிய இடம் வரும்போது கணக்காக எழுந்துவிடுவார். ஸப்பிர மஞ்சத்தின்மீது தூங்கும் அரசனுக்குக்கூட அந்த மாதிரித் தூக்கம் உண் டாவது மிகவும் அருமை. வண்டி ஓடும்போது அசை வதும், சத்தம் செய்வதும் அவருடைய தூக்கத்துக்குத் தடைகளல்ல; அவைகளே அவருக்குத் தூக்கம் வரப் பண்ணுகின்றன. ஆம்! தாய் தொட்டிலை அசைத்துத் தாலாட்டுப் பாடியல்லவா குழந்தையைத் தூங்கப் பண்ணுகிறாள்? அந்தமாதிரியே ரெயில்வண்டி அவரைத் தாலாட்டித் தூங்கச் செய்கிறது!

நிச்சயமாகச் சொல்கிறேன். இத்தகைய மனிதர் களுக்குத் தனியே மெத்தையின் மீது அமைதியான இடத்தில் தூக்கமே வராது; வந்தாலும் அடிக்கடி விழித்துக் கொள்ளும்படிதான் இருக்கும். மற்றவர் களுக்குத் தூக்கம் நன்றாக வருமிடத்தில் அவருக்கு வராது. இது நமக்கு வியப்பாக இருக்கிறது. பழக்கம் மனிதனை அப்படி ஆக்கிவிடுகிறது.

* * * *

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொன்ன கதை ஒன்று இங்கே ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு மீன்காரி மீன்

விற்கப் போனாளாம். ஒரு கூடை நிறைய மீன் கொண்டு போய் விற்றுவிட்டு மாலையில் வீடு திரும்பும்போது மிகவும் கடுமையான மழை பிடித்துக்கொண்டது. தன் வீட்டுக்கு அந்த மழையில் போவது முடியாத காரியமென்று தெரிந்து கொண்ட அவள் இடையிலே ஒரு வீட்டில் புகுந்து ராத்திரி அங்கேயே தங்கினாள். அங்கேயே படுத்துக்கொண்டாள். அது ஒரு பூக்காரன் வீடு. அவள் படுத்திருந்த இடம் புஷ்பக் கூடைகள் வைத்திருந்த இடம்; ஒரே பூ வாசனையாக இருந்தது. அந்த வாசனை மீன்காரிக்குச் சகிக்கவில்லை; தலைவலி வரும்போல் இருந்தது. தூக்கமே வரவில்லை. பிறகு என்ன செய்தாள் தெரியுமா? கொஞ்சம் தண்ணீர் வாங்கித் தன் மீன்கூடையிலே தெளித்து அதைத் தன் மூக்குக்கு அருகில் வைத்துக்கொண்டு தூங்க ஆரம்பித்தாள். மீன் நாற்றம் அவளுக்குச் சுகமான தூக்கத்தைக் கொடுத்தது.

இந்த விசித்திரமெல்லாம் மனிதன் பழக்கத்துக்கு அடிமையென்பதைக் காட்டுகின்றன. ஒரு வகையாரால் சகிக்கமுடியாத சில பழக்கங்களும், சில பொருள்களும் மற்றொரு வகையாருக்கு மிகவும் அவசியமாக இருக்கின்றன.

* * * *

இந்த உலகத்தில் மனிதன் குடும்பத்தோடு கஷ்டப்பட்டு வாழ்கிறானே, அவனுக்கு நிரந்தரமான சுகம் இருக்கிறதா? இல்லை. ஆனாலும் உலகத்தில் அவனுக்குச் சுகத்தைத் தருகிற பொருள்கள் எவ்வளவோ இருக்கத்தான் இருக்கின்றன. பெண்டாட்டியால் சுகம் இருக்கிறது; குழந்தைகளால் சுகம் இருக்கிறது. குழந்தைக்காக அவன் படும் சிரமமும் கவலையும் இவ்வளவு அவ்வளவு அல்ல. வேதம் முதல் பாரதியார் பாட்டுவரையில் வீட்டுக்கு விளக்கு குழந்தைகளென்று சொல்லுகின்றன. குழந்தைகளைப் பெற்றவருக்குக் குழந்தைகள்

இடத்தில் இருக்கும் அன்பைவிடக் குழந்தை பெறாமல் மலடாக இருப்பவர்களுக்குத்தான் குழந்தைகளின் அருமை தெரியுமென்று நினைக்கிறோம். அதுதான் நியாயமாகத் தோன்றுகிறது. ஆனால் ரகசியம் வேறாக இருக்கிறது. சொந்த அநுபவத்திலிருந்து சொல்லுகிறேன். குழந்தைகளைப் பெற்று அவர்களோடு அலைக் கொடுத்தால்தான் அவர்களைப் போற்றிப் பாதுகாத்து அன்பு செய்யும் இயல்பு உண்டாகும். குழந்தைகளிடம் அன்பு பாராட்டுவது பெரிதல்ல; குழந்தைகளிடம் உள்ள குறைபாடுகளையும் இன்பமாகக் கருதும் மனோபாவம் வேண்டும். குழந்தைக்குப் புழுதியில் அளைவதில் பிரியம் அதிகம். அதை அப்படியே ஆசையோடு எடுத்து வந்து துடைத்துவிடும் திறமை நமக்கு வேண்டும். நாம் இட்ட கோலத்தை அழித்து விட்டுக் கோலப்பொடியை இறைக்கும் விளையாட்டைக் கண்டு நாம் மகிழ வேண்டும். அதன் உடம்பு அழுக்கையும், இயற்கையிலே ஏற்படும் அசுத்தங்களையும் கண்டு அருவருப்புக் கொள்ளாமல் நீக்குவதற்குரிய மனம் வேண்டும். அதன் மழலைச் சொற்களை ரஸிக்கக் காது வேண்டும். இவ்வளவு ஆற்றலும் குழந்தைகளைப் பெற்றவர்களிடந்தான் காணலாம். ஒரு தாயினிடத்தில் அதிகமாகக் காணலாம்.

குழந்தை பெறாதவர்களுக்குக் குழந்தையுலகத்தின் ஒரு பாகத்தைக் கண்டு மகிழும் இயல்புதான் இருக்கும். குழந்தைக்குத் தலைவாரிப் பின்னிவிட்டுப் பூச்சூட்டி அழகிய ஆடை புனைந்துகொண்டு போய்விட்டால் குழந்தை பெறாதவர்கள் ஆசையோடு எடுத்து அணைத்துக் கொள்வார்கள். பழுக்காப் பொம்மையைக் குழந்தை எடுத்து அணைத்துக்கொள்வதில்லையா? அந்த மாதிரியான காரியந்தான் அது. அந்த அணைப்பிலே அவர்கள் அன்பு வெளிப்படவில்லை. குழந்தையின் கவர்ச்சியான தோற்றத்தின் பயன்தான் அந்த அணைப்பு. குழந்தை கண்ணிலே பீளையொழுக அழுதுகொண்டு அழுக்கோடு நின்று கொண்டிருக்கும் போது அந்த மகராஜியைக் கூப்பிட்டுக்

3579

காண்பியுங்கள்; "ஐயே! என்ன குழந்தை வேண்டியிருக்கிறது!" என்றுதான் அந்த அம்மாள் நினைப்பாள். அதுமட்டுமா? "இந்தமாதிரி குழந்தைகளைப் பெறுவதை விடக் குழந்தை பெருமலே இருப்பது நல்லது!" என்று தன்னைப்போன்ற மலட்டினத்துக்குப் பெருமை கொடுக்கக்கூட முற்படுகிருள். குழந்தையென்ருல் எப்போதும் தங்க விக்கிரகம்போல இருக்கவேண்டுமென்பது அவள் நினைவு. ஒரு தாயாக இருந்தால் அந்தக் குழந்தையின் கண்ணைத் துடைத்து உடம்பைத் துடைத்து எடுத்துக் கொள்வாள்.

குழந்தை பெருத பெண்மணிக்குக் குழந்தைகளின் விஷமச் செயலைப் பொறுக்கும் உள்ளம் இல்லை. குழந்தையின் அழுகையைக் கேட்கும் பொறுமை இல்லை. ஆனல் குழந்தை வேண்டுமென்ற ஆசைமட்டும் உள்ளத்துக்குள்ளே தீராக் குறையாக இருக்கும். என்ன செய்வது!

குழந்தையின் குறும்புகளை அநுபவிக்கப் பழக்கம் வேண்டும். அந்தப் பழக்கந்தான் அவற்றில் இன்பத்தை உண்டாக்கும்.

* * * *

ஒரு சங்கப்புலவர் இந்தப் பழக்கத்தின் சக்தியை உச்ச நிலையில் வைத்துக் காட்டுகிருர்:

"பழகிய பகையும் பிரிவின் ஞதே!" என்கிருர்.

தினந்தோறும் சண்டையிட்டு நமக்குத் தொந்தரவை உண்டாக்கும் எதிர் வீட்டுக்காரன் வேறு ஊருக்கோ, வேறு உலகத்துக்கோ போய்விடுகிருன்; சில சமயங்களில், "காலையில் எழுந்திருந்தால் ஏதாவது தொந்தரவு கொடுத்துக் கொண்டிருப்பான். இப்போது அவன் இல்லாமல் வெறிச்சென்றிருக்கிறது!" என்று நமக்குத் தோன்றுகிறது. அவன் பகைவனுனலும், அவனுடைய பகை நமக்குப் பழகிவிட்டது. தினந்தோறும் அவன்

தொந்தரவு கொடுப்பதும், அதை எதிர்ப்பதும் நம்முடைய வாழ்க்கைநியதியைப்போல ஆகிவிட்டன. இப்பொழுது திடீரென்று அவை நின்றுவிட்டன. அவன் புது இடத்துக்குப் போயிருக்கிறான்; நமக்கும் புது இடத்துக்கு வந்தது போலத்தான் தோற்றுகிறது. வாழ்க்கையின் ஒரு பகுதி மாறவேண்டி யிருக்கிறது. காலையில் எதிர் வீட்டுக்காரனோடு சண்டை என்ற திட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டி நேர்கிறது. முதலில் அது கஷ்டமாகத்தான் இருக்கும். அவனுடைய சண்டைக்கு எதிர்ச் சண்டை போடும் ஸ்வாரஸ்யத்தை நாம் இழந்து விடுகிறோம். அதனால்தான், "பழகிய பகையும் பிரிவு இன்னாதே" என்று அவர் சொல்லுகிறார்.

பிறவியே இந்தப் பழக்கத்தின் விளைவென்று சமய நூலார் சொல்கிறார்கள். வாஸனைமலம் அல்லது பிறவி தோறும் வந்த பழக்கந்தான் நம்மை அடுத்த பிறவிக்குத் தயார் செய்கிறது என்கிறார்கள்.

இல்லாவிட்டால் குழந்தைக்குப் பாலைக் குடிக்க வேண்டுமென்று தெரியுமா? மீன் குஞ்சுக்கு நீந்த வேண்டுமென்று இயற்கையிலே உணர்வு உண்டாகுமா? அவை முன்னைப் பழக்கத்தின் வாசனை.

இந்தக் கட்டுரை இவ்வளவு நீண்டு விட்டதே! இதையே பாருங்கள்; இதுவும் பழக்க தோஷந்தானே?

## புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| **பெண் தெய்வம்** | | |
| பி. எம். கண்ணன் | .. | 4 0 |
| **காஞ்சனை** | | |
| 'புதுமைப் பித்தன்' | .. | 2 0 |
| **காருங் கதிரும்** | | |
| ரவீந்திரநாத் டாகுர் | .. | 2 0 |
| **மக்கள் மலர்ச்சி** | | |
| 'குமுதினி' | .. | 1 0 |
| **புயலும் படகும்** | | |
| வி. ஸ. காண்டேகர் | .. | 2 8 |
| **ஸஞ்சீவினி** | | |
| 'ஸோபான்' | | (அச்சில்) |
| **காவியமும் ஓவியமும்** | | |
| கி. வா. ஜகந்நாதன் | | (அச்சில்) |
| **மீண்டும் வாழ்ந்தால்...?** | | |
| மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் | | (அச்சில்) |

**மானேஜர் — கலைமகள் — மயிலாப்பூர்**